A-PDF Merger DEMO : Purchase from www.A-PDF.com to remove the watermark

இத்துடன் புகழ்பெற்ற எழுத்தாளர்கள், பன்மொழிப் புலவர் அப்பாதுரையார், 'ஜீவா' நாரண துரைக்கண்ணன், பெரும் புகழ்பெற்ற மேதை முனைவர் சிலம்பொலி செல்லப்பன் போன்ற ஏராளமான புகழ்பெற்ற எழுத்தாளர்களின் நூல்களையும் வெளியிட்டிருக்கிறோம் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய புகழ் மிக்க எழுத்தாளர்கள் ராஜேஷ்குமார், பட்டுக்கோட்டை பிரபாகர், சுபா ஆகியவர்களின் நூல்களையும் வெளியிட்டு வருகிறோம்.

சிறுவர்களுக்கு பயன்படும்படி 500க்கும் அதிகமான அற்புதமான நூல்களை வெளியிட்டுப் பல பரிசுகளும் பெற்றுப் புகழ் சேர்த்திருக்கிறோம்.

ஏராளமான சங்க இலக்கிய ஆய்வு நூல்கள், வாழ்வு முன்னேற்ற நூல்கள், தெய்வீக நூல்கள், சட்ட நூல்கள் எனப் பலதரப்பட்ட வகையிலும் ஏராளமான நூல்களை வெளியிட்டிருக்கிறோம்.

அந்த வகையில் அருணோதயம் பொன்விழா ஆண்டு தொடக்க வெளியீடுகளாக 10 நூல்களை இன்று கொண்டு வருகிறோம். அத்தனையும் ஒவ்வொரு வகையில் தனிச்சிறப்பு உடையன என்பது குறிப்பிடத் தக்கது.

இன்னும் பொன்விழா ஆண்டு நிறைவு வெளியீடுகளாக 25க்கும் அதிகமான நூல்களை வெளியிடத் திட்டமிட்டுள்ளோம்.

அனைத்துக்கும் உங்களின் பேராதரவும் ஒத்துழைப்பும் தான் காரணமெனக் குறிப்பிட விரும்புகிறோம். மேலும், மேலும் உங்கள் ஆதரவை வேண்டுகிறோம்.

**அருணோதயம் அருணன்.**

# பொன் மகள் வந்தாள்




மற்றவர்கள் ஒத்துக் கொள்வார்களோ, இல்லையோ, அன்றையக் காலைப் பொழுது வெகு அழகாக விடிந்திருப்பது போல, சுகவனேசனுக்குத் தோன்றியது!

அல்லது, அவனுக்குத்தான், பலப்பல ஆண்டுகளுக்குப் பிறகு, காலை விடியலை ரசிக்கும் மனநிலை ஏற்பட்டிருக்கிறதா?

அப்படிச் சொன்னாலும், அதில் தப்பில்லை!

ஏனெனில், ஏறத்தாழ எட்டு ஆண்டுகளாக, ரசனை என்ற உணர்ச்சி அவனுக்கு அடியோடு மரத்துப் போயிருந்தது எனலாம். விழித்திருந்த நேரத்தில் எல்லாம், உழைப்பு, உழைப்பு என்று, உழைப்பு தவிர வேறு எண்ணமே இல்லாதிருந்தானே! திருப்தி என்றால், அதுஒரு வேலையை நல்லபடியாக முடித்தோம் என்பதில் தான். வேலையைத் தவிர, வேறு விருப்பமே தோன்றியது இல்லை!

அவனுடைய தாயாருக்குக் கூட, அது பற்றி, மிகவும் வருத்தம்தான்!

'சோறு தண்ணீரைக் கூடப் பாராமல், அப்படி எதற்காகச் சம்பாதிப்பு?' என்று அலுத்துக் கொள்வாள்!

சில சமயம் எரிச்சல் படுவதும் உண்டு.

"உனக்குப் பிடிக்குமே என்று, தக்காளி தோலுரித்துப் போட்ட விரால் மீன் குழம்பு, நானே வைத்தேன். இங்கே, மற்ற தொழிலாளர்களோடு சாப்பிட்டு விட்டேன் என்கிறாயே! இவ்வளவு பாடுபட்டுச் செய்தேனே என்பதே இல்லையே! வரவர, உனக்கு, அம்மா என்கிற பாசம், மரியாதை எல்லாம் போய்விட்டது!" என்று கூட, சுந்தரவல்லி குறை கூறுவது உண்டு!

"இங்கே, வீடு என்று ஒன்று இருக்கிற நினைவு உனக்குக் கொஞ்சமாவது இருக்கிறதா? ராத்திரி, நேரத்தில் பிள்ளைகள் வீட்டுக்குத் திரும்பி வராவிட்டால், பெற்றவளால், பொட்டுக் கண் மூட முடியுமா? என்னைப் பற்றிய பிரியமோ, அக்கறையோ இல்லாமல் ராப்பகலாய், வேலை வேலை என்று சாமியார் மாதிரி, 'சைட்'டிலேயே கிடக்கிறாயே! என்ன மனிதன் நீ?" என்று கோபப்படுவதும் அவ்வப்போது நடப்பதுதான்!

அப்போதெல்லாம், சுகவனேசனுக்குச் சிறு வலி கலந்த சிரிப்புதான் வரும்!

அவனுக்கா, பாசம், பிரியம் எல்லாம் இல்லாமல் போய் விட்டது? பெற்றவளிடம் பாசமும் பிரியமும் மிகுதியாக இருப்பதால்தானே, அவன், தொழிலைத் தவிர, மற்றதையெல்லாம் மறந்திருப்பதே! அவனைப் பெற்றவளிடமும், அவனை அடுத்துப் பிறந்த, அவனுடைய தம்பியிடமும்!

அதைப் புரிந்து கொள்ளும் அளவு பெற்றவளுக்கு யோசிக்கத் தெரிவது இல்லை என்பதோடு, அதைச் சொல்லிப் புரிய வைக்க, சுகவனேசனும் விரும்பவில்லை!

புரிந்துகொண்டால், 'நமக்காக, மகன் ஊண், உறக்கம் இல்லாமல் இப்படிக் கஷ்டப்படுகிறானே' என்று வருந்த நேரும் அல்லவா? அத்தோடு, நம்மால் அல்லவா, மகனுக்கு இந்த நிலை என்றும் வருந்த நேரும்!

அப்புறம், தாயையும், தம்பியையும் இதுவரை இருந்த நிலை குறையாது, மகிழ்ச்சியோடு வாழ வைக்க வேண்டும்



என்பதற்காகவே இப்படி உழைக்கும், அவனது அடிப்படை நோக்கமே வீணாகிப் போகுமே!

எனவே, 'போற்றுவோர் போற்றலும், தூற்றுவோர் தூற்றலும், போகட்டும் கண்ணனுக்கே.' என்று, கண்ணபிரான் ஏற்றுக் கொண்டது போல, லேசாகச் சிரித்துக் கொண்டே நகர்ந்து விடுவான்!

மற்ற வகையில் எப்படியோ? சமையலில் சுந்தரவல்லியின் திறமை, சொந்தக்காரர்கள் இடையே, மிகவும் பிரசித்தம்!

சித்தப்பா, பெரியப்பாக்களுடைய பிள்ளைகளை விட, சுகவனேசனும், அவன் தம்பியும் இரண்டு பிடி உயரமாக இருப்பதன் காரணமே, தாயின் சமையல் ருசியினால், அவர்கள் இருவருமே சிறு வயதில் இருந்தே, இரண்டு பிடி அதிகமாக உண்டு வளர்ந்ததால்தான் என்பது சுகவனேசனின் அபிப்பிராயம்!

அப்படிப்பட்ட சுவையான உணவை, அதுவும் ஆசை மகனுக்காக என்று, தனிப்படத் தயாரித்ததை உண்ணாமல், மற்ற தொழிலாளர்களுக்கு எடுத்து வந்த ஹோட்டல் எடுப்புச் சாப்பாட்டைச் சாப்பிட, அவனுக்கு மட்டும் ஆசையா?

அல்லது, இயற்கையான உடல் சோர்வை அலட்சியப் படுத்தி, தொழிலாளர்களை உற்சாகப்படுத்திக் கொண்டு, அவர்கள் கூடவே நிற்பதும், அவனுக்கும்தான் சுகமாக இருக்குமா?

தொழிலாளர்களுக்காவது, சுழற்சி முறையில் ஓய்வு கொடுத்து விடுவான்! ஆனால், அவனுக்கு, அவ்வப்போது சுவரில் சாய்ந்து நின்றபடியே, கோழித் தூக்கம் போலக் கண்மூடி எடுத்துக் கொள்ளும் சிறு ஓய்வு தவிர, ஒன்றுமிராது!

அது பற்றி, அவனுக்கு அதிக நினைவும் இராது!

அப்படியே நினைவு வந்தாலும், 'இருபதுகளில்தானே இருக்கிறோம். கல்லைத் தின்று செமிக்கிற வயது என்று; எந்தக்

காலத்திலேயோ எழுதிக்கூட வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.! எனவே, அவ்வப்போது கொஞ்சம் கவனித்துக் கொண்டாலே, உடம்பு நன்றாகத்தான் இருக்கும்!' என்று தனக்குத் தானே, கூறிக் கொள்ளுவான்!

காரணம், அவனது கட்டுமான தொழிலின் தன்மை! பில்லர், லின்டல், கூரை என்று காங்கிரீட் வேலை செய்யும் போது, இடையில் நிறுத்த முடியாது! நிறுத்தவும் கூடாது. இடைவிடாமல். எவ்வளவு வேகமாகக் கலவையைப் போட்டுக் குத்திக் குத்தி, இடைவெளியில்லாமல் நிரப்பி, நிரவுகிறோமோ, அவ்வளவுக்குத் தான் கட்டடமும் உறுதியாக நிலைத்து நிற்கும்!

'உடையவன் பார்க்காவிட்டால், ஒரு முழம் கட்டை.' என்பது போல, அவன் நேரிடையாகப் பார்க்காவிட்டால், இந்த வேலையைச் செய்யும் பணியாளர்களுக்கும் அதில் அக்கறை குறைந்து விடாதா?

கான்கிரீட் வேலை மட்டுமல்ல. கட்டடத் தொழிலில் எப்போதுமே, கவனம் தேவை. சுவர் எழுப்பும் போது, செங்கல்களுக்கு இடையே சரியாக, சிமெண்ட் கலவை வைப்பது, செங்கல்களை நனைப்பது, பட்டி பார்த்து ஒழுங்காகக் கட்டுவது... முதலில் சிமெண்டும், மணலும் சரியான விகிதத்தில் கலப்பதிலிருந்து, ஒவ்வொரு நிலையிலும், சரி பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்!

இல்லாவிட்டால் கட்டடம் நன்றாயிராது!

கட்டிக் கொடுக்கிற கட்டிடம் நன்றாக இல்லாது போனால், அப்புறம் அவனை நம்பி, யார். இந்த வேலை கொடுப்பார்கள்? அவனது, 'சுகன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' என்ன ஆகும்?

அது, வளர்ச்சியுற்று, வருமானத்தை அள்ளித் தராவிட்டால், தாயும், தம்பியும், பழைய நிலைக்குச் சற்றும் குறைவில்லாது வாழ்வதோடு, மேலும் உயர்வு அடைவது ஏது?

ஆனால், இதையெல்லாம் வெளிப்படையாகத் தாயிடம் சொல்லவும், அவனுக்கு மனம் வராது!



எல்லாம் உங்களுக்காகத்தான்! உங்களுக்காகவும், தம்பிக்காகவும்தான், என்று சொன்னால், தாய் மனம் துன்புறாதா? ரசித்துச் சாப்பிட்டால், இருப்பதையெல்லாம், கணவருக்கும், பிள்ளைகளுக்கும் வைத்துக் கொடுத்துவிட்டு, வெறும் தண்ணீரைத் திருப்தியுடனேயே குடித்துவிட்டுப் படுக்கிற ஜாதி, சுந்தரவல்லி!

அவளிடம் போய், இப்படிக் காரணத்தைச் சொன்னால் தாங்கவே மாட்டாள்! அதனால், வெறுமனே முறுவலிப்பதோடு, நிறுத்திக் கொள்வான் சுகன்!

ஆனால், தன் உடம்பை அடியோடு கவனிக்காமலும் இருந்துவிட மாட்டான்! எப்படியும், சுவரை வைத்துத்தானே, சித்திரம் எழுத முடியும்? அவன் உடம்பு சரியில்லாமல் படுத்து விட்டால், உள்ளதும், அழிந்து விடாதா? அதனால். நேரம் கிடைக்கும்போது, உடல் பயிற்சி செய்வான்! அதற்கு வழியில்லையானால், வேலையின் போது, நிறைய நடப்பான்! எடுப்புச் சாப்பாடோ, வீட்டுச் சாப்பாடோ, வேளைக்குச் சாப்பிட்டுவிடுவான்!

அவனால் முடிந்தது அதுதான்!

வேறென்ன செய்வது?

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு, சுகவனேசனுடைய தந்தை விபத்தில் இறந்தபோது, அவனுடைய பெரியப்பா, சித்தப்பாக்கள் சேர்ந்து நீட்டிய பத்திரத்தில் எல்லாம் அழகாக, சுந்தரவல்லி என்று அம்மா கையெழுத்திட்டுக் கொடுத்திராவிட்டால், அவனும் ஓரளவேனும் 'சோறு தண்ணி'யை நன்கு ரசித்தே உண்டிருப்பான்!

'நேரத்துக்கு வீடு திரும்பி,' நன்றாகத் தூங்கியும் இருப்பான்!

வளர்ந்த நிலையில் இருந்த தொழிலை, மேற்பார்வை பார்ப்பதோடு, நிம்மதியாகவும் இருந்திருப்பான்!

ஆனால், அம்மா கையெழுத்துப் போட்டிருந்தாளே! மைத்துனர்களை நம்பிப் படித்துப் பாராமலே, பத்திரத்தின்

காலத்திலேயோ எழுதிக்கூட வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.! எனவே, அவ்வப்போது கொஞ்சம் கவனித்துக் கொண்டாலே, உடம்பு நன்றாகத்தான் இருக்கும்!' என்று தனக்குத் தானே, கூறிக் கொள்ளுவான்!

காரணம், அவனது கட்டுமான தொழிலின் தன்மை! பில்லர், லின்டல், கூரை என்று காங்கிரீட் வேலை செய்யும் போது, இடையில் நிறுத்த முடியாது! நிறுத்தவும் கூடாது. இடைவிடாமல், எவ்வளவு வேகமாகக் கலவையைப் போட்டுக் குத்திக் குத்தி, இடைவெளியில்லாமல் நிரப்பி, நிரவுகிறோமோ, அவ்வளவுக்குத் தான் கட்டடமும் உறுதியாக நிலைத்து நிற்கும்!

'உடையவன் பார்க்காவிட்டால், ஒரு முழம் கட்டை' என்பது போல, அவன் நேரிடையாகப் பார்க்காவிட்டால், இந்த வேலையைச் செய்யும் பணியாளர்களுக்கும் அதில் அக்கறை குறைந்து விடாதா?

கான்கிரீட் வேலை மட்டுமல்ல, கட்டடத் தொழிலில் எப்போதுமே, கவனம் தேவை. சுவர் எழுப்பும் போது, செங்கல்களுக்கு இடையே சரியாக, சிமெண்ட் கலவை வைப்பது, செங்கல்களை நனைப்பது, பட்டி பார்த்து ஒழுங்காகக் கட்டுவது... முதலில் சிமெண்டும், மணலும் சரியான விகிதத்தில் கலப்பதிலிருந்து, ஒவ்வொரு நிலையிலும், சரி பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்!

இல்லாவிட்டால் கட்டடம் நன்றாயிராது!

கட்டிக் கொடுக்கிற கட்டிடம் நன்றாக இல்லாது போனால், அப்புறம் அவனை நம்பி, யார், இந்த வேலை கொடுப்பார்கள்? அவனது, 'சுகன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' என்ன ஆகும்?

அது, வளர்ச்சியுற்று, வருமானத்தை அள்ளித் தராவிட்டால், தாயும், தம்பியும், பழைய நிலைக்குச் சற்றும் குறைவில்லாது வாழ்வதோடு, மேலும் உயர்வு அடைவது ஏது?

ஆனால், இதையெல்லாம் வெளிப்படையாகத் தாயிடம் சொல்லவும், அவனுக்கு மனம் வராது!



எல்லாம் உங்களுக்காகத்தான்! உங்களுக்காகவும், தம்பிக்காகவும்தான், என்று சொன்னால், தாய் மனம் துன்புறாதா? ரசித்துச் சாப்பிட்டால், இருப்பதையெல்லாம், கணவருக்கும், பிள்ளைகளுக்கும் வைத்துக் கொடுத்துவிட்டு, வெறும் தண்ணீரைத் திருப்தியுடனேயே குடித்துவிட்டுப் படுக்கிற ஜாதி, சுந்தரவல்லி!

அவளிடம் போய், இப்படிக் காரணத்தைச் சொன்னால் தாங்கவே மாட்டாள்! அதனால், வெறுமனே முறுவலிப்பதோடு, நிறுத்திக் கொள்வான் சுகன்!

ஆனால், தன் உடம்பை அடியோடு கவனிக்காமலும் இருந்துவிட மாட்டான்! எப்படியும், சுவரை வைத்துத்தானே, சித்திரம் எழுத முடியும்? அவன் உடம்பு சரியில்லாமல் படுத்து விட்டால், உள்ளதும், அழிந்து விடாதா? அதனால், நேரம் கிடைக்கும்போது, உடல் பயிற்சி செய்வான்! அதற்கு வழியில்லையானால், வேலையின் போது, நிறைய நடப்பான்! எடுப்புச் சாப்பாடோ, வீட்டுச் சாப்பாடோ, வேளைக்குச் சாப்பிட்டுவிடுவான்!

அவனால் முடிந்தது அதுதான்!

வேறென்ன செய்வது?

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு, சுகவனேசனுடைய தந்தை விபத்தில் இறந்தபோது, அவனுடைய பெரியப்பா, சித்தப்பாக்கள் சேர்ந்து நீட்டிய பத்திரத்தில் எல்லாம் அழகாக, சுந்தரவல்லி என்று அம்மா கையெழுத்திட்டுக் கொடுத்திரா விட்டால், அவனும் ஓரளவேனும் 'சோறு தண்ணி'யை நன்கு ரசித்தே உண்டிருப்பான்!

'நேரத்துக்கு வீடு திரும்பி,' நன்றாகத் தூங்கியும் இருப்பான்!

வளர்ந்த நிலையில் இருந்த தொழிலை, மேற்பார்வை பார்ப்பதோடு, நிம்மதியாகவும் இருந்திருப்பான்!

ஆனால், அம்மா கையெழுத்துப் போட்டிருந்தாளே! மைத்துனர்களை நம்பிப் படித்துப் பாராமலே, பத்திரத்தின்

ஒவ்வொரு பக்கத்திலும் தெளிவாகக் கையெழுத்து இட்டிருந்தாள்!

ஐம்பது ரூபாய்க் கட்டுகளில், வெறும் ஐந்து லட்சம் ரூபாயைக் கொண்டு வந்து காட்டியதும், கணவனை இழந்து, கதி கலங்கி நின்றிருந்த சுந்தரவல்லிக்கு, ஏதோ பெரும் பணமாகத் தோன்றியது போலும்!

சுந்தரவல்லிக்குப் பணக் கணக்கு அவ்வளவாகத் தெரியாது என்று, ஜெகதீசன், தன் வரவு செலவு பற்றி, மனைவியிடம் சொன்னதும் இல்லை, யாராவது கண்ணைக் கசக்கிக் கொண்டு வந்து நின்றால் அள்ளிக் கொடுத்து விடுகிறாள் என்று, வீட்டில் அதிகமாகப் பணத்தை வைத்துக் கொண்டதும் இல்லை!

அது, அவனுடைய தாத்தா தொடங்கி வைத்து, லாபகரமாக நடத்திய தொழில்! அவருக்குப் பின், அவருடைய நான்கு பிள்ளைகளும், அதை மேலும் நல்லபடியாகவே வளர்த்து வந்தனர்.

பொதுவாக, நாலு குடும்பங்களும் வசதியோடு வாழ்ந்தாலும், மொத்தப் பணம் தொழிலில்தான் கிடந்தது! ‘சுகவனம் பில்டர்ஸ்’ நிறுவனத்தின் பெயரில்தான் பாங்க்கிலும் சேர்ந்து கொண்டிருந்தது! தாராளமாகச் செலவழித்தது போகத் தொழிலிலும் முதலீடு செய்து வந்தனர்! ஆண்டு தோறும் லாபத்தில் ஒரு பங்கை எடுத்து, வீட்டுப் பெண்களுக்கு நகைகள் செய்தார்கள்! கார், பங்களா என்று செழிப்பான வாழ்க்கை!

ஜெகதீசனுக்கு மட்டும் இரண்டே பையன்கள்.

மற்றவர்களுக்கு, மூன்று நான்கு என்று பிள்ளைகள் இருந்தார்கள்! ஆனால் அவர்களுக்கு முதலில் பிறந்தவர்கள் பெண்களாக இருந்ததால், குடும்பத்தின் மூத்த ஆண்வாரிசு, சுகவனேசனாக இருந்தான்.

பிள்ளைகள் விருப்பப்பட்ட படிப்பு, ஆடை, அணிமணிகள், உல்லாசப் பயணங்கள் எதற்கும் எந்தத் தகப்பனும், தடை சொன்னது கிடையாது!



விழாக் காலங்களில் எல்லோரும் சேர்ந்து கொள்வார்கள்.

எல்லோருமாகத் தீபாவளிப் பட்டாசு வெடிப்பதைப் பார்க்க வேண்டும்! சிவகாசித் தயாரிப்பில் பாதியை வாங்கிக் கொளுத்துகிறார்களோ என்று தோன்றும்.

இரண்டு பெண்களின் திருமணங்கள், வெகு சிறப்பாக நடந்தன.

எல்லாச் செலவும், பொதுவில் ஜாம்ஜாமென்று நடந்தது!

இந்தக் கோலாகலங்களை எல்லாம், விபத்தில் ஜெகதீசன் இறப்போடு, சேர்ந்து மறைந்து போய்விட்டது!

சுகவனேசன் அப்போது பிலானியில், கட்டடக்கலை பயின்று கொண்டிருந்தான்.

லீவில், சில நண்பர்களோடு, ராஜஸ்தானில் உள்ள பல்வேறு அரண்மனைகளின் அமைப்புகளை, ரசித்ததோடு, ஆராய்ச்சியிலும் ஆவலாக ஈடுபட்டிருந்த சமயம்!

ஒரு வழியாக அவனைக் கண்டு பிடித்து, அழைத்து வருமுன், இங்கே எல்லாக் காரியங்களும் முடிந்து விட்டிருந்தன!

மூன்று அப்பாமாரும் உட்கார்ந்து யோசித்ததில், இனி, ஜெகதீசனுடைய பிரதிநிதியாக சுகவனேசன் வருவானோ? அந்த சின்னப் பயல் தங்களுக்குச் சமதையாக உட்கார்ந்து, கணக்கு வழக்கைப் பார்ப்பானோ, கேட்பானோ என்று யோசித்து, அது பிடிக்காமல், தொழிலில் தங்கள் பங்கை விற்று, கடைசித் தவணையாக, இந்த ஐந்து லட்சத்தையும் வாங்கிக் கொண்டதாக எழுதி, சுந்தரவல்லியின் கையெழுத்தையும் அவர்கள் வாங்கியிருந்தனர்!

தந்தையின் பங்குக்காக என்று, சுகன் அவர்களிடம் போகவில்லை! ஆனால் தந்தை இல்லாதபோது, பெரியவர்களான பெரியப்பா, சித்தப்பாக்களின் உழைப்பில், தன் குடும்பம் உட்கார்ந்து சாப்பிடக் கூடாது என்ற எண்ணத்தில் தான், படிப்பை நிறுத்திவிட்டு, அவனுடைய தந்தையின் மறைவினால்

அதிகப்பட்டு விட்ட அவர்களது அலுவலில் பங்கேற்கவா என்று கேட்கவே, அவன் அலுவலகத்துக்குச் சென்றான்.

'பார்த்தாயா' என்பது போல, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு, 'பங்கைப் பிரித்து விட்டோமே., உன் அம்மாவிடம் பணத்தைக் கொடுத்து முடித்து விட்டோமே, அவள் விருப்பப்படி, உன்னைப் படிக்க வைப்பதோ, வெளி வேலைக்கு அனுப்புவதோ, உன் அம்மாவிடமே கலந்து பேசிக்கொள்.' என்றபோதே, அவனுக்கு அதிர்ச்சிதான்!

வெளி வேலைக்கு அனுப்புவதா? அப்படியென்றால்? குடும்பத் தொழிலில், அவனுக்கு இடமில்லை என்கிறார்களா? எப்படி?

ஒருவேளை அப்படியே இருந்தால், பெரியவர்களின் முகத்துக்கு நேரே, எதையும் கேட்டு, உறவை முறிக்க மனமற்று, வீட்டுக்குச் சென்று, விஷயத்தை முழுமையாக ஆராய்ந்த போது, அவனது அதிர்ச்சி பேரதிர்ச்சி ஆயிற்று!

பலகோடி ரூபாய் பெறுமானமுள்ள தொழிலில், தந்தையின் பங்கு ஐந்தே லட்சம் தானா?

எப்படிக் கணக்கிட்டார்கள் என்று யோசிக்கும்போதே, அந்தக் 'கடைசித் தவணை' என்ற சொல் உறுத்திற்று! அப்படியானால், முன்னரே ஏதோ கொடுத்ததாகவும், இது கணக்கு முடித்துக் கொடுக்கப்படும் தொகை என்றும் அல்லவா, அர்த்தம்!

தந்தைக்கு நிகராகவே நினைத்து, அன்பு காட்டி, அன்பைப் பெற்று வளர்ந்த மனம், பெரியவர்களைக் குற்றவாளிகளாக்கத் தயங்கியது, மறுத்தது!

"வேறு ஏதேனும் கொடுத்தார்களா, அம்மா?" என்று மீண்டும் மீண்டும் விசாரித்தான்!

"பெட்டி நிறைய, இவ்வளவு பணமும் தந்து, இன்னமும் கொடுப்பார்களா? உனக்குப் பேராசைதான், சுகன் பையா!" என்ற தாயாரின் பேதமையைக் கண்டு வருந்தினான்!



வருந்திப் பயன் இல்லை என்று உணர்ந்து, மேலே யோசிக்கத் தொடங்கினான்!

இந்த ஐந்து லட்சம், எதற்கும் உதவாது! இந்தத் தொழிலுக்கு முதலாக்கப் பற்றாது! சும்மா வைத்திருந்தாலும், 'தின்று தீர்த்தால், குன்றும் மாளும்' என்பது போல, காற்றில் இட்ட கற்பூரம் போல, விரைவிலேயே, காலியாகிப் போகும்! அப்புறம்....

நினைக்கவே பயமாக இருந்தது, அவனுக்கு!

மின்சாரம் இல்லாததால், ஏசி போட முடியாமல் தூக்கம் கெட்டு விட்டதாக மறுநாள் புலம்பிய தாயார், வேறு மாதிரி சிந்திக்க வைத்தாள்!

ஹிந்தி பாட்டை முணுமுணுத்தபடி, கிரிக்கெட் மட்டையைத் தூக்கிக் கொண்டு, 'நைக்' ஷூ அணிந்து, 'லோகல் மாட்ச்'க்குக் கிளம்பிய தம்பியும்!

இருவருக்குமே நிலைமை புரியவில்லை! தம்பிக்குப் புரிந்து கொள்ளும் வயது இல்லை! தாயாருக்குப் புரிந்து கொள்ளும் சக்தி இல்லாததோடு, புரிந்தால் தாங்கிக் கொள்ளவும் மாட்டார்கள்!

அதைவிடப் பாரத்தை தனியே தாங்கி, தாயையும் தம்பியையும் இப்படியே நல்லபடியாக வாழ வைக்க, அவனால் முடியாதா, என்ன?

தந்தையும் மற்றோருமாக நடத்தி வந்த கட்டுமானத் தொழிலைத் தானும் தொடங்கி நடத்துவது என்று, அவன் முடிவு செய்தது, அப்போதுதான்!

ஒரு காலத்தில், அவனுடைய தாத்தா, இதே போலத் தானே, தொடங்கினார்? அவர் பெற்ற வெற்றியை, அவரையே உரித்து வைத்தது போல என்று ஒரு காலத்தில் எல்லோரும் கொண்டாடிய இந்தப் பேரனால், ஏன் முடியாது?



தந்தை சுமந்த பாரத்தைத் தான் ஏற்பது என்று முடிவு செய்த சுகவனேசன், அதற்கான வேலையில், உடனேயே இறங்கினான்!

அவனுக்கு, முதலாவது பெரும் பிரச்சினை, முதலீட்டுத் தொகை!

தாயாரிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு, குடும்பத்துப் பெரும் தலைகள் கொடுத்த பணம், அவனது திட்டம் எதற்கும் போதாது! இந்த ஐந்து லட்சத்துக்குள் அடங்கக் கூடியதாக சின்ன அளவில் வேலை செய்தால், வருமானமும், மிகவும் குறைவாகவே இருக்கும்!

தாயாரின் ஏசி, தம்பியின் ஷேவுக்கெல்லாம் கட்டி வராது!

நல்ல வேளையாக, வீடு கார் எதையும் பெரியப்பா, சித்தப்பாக்கள் பிடுங்க நினைக்கவில்லை! ஒரு வேளை, அது ரொம்பவும் அதிகப்படியாகத் தோன்றி, நாலுபேர் பேசும்படி ஆகிவிடும் என்று விட்டுவிட்டார்களோ?

அல்லது... தொழிலுக்குள் அவர்களுக்குச் சமதையாக, அடுத்த தலைமுறையில் ஒருவன், அதுவும் அவர்கள் மூவரில் யாருடைய பிள்ளையும் அல்லாத இன்னொருவன் நுழைவது தான், அவர்களுக்குப் பிடிக்க வில்லையோ என்று, கிட்டத்தட்டச் சரியாகவே கணித்தான் சுகவனேசன்!

உடன் பிறந்தவரான ஜெகதீசன் உயிருடன் இருந்திருந்தால், படிப்பு முடிந்தும், சுகவனேசன் தொழிலில் பங்கேற்பது, இயல்பாக இருந்திருக்கும்! ஆனால், சொந்த ரத்தம் கூட இல்லை



எனும்போது, சுகவனேசன், சுந்தரவல்லியுடைய பிள்ளையாகிப் போனான்!

முதல் பேரனாகத் தாத்தா பெயரை வைத்திருந்தும், அவனை அன்னியனாக நினைத்து ஒதுக்கிவிட்டார்கள்!

அவனும், இருபது வயதுகூட நிரம்பாத, சிறு பிள்ளை தானே?

தந்தையின் இழப்பு பெரிதாகத் தாக்க, முதலில், நெஞ்சை அடைத்துக் கொண்டு, 'ஹோ' என்று அழுகை வந்தது. தாயையும், தம்பியையும் நினைத்து, அந்தக் கண்ணீரை அடக்கினான்!

அவனே அழுதால், அவர்களைச் சந்தோஷப்படுத்துவது, யார்?

அந்தப் பொறுப்பு, அவனது என்றால், அழ முடியாது! அழக் கூடாது! அழுவதில் வீணாக்க, அவனுக்கு அவகாசமோ, வலுவோ கிடையாது!

இது, சிந்திக்க வேண்டிய நேரம்! சிந்தித்து, செயல் பட வேண்டிய நேரம்! கண்ணீரைச் சிந்துகிற தருணம் அல்ல!

சோர்வையும் வருத்தத்தையும் அகற்றிக் கொண்டு, அதுவரை படித்த படிப்பும், விடுமுறை நாட்களில் தந்தையோடு சுற்றியபடி பேசிக் கொண்டிருந்ததும் உதவி செய்ய, அடுத்துச் செய்ய வேண்டியதை, சுகவனேசன் சரியாகவே திட்டமிட்டான்!

முழுத் தேவைக்குமாக இல்லாவிடிலும், ஓரளவு பணத்துக்கும், அவனால் ஏற்பாடு செய்ய முடிந்தது!

வரிக் குறைப்புக்காக, நாலு சகோதரர்களும் வீடுகளை, அவரவர் மனைவி பெயரிலேயே கட்டியிருந்தனர்! தாயிடம் இன்னொரு கையெழுத்தை வாங்குவது, சுகவனேசனுக்கு எளிதாகவே இருந்தது!

ஆனால், அந்தக் கையெழுத்தை வாங்கும்போதே, இனியொருதரம் இப்படி, யாருக்காகவும் பத்திரங்களில்

கையெழுத்திடக்கூடாது என்று, தாயிடம் எச்சரித்தும் வைத்தான்! குறைந்தபட்சம். அவனிடம் கலந்து ஆலோசியாமல்!

வாடகை கொடுத்து, சொந்த வீட்டிலேயே குடியிருக்கும் அனுமதியோடு, வீட்டை ஒத்தி வைத்துப் பல லட்சங்கள் திரட்டினான்.

குடும்பத்துப் பெரியவர்களையும் விரோதித்துக் கொள்ளவில்லை! "சின்ன அளவில் இப்படித் தொடங்கப் போகிறேன், ஆசீர்வதியுங்கள்!" என்று, அவர்களது ஆசியுடனேயே தொடங்கினான்.

இங்கே உள்ளே வரவில்லை என்பதே போதுமானதாக, அவர்களும், சகோதரன் மகனைக் கெடுக்க நினைக்கவில்லை! சிறுசிறு உதவிகள் கூடச் செய்தார்கள்.

தங்களிடம் வந்த வேலைகளில், சிறிய அளவில் உள்ளவற்றை, சுகனுக்கு அனுப்பி வைத்தார்கள்!

'சுகன்' என்ற பெயரைக் கண்டு, தானாகவும் வந்தன.

வேலை இல்லாது, சும்மா இருக்கும் நிலை, சுகவனேசனுக்கு வரவில்லை! ஆனால், பெருத்த லாபம் என்று, கையில் தாராளமாகப் பணம் புழங்கவும் இல்லை! வந்த பணத்தில் கணிசமான பகுதி வீட்டின் மீது வாங்கிய கடனுக்கும், அதன் வட்டிக்கும் செலவானது!

வீட்டுச் செலவில் ஒரு சில ஆயிரங்களை மிச்சம் பிடிப்பதற்காகத் தாய், தம்பியை நோகடிக்க, அவனுக்கு மனமில்லை! இந்தச் சில ஆயிரங்கள் வந்து, தொழிலின் தேவையைத் தீர்க்கப் போவதில்லை எனும்போது, அனாவசியமாக இருப்பைச் சொல்லி இவர்களை மிரள வைப்பானேன்?

கொஞ்சம் கொஞ்சமாக வீட்டுக் கடனைக் கட்டி முடித்து, வீட்டுப் பத்திரத்தை மீட்டது, அவனது ஒரு வெற்றி! தம்பி



விரும்பியபடி, அவனைப் படிக்க வைத்தது, அடுத்தது! உற்றார், உறவினர் மத்தியில், சற்றும் தாழ்ந்து விடாமல், மதிப்பு மரியாதையுடன், குடும்பத்தை நிமிர்ந்து நிற்க வைத்தது, இன்னுமொரு பெரிய வெற்றி!

இத்தனையும் செய்ய முடிந்ததால், தொழிலில், அவனுக்கு நல்ல லாபம் என்றுதான் சொல்ல வேண்டும்!

ஆனால் இதெல்லாம், அன்றாடம் காய்ச்சி போல, அவ்வப்போது தொடர்ந்து வந்த வருமானத்தில் நடந்ததுதான், ஆனால், இந்தச் செலவுகள் போகக் கையிருப்பு என்று வைத்துக் கொள்ளவோ, அதைப் பெருத்த அளவில் முதலீடு செய்து, பெரும் லாபம் சம்பாதிக்கவோ, அவனால் இயலவில்லை!

நகர் நடுவில், மனை வாங்கி, ஃப்ளாட் கட்டி விற்றால், குறைந்தாலும், அரைக் கோடி லாபம் பெறலாம்! 'ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்' கட்டிப் போட்டால், முன் பணமும், வாடகையுமாகப் பணம் கொட்டும்!

ஆனால், இதற்கெல்லாம், மனை வாங்கவேணும், கைமுதல் வேண்டும்! பெரிய அளவில், சொந்தப் பணம் வேண்டும்!

சுகவனேசனின் அந்தக் கனவுக்குத்தான், இன்று கால்கோள் நாட்டப்படப் போகிறது!

ஞானசேகரன் என்று, ஒரு பெரிய கோடீசுவரர்! அவர், ஞானத்தை எவ்வளவு சேர்த்து வைத்திருந்தாரோ, யாருக்கும் தெரியாது! பணத்தை மிகுதியாகவே சேகரித்திருந்தார்!

அகமதாபாதிலும், மும்பையிலும், ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் கட்டி, லாபகரமாக நடத்தி, அவைகளை மகனிடம் ஒப்படைத்துவிட்டு, சொந்த இடமான தமிழ் மண்ணுக்குத் திரும்பி வந்தார்!

சென்னையில், நட்சத்திர ஹோட்டல்கள் நன்றாக நடப்பதைப் பார்த்துவிட்டு, இங்கே இரண்டு ஐந்து நட்சத்திர ஹோட்டல்களைக் கட்ட எண்ணியவர், பல கட்டுமான

நிறுவனங்களைப் பற்றி ஆராய்ந்து விட்டு, அந்தப் பொறுப்பை, சுகவனேசனிடம் கொடுக்க முடிவு செய்தார்!

அவனிடம்தான், அவருக்கு முழு நம்பிக்கையாம்!

கட்டுமானப் பணி நடக்கும் இடத்திலேயே தான் குடியிருப்பதை, அவர் பார்த்திருக்கக் கூடும் என்று, சுகவனேசன் நினைத்தான்.

பல கோடி ரூபாய் மதிப்புள்ள ஹோட்டல்கள்! கட்டி முடிப்பதற்கு, ஓர் ஆண்டுக்கு மேலாகவே ஆகக் கூடும்! ஆனால், அப்படி முடித்துக் கொடுக்கும்போது, சுகவனேசன் விரும்பிய பணம், மொத்தமாக கிடைக்கும்!

கட்டுமானப் பணி பற்றிய பூர்வாங்கப் பேச்சு வார்த்தைகள் முடிவடைந்து விட்டன! அதிலும்தான், எத்தனை தடைகள் வரப் பார்த்தன!

முதலில், ஞானசேகரனுடைய மகனுக்கு, சென்னையில் இரண்டு பெரிய ஹோட்டல்கள் கட்டுவதில் பிரியம் இல்லை! இருக்கும் இரண்டில் வரும் வருமானமே அதிகமாக இருக்கும்போது, இன்னும் இரண்டை கவனிக்கிற தொல்லை எதற்காக, என்பது அவனது கேள்வி!

"உன்னால் முடியாவிட்டால், உன் தங்கை கவனிப்பாள்!" என்றுவிட்டார், தகப்பனார்! "அத்தோடு, உனக்குக் கொடுத்த மாதிரி, அவளுக்கும் கொடுக்க வேண்டும் அல்லவா?" என்று பெற்றவர் கேட்கவும், அதற்கு மேல் அவன் மாறு பேச வில்லை!

"அலட்டிக் கொண்டு, உடம்பைக் கெடுத்துக் கொள்வீர்களோ, என்ற கவலைதான்!" என்றதோடு நிறுத்திக் கொண்டான், பரிபூரணன்!

அந்த மகள் படுத்திய பாடு, அதற்கும் மேல்! இதென்ன? அதென்ன இதை அப்படி மாற்றிச் செய்தால் என்ன.? அதை விட்டுவிட்டால் எப்படி இருக்கும் என்றும் கண்டபடி



குழப்பியடித்தாள்! அவள் குறுக்கே, குறுக்கே பேசியதில், என்ன பேசிக் கொண்டிருந்தோம் என்பது, மற்ற இருவருக்குமே, குழம்பிப் போயிற்று!

ஞானசேகரனுடைய அருமை மகள் அவள்! பச்சைக் குழந்தையின் மழலை போல, அவள் சொல்வதைக் கேட்பதே அவருக்கு ரசனைதான்! அவருடைய மகள் என்பதால், சுகவனேசனாலும், அவளிடம் கண்டிப்பு காட்டி விலக்க முடியவில்லை!

அவளை ஒரு வழியாகத் தூர விலக்கி, ஞானசேகரனுடன் பேசி முடிப்பதற்குள், சுகவனேசன் பெரும்பாடு பட்டுவிட்டான்!

அந்த வகையில், நல்ல வேளையாகத் தம்பி மயூரேசன் பேருதவியாக இருந்தான்! அவனிடம் பொறுப்பை ஒப்படைத்த பிறகு, பேச்சு நடக்கும் பக்கமே, அவளை வர விடவில்லை, அவன்!

இரண்டு பெரிய கட்டுமான நிறுவனங்கள் போட்டிக்கு வந்தன!

எல்லா இடையூறுகளும் தாண்டி, அன்று, இரு தரப்பாரும், ஒப்பந்தத்தில் கையெழுத்திடப் போகிறார்கள்!

ஞானசேகரனின் விருப்பப்படி, கையெழுத்திட நல்ல நேரம் கூடப் பார்த்தாயிற்று!

அன்று காலை, பத்தரை மணிக்கு!

அதற்காகத்தான், காலையிலேயே எழுந்து கிளம்பியிருந் தான், சுகவனேசன்!

பத்தரைக்கு, ஞானலிங்கத்தின் வீட்டில் இருந்தால், போதும்! அதற்கு, வீட்டை விட்டு ஒன்பதே முக்காலுக்குக் கிளம்பினால், போதும்!

ஆனால், அவனுக்கு இருந்த பரபரப்பில், எட்டு மணிக்கெல்லாம் ஆள் தயார்!

இனி பெட்டி போட்டுத் தயாராக வைத்திருந்த உடையை எடுத்து மாட்டிக் கொண்டு, காரில் ஏற வேண்டியதுதான்!

சும்மா உட்கார்ந்திருந்தால், மனம் கண்டதையும் எண்ணிக் குழம்பும் என்று, ஒரு புஸ்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினான் சுகன்!

அப்போதுதான், "ஓர் ஐந்து நிமிஷங்கள் பேசலாமா, அண்ணா?" என்று கேட்டுக் கொண்டு, அவன் தம்பி, மயூரேசன் வந்தான்.

அந்த ஐந்து நிமிஷங்களில், அவன் சொன்ன சேதியில், சுகவனேசனின் தலை, பம்பரமாய்ச் சுழலலாயிற்று! அவனது பெரு வளர்ச்சிக்கு அடிப்படையான பணத்தைத் தர இருந்த அந்தப் பெரிய ஒப்பந்தம், அவன் கண் முன்னே கை நழுவிப் போனது போல உணர்ந்தான் அவன்!




"அண்ணா, ஞானசேகரன் சாருடைய மகள் விநோதினியும் நானும் காதலிக்கிறோம்! சீக்கிரமே திருமணம் செய்து கொள்வதாகவும் இருக்கிறோம்."

மலர்ந்த முகத்துடன் தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்ட தம்பியிடம் என்ன சொல்வது என்றே புரியாமல், சுகவனேசன் சில வினாடிகள் தடுமாறிப் போனான்!

இருபது வயதில், தந்தையை இழந்து, தன்னந் தனியே, தொழிலைத் தொடங்கி நடத்தியபோதுகூட, அவன் இப்படிப் பேச்சிழந்து போகும் அளவுக்குத் திகைத்தது இல்லை!



இவனால், இந்த மயூரேசனால், எப்படி, இப்படிச் சொல்ல முடிந்தது?

இத்தனைக்கும், மய்யூ விஷயம் எதுவுமே அறியாதவனும் அல்ல! படிப்பு முடிந்து, கடந்த ஓர் ஆண்டாக, அண்ணனோடு கூட நின்று பணி புரிகிறவனும்கூட!

புரிந்து கொள்ளத் தெரியாத முட்டாளா என்றால் அதுவும் இல்லை!

அவனும் கெட்டிக்காரனே!

மூத்தவனோடு சேர்ந்து வேலை பார்க்கத் தொடங்கியதுமே, "அண்ணா, என்னமாய் சாதித்திருக்கிறாய்! இருபது வயதில் தொடங்கியபோது, எப்படித்தான் சமாளித்தாயோ!" என்று பாராட்டியவன் ஆயிற்றே!

இந்த அடிப்படைப் பணம் இருந்தால் எந்த அளவுக்கு உயரலாம் என்பதையும் அறியாதவன் கிடையாது!

அவனே, அதைப் பற்றி, "இந்த வேலை முடிந்து பணம் வந்த பின், இந்தத் தொழிலில், நம்மை யாராலும் எட்டிப் பிடிக்கவே முடியாது! இல்லையாண்ணா?" என்று மகிழ்ச்சியோடு கூறியிருக்கிறான்!

அந்த மகிழ்ச்சியை, அவனே கெடுப்பதா?

கெடுப்பதுதான்!

மற்றபடி, ஞானசேகரனைப் போன்ற பணக்காரர், எதிர்ப்பே இல்லாமல், வெறும் வளர்ச்சி நிலையில் இருக்கிற கட்டடக்கலைப் பொறியாளனுக்கு, மகளை மணமுடித்துக் கொடுப்பார் என்று, எதிர்பார்ப்பது, மடத்தனம் அல்லவா?

நிச்சயமாக, இந்தக் காதலை அவர் எதிர்ப்பார்! முறிக்க முயற்சிப்பார்! ஒருவரை ஒருவர் பார்க்க விடாமல், பிரித்து வைப்பார்! அதாவது, இந்த ஹோட்டல் வேலையை வேறு யாரிடமாவது கொடுத்து விட்டு, 'இனி உங்க சங்காத்தமே வேண்டாம்' என்று முடித்து விடுவார்!

என்ன பைத்தியக்காரத்தனம்!

"என்னண்ணா, பேச்சையே காணோம். என் ரகசியம், உனக்கு அவ்வளவு அதிர்ச்சியாகவா, இருக்கிறது? நீ, இதுவரை, கொஞ்சம் கூடவா, எதிர்பார்க்கவில்லை? நாங்கள் இருவரும், உங்கள் எல்லோர் கண்களிலும், என்னமாய் மண்ணைத் தூவி விட்டோம், பார்த்தாயா?" என்று மயூரன் பெருமையாக சிரிக்கவும், வயதில் பெரியவனின் திகைப்பு, சற்றே மாறியது!

அவ்வளவு நேரம் மனம் நினைத்ததை, சுகன் வாய் விட்டுக் கேட்டான்!

"என்னடா பெரிய காதல்? பொல்லாத காதல்! கொஞ்சமாவது, யோசிக்க வேண்டாம்? இதனால், நமக்கு எவ்வளவு நஷ்டம் வரும் என்று கொஞ்சமாவது, எண்ணிப் பார்த்தாயா? இந்த ஹோட்டல் வேலையில் வரக்கூடிய பணத்தை மட்டும் நான் சொல்லவில்லை! இதைத் திறம்பட முடிப்பதால் கிடைக்கக்கூடிய, இது போன்ற பல வாய்ப்புகளும் சேர்ந்தே கையைவிட்டுப் போய் விடாதா? அப்புறம், நாமும் பெரும் பணக்காரர்கள் ஆவது, எப்படி? இதைக் கொஞ்சம் பொறுப்போடு, யோசித்துப் பார், மயூர்! அத்தோடு, உன் திருமணத்துக்கு, இப்போது என்ன அவசரம்? பேசாமல், இந்தக் காதலை விட்டுவிடு!" என்று, கோபத்தில் தொடங்கி, முடிந்த அளவு தன்னை அடக்கிக் கொண்டு, எரிச்சலை உள்ளடக்கிய குரலில், கூறி முடித்தான்.

சந்தோஷமாக வாழ்த்துவான் என்று எதிர்பார்த்த அண்ணன், எதிர்மறையாக அதிலும் யோசிக்கத் தெரியாத முட்டாள் என்பது போலப் பேசவும், மயூரேசனின் முகம் கன்றிச் சிவந்தது!

ஒரு கையை உயர்த்தி, "போதும் அண்ணா! ஏதோ நல்ல விஷயம் சொன்னால் வாழ்த்துவாய் என்று நினைத்து, நான் உன்னிடம் சொல்ல வந்தேன் பார்! என்னைச் சொல்ல



வேண்டும். நீதான் 'வேலை, வேலை' என்று வாழ்க்கை என்றால், என்னவென்றே தெரியாமல் வறண்டு போய் கிடக்கிறாய்! என்னையும், அப்படிச் சாமியார் ஆக்க எண்ணாதே! என்னண்ணா, பெரிய பணம்? சந்தோஷமான வாழ்க்கையை விடப் பணமா, பெரிது? எனக்குத் திருமணத்துக்கு என்ன அவசரம் என்று கேட்கிறாயே! எனக்கு, இருபத்து மூன்று வயது முடிந்து விட்டது, உனக்கு மறந்து போய்விட்டதா? மறந்துதான் இருப்பாய்! உனக்குத்தான், வேலை தவிர, வேறு ஒன்றுமே நினைவிருப்பது இல்லையே! வேலையில் மூழ்கி, உன் வயதையே மறந்து போனவன் நீ! பெரியப்பா வீட்டில் உன்னை விட நாலு வயது சின்னவன் மது, கையில் பிள்ளையோடு இருக்கிறான்! ஆனால் நீ? நம் அம்மாவைப் பார்! பேரன் பேத்தி என்று, அவர்களுக்கு ஆசை இராதா? மன்னித்துக் கொள், அண்ணா! நான் உன்னைப் போல வெறும் இயந்திரம் அல்ல! மனிதன்! காதல் குடும்பம் என்று, நல்லபடியாக வாழப்போகிறவன்! தெரிந்து கொள்!" என்று, படபடவென்று பொரிந்து கொட்டினான், தம்பி!

அயர்ந்து போனான், அண்ணன்!

தந்தை இறந்து, இருபதாவது நாள், 'நைக்' ஷூ அணிந்து, கிரிக்கெட் விளையாட மட்டையுடன் சென்ற பதினைந்து வயது, மயூரேசன் நினைவு வந்தான்!

இவனை வருந்த விடக் கூடாது என்று உழைத்ததற்கு, இவன் தனக்கே புத்தி சொல்கிறானா, என்று உள்ளே வலித்தது!

அதை விடவும், ஞானசேகரன் மறுத்துத் துரத்தப் போகிறார், இவ்வளவு நம்பிக்கையுடன் பேசும், இவன் அதை எப்படித் தாங்கப் போகிறானோ, என்று அது வேறு பெரு வருத்தமாக இருந்தது! அவ்வளவு தூரம் போகாமல், அதற்குள்ளாக, மயூரனே மனம் திருந்தி விட்டால்?

குறைந்த பட்சமாய், உள்ளம் உடைந்து போக மாட்டானல்லவா?

ஆனால், இந்தச் சிக்கலுக்குப் பாதி காரணம், சுகவனேசனும் தான்!

ஞானசேகரனுடைய மகள் விநோதினி, பங்களூரில், 'இன்டீரியர் டெக்கரேஷன்' பயின்று கொண்டிருந்தாள்!

சுகவனேசனும், ஞானசேகரனும், இரு ஹோட்டல்களின் அமைப்பு, ஐந்து நட்சத்திரத் தகுதிக்காக, அவற்றில் கட்டாயமாக அமைக்கப் படவேண்டிய அடிப்படை வசதிகள் பற்றித் தீவிரமாகப் பேசிக் கொண்டிருக்கும்போது, திரைச் சீலைகள் என்ன வண்ணத்தில் இருக்க வேண்டும் என்று, சொல்லுவாள்!

அல்லது, தரையில், நல்ல காஷ்மீர்க் கம்பளங்களை விரித்துவிட்டுச் சுவர்களில், பொருத்தமாகச் சின்ன பாரசீகக் கம்பளங்களைத் தொங்கவிட்டால் என்ன, என்று அதுதான் முக்கியம் போலக் கேட்டுக் கொண்டிருப்பாள்!

ஞானசேகரனுக்கு, அவருடைய செல்ல மகள் என்ன சொன்னாலும், அது மகா முக்கியமே!

ஆகையால், 'முட்டாள்பெண்ணே, இந்த விஷயம் எல்லாம், கட்டடம், அறைகளின் அமைப்பு, அவற்றில் வெளிச்சம் விழும் தன்மை இவைகளைக் கவனித்து, அதன் பின் முடிவு செய்ய வேண்டியவை! அந்தக் கட்டம் வரும்வரை, வாயை மூடிக் கொண்டு, கொஞ்சம் சும்மா இருக்கிறாயா' என்று பட்டென்று அவளிடம் சொல்லிவிட முடியாது!

அதுவும், "வினு சொல்வதைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள், சுகவனேசன்! பிற்பாடு, அறைகளை அலங்கரிக்கும்போது, அவளது யோசனையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்!" என்று, அவளுடைய தந்தை பெருமையுடன் கூறும்போது, அந்த மாதிரி எண்ணுவதாகக் குறிப்பாகக் கூடக் காட்டிக் கொள்ள முடியாது!

எனவே, அவன்தான், "சின்னப் பெண்ணாக இருந்தாலும், இந்த விநோதினியிடம் நல்ல நல்ல யோசனைகள் இருக்கின்றன,



மயூர்! அவளுடன் கலந்து பேசி, அவை அனைத்தையும் குறித்து வைத்துக்கொள்!" என்று தம்பியிடம் கூறி, அவர்கள் இருவரையும் சேர்த்துத் தனியே அனுப்பியதே!

முடிந்தவரை, இந்தப் பெண்ணை, நாங்கள் பேசுகிற இடத்துக்கு வரவிடாமல், தூரவே பிடித்து வைத்துக்கொள் என்று, சுகவனேசன், தம்பியிடம் வெளிப்படையாகச் சொல்லவில்லைதான். ஆனால், அண்ணன் மனதை அப்படியே படித்தவன் போல, அந்த விநோதினி, கட்டடங்கள் பற்றிய பேச்சு நடக்கும் பக்கமே எட்டிப் பாராமல் இருக்கும்படிப் பண்ணி விட்டானே, என்று, உள்ளூர ரொம்பவே பெருமைப்பட்டான், பெரியவன்!

சுகவனேசனுடைய தம்பி, சோடை போவானா, என்று எண்ணிப் பெருமை வேறு!

கடைசியாகப் பார்த்தால், அவர்கள் இருவரும், காதல் பாடம் படித்துக் கொண்டு இருந்திருக்கிறார்கள்.

இந்தப் பக்கம் ஏன் வரவில்லை என்பதும், இப்போது புரிந்தது!

தனிமையில் படிக்கிற பாடம் அது! அதை விட்டு, அப்பாக்கள் முன்னிலையில் அவர்கள் ஏன் வருகிறார்கள்?!

தம்பி காதலிப்பதையோ, கல்யாணம் செய்து கொள்வதையோ, சுகவனேசன் வெறுக்கவில்லை.! அதைத் தடுக்க நினைக்கவும் இல்லை! வேறு ஒரு பெண்ணோடு என்றால் துடித்தேபோய் பட்டிருப்பான்!

இன்னும் ஓர் ஆண்டு சென்ற பின்னாக என்றால், இந்த விநோதினி விஷயமும் அப்படித்தான்!

ஆனால், இப்போது, குறிப்பாக, ஒப்பந்தம் கையெழுத்தாகிற இந்த நேரத்தில், இப்படி என்பதுதான் பெரும் சோதனையாக இருந்தது!

இந்தக் காதலைத் தடுக்க முடியாவிட்டாலும், ஞானசேகரன் வரை போகாமல் இதைத் தேக்கியேனும் வைத்தாக வேண்டும்!

காதல், நேசம், பாசம் எதுவும் அறியாத ஜட சாமியார் என்று தன்னை நினைத்த பிறகு, தான் சொல்லித் தம்பி கேட்பான் என்று சுகனுக்குத் தோன்றவில்லை!

விவாதமும், வீண் வேதனையும்தான் மிஞ்சும் என்று எண்ணித் தம்பியைக் கட்டுப்படுத்தத் தாயிடம் உதவி கேட்டான், சுகவனேசன்!

ஆனால், பெற்றவளின் பதில் இன்னமும் அதிர்ச்சியாக இருந்தது!

"மருமகள், பேரன், பேத்தி என்று, எனக்கு ஆசையாக இருக்கிறது! அதில் எல்லாம் ஆசையே இல்லாமல், சொன்னாலும் கேளாமல், நீதான் தனி மரமாகவே நின்று விட்டாய்! அவனாவது பொறுப்போடு திருமணம் செய்து, அடுத்த தலைமுறையை உருவாக்கட்டும்!" என்றாள் சுந்தரவல்லி!

ஆசையின்றியா? ஆசைப்பட அவனுக்கு ஏது நேரம்?

அதைவிடவும், பொறுப்பு பற்றித் தாயார் பேசியதுதான், சுகவனேசனுக்குத் தலையில் அடித்துக் கொள்ளலாம் போல, எரிச்சல் மூட்டியது!

இந்த நேரத்தில், எது பொறுப்பு என்றே, யாருக்கும் புரியவில்லையே! அவனைத் தவிர!

வீட்டில் ஒரு திருமணம், மருமகள், பேரன் பேத்தி என்று கண்களில் ஆனந்தப் பளபளப்புடன் கனவு காணத் தொடங்கிவிட்ட தாயிடம் மேற்கொண்டு எதுவும் சொல்லத் தோன்றாமல், சுகவனேசன் தம்பியிடம் திரும்பினான்.

சின்னவன் முகத்தில் பெருமிதம் தெரிந்தது! "கவலையே படாதீர்கள் அம்மா! வெகு விரைவிலேயே, உங்களுக்கு ஒரு



மருமகளும், அதன் பிறகு, பேரன் பேத்தியரும் நிச்சயமாகக் கிடைப்பார்கள்! நான் அண்ணனிடம் விவரம் சொன்ன அதே நேரத்தில், வினியும், அவள் அப்பாவிடம் சொல்லியிருப்பாள்! வினியிடம், அவளுடைய அப்பாவுக்கு, மிகவும் பிரியம்! அவள் கேட்டு, அவர் எதையும் மறுக்கவே மாட்டார்! அப்படியே, எங்கள் காதலை அவர் ஒத்துக் கொள்ளாவிட்டாலும், சொத்து, பத்து எதுவும் வேண்டாம் என்று, தன் வீட்டை விட்டு வெளியேறி வந்து விடுவதாக, வினி என்னிடம் சொல்லியிருக்கிறாள், அம்மா! என்மேல், அவளுக்கு, அவ்வளவு பிரியம்!" என்று அன்னையிடம் சொல்லி, அண்ணனை இன்னமும் அதிர வைத்தான் சின்னவன்!

ஆக, ஞானசேகரனுக்கும் விஷயத்தை அறிவித்தாயிற்று!

அவர் என்னமாய்க் குதித்துக் கொண்டு இருக்கிறாரோ? நீரிழிவு, ரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால் என்று வேண்டாத அத்தனையையும் உடம்பில் வைத்துக் கொண்டு இருக்கும் மனிதரிடம், திடுதிப்பென்று இப்படித்தான் போட்டு உடைப்பதா?

பொறுப்புணர்ச்சியின் சிகரங்கள்!

தொழிலைப் பற்றிய கலக்கம் ஒதுங்கிக் கொள்ள, "டேய் மயூ, பார்த்து நிதானமாகச் சொல்லச் சொன்னாயாடா? அவர், ரத்த அழுத்தக்காரர்! கொலஸ்ட்ரால் வேறு இருக்கிறதாம்! ஏதாவது, உடம்பைப் பாதித்துவிடப் போகிறது!" என்றான் சுகவனேசன் கவலையுடன்.

"ஐயய்யோ, ஆமாமடா! அவர் நிலைமை கவனித்து, மெல்லச் சொல்லச் சொன்னாயா, சின்னத் தம்பி?" என்று பதட்டத்துடன் கேட்டாள் பெற்றவள்!

"ரத்த அழுத்தமா? ஞானசேகரன் சாருக்கா? எனக்குத் தெரியவே தெரியாதே! அது பற்றி, விநோதினி என்னிடம் ஒன்றுமே, சொல்லவே இல்லையே!" என்று திகைத்தான் மயூரேசன்!

"என்னடா நீ? பொறுப்பாய், இதையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டாமா? அண்ணனைப் பார்! தொழில் தருகிறவர் விஷயம்கூடத் தெரிந்து வைத்திருக்கிறான்! இனியேனும் அவனைப் பார்த்துப் படி! கடவுளே, ராமா! அந்த மனிதருக்கு ஒன்றும் நேராமல் இருக்க வேண்டுமே!'' என்று, சுந்தரவல்லி கவலைப்படத் தொடங்கினாள்!

"இப்போது என்னண்ணா, செய்வது?'' என்று, கையைப் பிசைந்தபடி, அண்ணன் முகத்தைப் பார்த்தான் மயூரன்.

இனி என்ன செய்ய முடியும் என்று தோன்றினாலும், அதைச் சொல்லித் தம்பியின் கவலையை அதிகப்படுத்த, சுகவனேசனுக்கு மனமில்லை! அதைப் போலவே, சொத்து பத்தை உதறிவிட்டு, வீட்டை விட்டு விநோதினி வெளியேறுவதிலும், அவனுக்கு அவ்வளவாக நம்பிக்கை இல்லை! மகளைப் பார்த்து, ஓர் அதட்டல் போட்டால், அவள் பெட்டிப் பாம்பாய்ச் சுருண்டு விடுவாள் என்பதுதான் அவனது அபிப்பிராயம்!

மகளின் குணமும், இவ்வளவு நாளில், அவருக்குத் தெரியாமலா இருக்கும்? அவரும், அப்படி நினைத்துதான், அவளை இவ்வளவு சுதந்திரமாகப் பழக விட்டிருப்பார்!

"கவலைப்படாதேடா! ஞானசேகரன், அப்படி ஒன்றும் அதிர்ந்து போக மாட்டார் என்று நினைக்கிறேன்! ஆனால்... சரி போகட்டும்!'' என்று திரும்பினான்.

'சுகன் கன்ஸ்ட்ரக்ஷனை' வெட்டி விடுவார்! அது பற்றியும் செய்வதற்கு ஒன்றும் இல்லை!

எனவே, அது பற்றி இப்போது பேசி, மயூரன் மனதை மேலும் நோகடிக்க மனமின்றி, பேச்சை இடையிலேயே முடித்து விட்டான், அவன்.

இப்போதைக்குத் தம்பியின் விவகாரமே எப்படி முடியப் போகிறதோ? காதல் தோல்வியை அவன் தாங்கிக் கொள்வானா? தாங்கி, மீண்டும் நிமிருவானா?



ஆனால், சொந்த விஷயத்தில் நம்பிக்கையோடு இருந்த தம்பியும் முட்டாள் அல்ல. அண்ணனின் பிரச்சினை ஒருவாறு புரிய, அவன் கையைப் பற்றி "சாரி அண்ணா உன் விஷயம் இதில், இப்படி மாட்டிக் கொள்ளும் என்று, நினைக்கவே இல்லை!'' என்று வருத்தம் தெரிவித்தான்.

மெய்யான வருத்தமே என்றாலும், இதனாலும் எந்த விதப் பயனும் இல்லை! இதையே குத்திக் கிளறுவதில் லாபமுமில்லை! சரியாகச் சொல்லப் போனால், இது சுகனுக்கு மட்டும் சொந்தமான பிரச்சினையும் அல்ல! அந்தக் குடும்பம் முழுவதையுமே பாதிக்கக் கூடியது!

இதையெல்லாம் சொல்லித் தம்பியின் மனதை வருத்த மனமின்றி, "விடும்மா! இதைப்போல, இன்னொரு வாய்ப்பு வராமலா போகும்?'' என்றுவிட்டு, உடை மாற்றச் சென்றான் சுகவனேசன்!

நம்பிக்கை கொஞ்சமும் இல்லைதான்! ஆனால், மிக அபூர்வமாய், தொழிலையும் வாழ்க்கையையும் தனித் தனியாகக் கையாளும் வெகு சிலரில், ஞானசேகரனும் ஒருவராக இருக்கக் கூடும் அல்லவா? ஒன்றை மறுத்தாலும், அடுத்ததை ஏற்கக் கூடும்!

எப்படியும், இரண்டு விஷயங்களிலுமே, 'இல்லை' என்றாலுமே, அந்தப் பதிலை அவர் தன் வாயாலேயே சொல்லி விட்டுமே! அதுவரை, நம்பிக்கையை அடியோடு இழப்பானேன்?

தொண்ணூற்று ஒன்பது சதவீதம் எதிர்மறையான பதிலை எதிர்பார்த்து, ஆனாலும், ஒரு நப்பாசையுடன்தான், சுகவனேசன் அன்று, ஞானசேகரனைச் சந்திக்கச் சென்றது!

அதிலும், 'காச்மூச்'சென்ற காட்டுக் கத்தலை, ரொம்பவே எதிர்பார்த்தான்!

ஆனால், அவனைக் கண்டதும், முகம் மலர எழுந்து, "வாருங்கள், சம்பந்தி!'' என்று இரு கை நீட்டி, ஞானசேகரன்

அவனை மகிழ்ச்சியுடன் வரவேற்கவும், சுகவனேசன் பிரமித்தான்!




ஞானசேகரன் பணத்தில் கெட்டியே தவிர, வக்கிரம் பிடித்தவர் அல்ல!

எனவே, இந்த வரவேற்பு, வெறும் நாடகம் அல்ல என்ற நம்பிக்கை சுகவனேசனுக்கு இருந்தது! சிலரைப் போல ஈ ஈ என்று இளித்துவிட்டு, முகத்திலோ, முதுகிலோ குத்துகிற குணம் அவருக்குக் கிடையாது! அவர் சிரிக்கிறார் என்றால், மயூரேசன். விநோதினியின் காதலுக்கு, அவர் பச்சைக் கொடி காட்டுகிறார் என்றுதான் அர்த்தம்!

அடுத்து, தொழில் விஷயம் எப்படியோ? ஆனால், தம்பியைப் பொறுத்தவரை கவலைப்படத் தேவையில்லை! அவன் 'தேவதாஸ்' ஆகிவிடுவானோ என்ற கவலையின்றி, நிம்மதியாக இருக்கலாம்!

லேசாக முறுவலித்து, "நீங்கள், இதை இவ்வளவு இலகுவாக ஏற்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை, சார்! அதனால், கவலைப்பட்டுக் கொண்டேதான் வந்தேன்! ரொம்பவும் நன்றி, சார்!" என்றான் அவன்.

"பிள்ளைகள் ஆசைப்படும்போது, தடுப்பானேன்? நீங்களும் மூன்று தலைமுறையாகத் தொழிலில் கொடி கட்டிப் பறப்பவர்கள்! கௌரவமான குடும்பம் என்கிறபோது, எனக்கும்தான் வேறு என்ன வேண்டும்? சொல்லப் போனால், எனக்குச் சந்தோஷம்தான்!" என்றார் பெரியவர்! தொடர்ந்து,



"ஆனால் உண்மையாகச் சொல்லுங்கள், நீங்கள் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லையா?" என்று, சிறு புன்னகையுடன் வினவினார்!

ஹோட்டல் விஷயம் உள்ளூர நெருடிய போதும், தானும் முறுவலித்து, "விநோதினியை வெளியே அனுப்பும் போதெல்லாம், கண் ஜாடையால், அவள் பின்னோடு ஆள் அனுப்புவதைக் கவனித்தேன்! அது, உங்கள் பெண்ணின் பாதுகாப்புக்கு என்று நினைத்தேன்! ஆனால், செய்தி உங்களுக்கு முழு அதிர்ச்சியாக இராது என்று எண்ணினேனே தவிர... இந்த மாதிரி நடக்கக் கூடும் என்று, நான்தான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை, அத்தோடு உங்கள் சம்மதத்தையும் எதிர்பார்க்கவில்லை!" என்றான் சுகன்.

"வந்து.. உங்கள் அம்மாவுக்கும் சம்மதம்தானே?" என்று பெண்ணைப் பெற்ற தகப்பன் சிறு கவலையுடன் விசாரித்தார்!

"மருமகள் வரப் போகிறாள் என்று அம்மாவுக்கு ஒரே மகிழ்ச்சி! ஏங்கிக் கொண்டு இருப்பவர்கள் ஆயிற்றே!" என்று, உண்மையைச் சொன்னான் சுகவனேசன்.

அவனை ஒரு தரம் பார்த்துவிட்டு, "முன்னாலேயே மருமகள் வந்திருக்க வேண்டியது! ஆனால், அம்மாவுக்குப் பதிலாக, அந்த மருமகள் ஏங்கிக் கொண்டு இருந்திருப்பாள்! நீங்கள் தான், தொழிலை மணந்து கொண்டு விட்டீர்கள் போலத் தெரிகிறதே!" என்றார் ஞானசேகரன்.

கிடைத்த வாய்ப்பை விடாமல், "தொழில் என்றதும் நினைவு வருகிறது! இன்று, நம் ஒப்பந்தம் கையெழுத்தாவதாக ஏற்பாடு..." என்று நிறுத்தினான் சுகவனேசன்.

"அது..." என்று சற்று நிறுத்தினார் ஞானசேகரன்!

சம்பந்தியை எப்படி வேலை வாங்குவது என்று வேறு [illegible] கொடுப்பதாக முடிவு செய்துவிட்டாரா?

உள்ளத் தவிப்பைக் காட்டிக் கொள்ளாமல், "சொல்லுங்கள்!" என்றான் அவன் நிதானமாக.

"இப்போது, அதில் ஒரு மாற்றம் செய்யப் போகிறேன், சம்.... பாருங்கள், நீங்கள் சின்னப் பையன்! உங்களைச் 'சம்பந்தி' என்று அழைத்தால் கேட்க எப்படியோ இருக்கிறது! அதனால், பெரிய மாப்பிள்ளை என்று...." என்றவரை இடையிட்டு, "மாப்பிள்ளை பட்டமெல்லாம், உங்கள் மருமகனுக்கே இருக்கட்டும்! நீங்கள் முன்னைப் போலப் பெயரைச் சொல்லி, மரியாதைப் பன்மையில் பேசினாலே போதும்! அதுதான் எனக்குப் பாந்தமாகவும் இருக்கும்!" என்று, சுகன் சொன்னது, ஞானசேகரனுக்கு மிகவும் பிடித்திருந்தது!

"சரி சுகவனேசன்! அப்படியே செய்வோம்!" என்றார் மகிழ்ச்சியோடு!

"மேலே சொல்லுங்கள் சார்!" என்று, கருமமே கண்ணாக' ஊக்கினான், அவன்.

முறுவலித்து, "ஆமாம், ஹோட்டல் பற்றிப் பேசிக்கொண்டு இருந்தோம் அல்லவா? பாருங்கள் சுகன்சார். அதில் ஒரு சிறு மாற்றம்! முதலில் நாம், இந்தத் திருமணம் பற்றிப் பேசி முடித்து விடுவோம்! அதன் பிறகு, ஹோட்டல் விஷயத்தை எடுத்துக்கொள்வோம்!" என்றார் அவர்.

அதாவது, திருமணப் பேச்சு அவருக்குச் சாதகமாக இருந்தால்தான், ஹோட்டல் ஒப்பந்தம் கிடைக்கும் என்கிறாரா? அல்லது, 'வீட்டோடு மாப்பிள்ளை' என்பது போல, ஒத்து வராத நிபந்தனை ஏதும் விதிக்கப் போகிறாரா?

அவரை நேராகப் பார்த்து, "எப்போது, எங்கே என்பது தவிர, திருமணம் பற்றிப் பேச என்ன இருக்கிறது சார்?" என்று கேட்டான் சுகவனேசன்.

"அது... பெண்ணைக் கொடுக்கிறபோது, பேசி முடிக்க நிறைய இருக்கிறது, சுகன். உங்கள் அம்மாவுக்கு, எத்தனையோ



எதிர்பார்ப்புகள் இருக்கும்! வேண்டுமானால் அவர்களோடு கலந்து கொண்டு சொல்லுங்களேன்!"

பெருமிதமான புன்னகையோடு, தலையசைத்தான் சுகவனேசன். "சீர், செனத்தி என்பார்களே, அது பற்றிப் பேசுகிறீர்கள் என்று தோன்றுகிறது! ஆனால், எங்கள் அம்மா பற்றி, உங்களுக்குத் தெரியாது, சார்! அவர்கள் ஏங்குவது, மருமகளுக்காக மட்டும்தான். உங்களுக்குப் பெரிதாகத் தோன்றுமோ, என்னவோ? ஆனால், மருமகளுக்காக வைரமாலை வரை, அவர்களே செய்து வைத்திருக்கிறார்கள்! 'அனாதை இல்லத்துப் பெண்ணை மணப்பது என்றாலும் சரிதானடா! நானே நிறக்கப் போட்டு, ராணி மாதிரி வைத்துக் கொள்வேன்' என்பார்கள்! அதனால், அம்மாவுக்காக, நீங்கள் எதுவும் செய்ய வேண்டியது இல்லை!"

"என் மகள் அதிருஷ்டசாலி என்று தெரிகிறது! அடுத்து, நீங்கள் சொன்ன, 'எப்போது, எங்கே' தான். வினுவுக்கு, இன்னும் ஆறு மாதப் படிப்பு மிச்சம் இருக்கிறது! அடுத்த வாரம் பங்களூருக்குப் போய்விடுவாள். அதற்குமுன், நமக்குள் வெற்றிலை பாக்கு மாற்றிக் கொள்வோம்! படிப்பு முடிந்து வந்ததும், நிச்சயதார்த்தம், திருமணம், அதையொட்டிய விழாக்கள்! படிப்பே வேண்டாம் என்று சொன்னாலும் சொல்லுவாள்! ஆனால், கடைசி செமஸ்டர்! அதை இடையில் நிறுத்துவது, எனக்கு அவ்வளவு விருப்பம் இல்லை! திருமணம் [illegible], உங்கள் தம்பி, வாராவாரம் அவளை, அங்கே போய்ப் [illegible], சம்மதிப்பாள் என்று நினைக்கிறேன்! அதில், உங்களுக்கு ஆட்சேபனை இல்லையே?"

"அது, அவர்கள் இருவருமாக முடிவு செய்யட்டுமே,!" என்று சொல்லும்போதே, சுகவனேசனுக்கு உள்ளூரச் சிரிப்பு மலர்ந்தது!

[illegible], தம்பி பங்களூருக்கே குடி போய்விட மாட்டானா? நல்ல வேளை! அவன் காதலைப் பொறுத்தவரை, பிரச்சினை இப்போது முழு வெற்றியாகி விட்டது!

"நியாயம்தான், மாப்பிள்ளை சொன்னால், வினு ஒத்துக் கொள்வாள்! இனி, நம் ஹோட்டல் விஷயம்!" என்று தொடங்கியவர், அதிலும் ஏமாற்றிவிடவில்லை!

ஆனால், அவர் முதலிலேயே சொன்னது போல, மாற்றம் செய்தார்.

இரண்டு ஹோட்டல்களில், ஒன்றை மட்டும் முதலில் தொடங்கலாம் என்று சொன்னார். அதை விரைவாக முடித்து விட்டு, அடுத்ததைத் தொடங்கினால், அதைக் கட்டும்போதே, முன்னதன் வருமானம், கைக்கு வரத் தொடங்கிவிடும் அல்லவா? மொத்தமாகப் பெரும் தொகையை முதல் போடவும் தேவையிராது!

இருவருக்குமான தொழில் உறவின் காலத்தை நீட்டிக்க விரும்புகிறார்! ஒரு வேளை, அவரிடமிருந்து பணம் வந்து கொண்டே இருப்பது, மகளின் மரியாதையைப் பெருக்கும் என்று எண்ணுகிறாரோ, என்னவோ?

மகள் நடந்து கொள்ளும் விதத்தைப் பொறுத்துதான், கணவன் வீட்டில் அவளுக்கு மரியாதை என்று புரியவில்லை!

பெண்ணைப் பெற்றவர் அல்லவா? இன்னொரு பிடிதரம் வைத்துக் கொள்ள நினைக்கிறார் என்று சுகன் ஊகித்தான்.

ஒரு மாதிரிப் பார்த்தால், இது, அவனுக்கும் ஓரளவு வசதிதான்! இரண்டு ஹோட்டல்களையும் சேர்த்தே கட்டுவதானால், அவனது கைவசம் உள்ள மேஸ்திரிகள், அவர்களின் கீழ் பணி புரியும் தொழிலாளர்கள் அத்தனை பேரையும், இதிலேயே வேலை செய்ய வைத்து, முழு மூச்சாய் இந்த வேலை ஒன்றை பார்க்கத்தான் சரியாக இருக்கும்!

வேறு வெளி வேலைகளை ஏற்க முடியாது. அப்படியே ஏற்றாலும், பழக்கமற்ற புது ஆட்களிடம் வேலையைக் கொடுக்கும்படியாக இருக்கும்! அவர்கள் என்ன மாதிரி



செய்கிறார்களோ என்று, அவ்வப்போது ஓடி ஓடிப் போய் மேற்பார்வையிட நேரும்!

இப்போதானால், இந்த வேலையையும் பார்த்து, மற்ற வெளி வேலைகளையும் சேர்த்து, அவனது நம்பிக்கையைப் பெற்ற ஆட்கள் மூலமாகவே, நிம்மதியோடு செய்யலாம்!

நினைத்தபடி ஓர் ஆண்டில், மொத்த லாபம் கைக்கு வராது என்றாலும், பாதி நிச்சயம்தானே? மீதியும், அடுத்த ஆண்டில் வந்து விடப் போகிறது! அதுவும் நிச்சயமே!

எட்டு ஆண்டுகளாகத் திட்டமிட்டது., நிறைவேற, இன்னும் ஓர் ஆண்டு அதிகம் ஆகும்! அவ்வளவுதானே?

இவ்வளவும் யோசித்து, சம்மதமாகத் தலையாட்டினான் [illegible].

ஞானசேகரன் கூறியது போல ஒப்பந்தம் தயாரித்து, இருவருமாகக் கையெழுத்திட்டார்கள்!

விவரம் அறிந்த மயூரன், சுந்தரவல்லி இருவருக்கும் மிகுந்த சந்தோஷம்!

வினோதினியைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்! [illegible] குதித்தாளாம்! முகமெல்லாம் பல்லாக, மயூரேசன் சொன்னான்!

இவ்வளவு ஆசை இருந்தால், அவர்கள் இணைவதுதான் [illegible] மனம் கனிய, மூத்தவன் முறுவலித்தான்.

வெற்றிலை பாக்கு மாற்றுவதையே, சற்று விமரிசையாகவே நடத்தினார்கள்!

அடுத்து, முதல் ஹோட்டலுக்குக் கால் கோள் விழாவும் [illegible] நடைபெற்றது!

[illegible] பங்களூருக்கு விஜயம் செய்யத் [illegible], மயூரேசன்!

வருங்கால மருமகளுக்குப் பிடிக்கும் என்று, சுந்தரவல்லி பூண்டு குழம்பும், எறாவறுவலும் செய்து அனுப்பினாள்.

மயூரேசன் திரும்பி வரும்போது, அங்கிருந்து, காய்கறிகளும், பூச்செடிகளும் கொடுத்து அனுப்பினாள் விநோதினி!

சிற்றெறும்புக் கூட்டம் போல, நிறைய ஆட்களை அமர்த்தி வேலை செய்ததால், ஹோட்டலும், வீண் கால தாமதம் இன்றி, உரிய வேகத்தில் எழும்பியது!

எல்லோருமே மிகுந்த மன மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் இருந்தனர்!

அன்று மதிய உணவுக்கு வீட்டுக்குப் போன மயூரேசன், மாலை வேலைக்குத் திரும்பி வரவில்லை!

கம்ப்யூட்டர் சென்டருக்காகக் கட்டிடம் கட்டிக் கொடுத்துக் கொண்டிருந்த இடத்திலிருந்து, வேலையை முடித்து ஆட்களை அனுப்பிவிடவா என்று, சுகவனேசனுக்கு போன் செய்து கேட்டார்கள்!

அந்த வேலையை, மயூரேசன் போய்ப் பார்ப்பதாக, ஏற்பாடு!

'செல்'லில் தொடர்பு கொண்டு கேட்டால், "அடடா! பேசிக்கொண்டிருந்ததில் மறந்தே விட்டேன்! இப்போது... நீயே பார்த்துவிட்டு வந்து விடேன் அண்ணா! ப்ளீஸ்!" என்று சலுகையோடு கேட்டான் சின்னவன்!

தம்பி இப்படிக் கேட்கும்போது, மறுத்துப் பேசி சுகவனேசனுக்குப் பழக்கமில்லை!

எனவே, மேஸ்திரியை மட்டும் இருக்கச் சொல்லி கம்ப்யூட்டர் சென்டர் கட்டிடத்தைப் போய்ப் பார்வையிட்டு சொல்ல வேண்டியதை, அந்த மேஸ்திரியிடம் சொல்லி அனுப்பிவிட்டு அவன் வீட்டுக்குத் திரும்பி வரும்போது



வீட்டுத் தோட்டத்தில் புதர்ச்செடியின் மறு புறத்திலிருந்து, கலகலவென்று, ஒரு பெண்ணின் இனிய சிரிப்புச் சத்தம் கேட்டது!

தன்னையறியாமல் முறுவலித்தபடியே காரிலிருந்து இறங்கியபோது, "ஏய், ஏய்! பாதியில் என்ன ஓட்டம்? அதெல்லாம் ஒத்துக் கொள்ளாமல், உன்னை விட மாட்டேன்!" என்று மயூரேசனின் நகை கலந்த குரலும் தொடர்ந்து ஒலிக்கவும், சுகவனேசனின் முறுவல் மறைந்தது!

முதலில் சிரித்தது விநோதினியின்னியின் குரல் அல்லவே என்று எண்ணம் தோன்றி, அவனை உறுத்தியது!

சிரித்தவள் விநோதினி அல்ல என்று உறுதிப் படுத்துகிறவள் போன்று, "ஏய், போப்பா! சும்மா அளப்பு! உன்னை நான் நம்பவே மாட்டேன்..." என்று 'கிளுகிளு' சிரிப்பினூடே அறிவித்தவாறே ஓடி வந்து, காரைப் பூட்டிவிட்டு நிமிர்ந்த அவன் மேல் முட்டிக் கொண்டவளின் மதி முகம் அவனைத் திகைக்க வைத்தது!

அவள் பின்னோடு, மயூரேசன் ஓடி வந்ததும்!

யார் அது, இவ்வளவு சகஜமாக மயூரனுடன் பழகக் கூடிய இன்னொருத்தி?

இவளுடன் பேசிக் கொண்டிருந்ததில்தான், தம்பிக்கு, வேலை மறந்துவிட்டதா?

இவர்கள் பேசியது சகஜமாகவா? அல்லது, சரசமாகவா?

இரண்டுமே, சுகவனேசனுக்குப் பிடிக்கவில்லை!



மயூரேசனும், அந்தப் பெண்ணும் பேச்சு சுவாரசியத்தில், சுகவனேசனின் கார் வந்து நின்ற சத்தத்தைக் கவனியாது இருந்திருக்க வேண்டும்

அவர்கள் இருவரும், செடி மறைவில்... அதாவது, செடிக்கு மறு புறமாக உட்கார்ந்து பேசத் தொடங்கியபோது, - எப்போது பேசத் தொடங்கினார்களோ - அப்போது, அங்கே கார் இல்லை!

சுகவனேசனும் இல்லை!

எனவே, ஓடி வந்தவள், தன் வழியை மறைக்கக் கூடிய எந்தப் பொருளையும் எதிர்பார்க்கவில்லை போலும்!

அதனால்தான் அவன் மீது முட்டிக் கொண்டிருக்கிறாள்!

மல்லிகை, மகிழ மலர், ஜாதி, சண்பகம் என்று, பல மலர்களின் கூட்டமே, அவைகளின் சுகந்தத்துடன் தன் மேல் வந்து மோதியது போல உணர்ந்த சுகவனேசன், மோதிய வேகத்தில் தடுமாறி நின்ற அவளைக் கீழே விழுந்து விடாமல் பிடித்து, நிறுத்தினான்.

"எப்போதுமே, பார்வையை முன்னே வைத்துக் கொண்டு ஓடினால், இப்படி முட்டி மோதி, கையைக் காலை உடைத்துக் கொள்ளத் தேவையிராது!" என்றான் சற்று வறண்ட குரலில்!

லேசாக உதறி, தன்னை விடுவித்துக் கொண்டவள் "எனக்குக் கை, கால் ஒன்றும் உடையவில்லை!" என்றாள் பதிலாக!



"மற்றவர்களுக்கும் கை, கால் உடையும் அல்லவா? அதாவது, எதிர்பாராமல், இப்படி மோதப்படும் அப்பாவி அடுத்தவர்களின் கை, கால்கள்!" என்றான் அவன் விடாமல்.

"அண்ணா, உனக்கு அடிகிடி படவில்லையே!" என்று, அவசரமாக அண்ணனை ஆராய்ந்தான், மயூரேசன்.

புதியவளின் பார்வை, வியப்புடன் சுகவனேசனின் முகத்தில் பதிந்தது!

"நீ சொன்னது, நிஜம்தான், மய்யூப் பையா! பெரிய அண்ணன், கொஞ்சம்கூட மாறவே இல்லை! ஊகூம்! கொஞ்சமும்... இல்லவே இல்லை!" என்று சோகமாக முடித்தாள்! "அதே பெரீ..ய அண்ணன்தனம் அப்...படியே இருக்கிறதே!" என்று வெகுவாக வருத்தப்பட்டாள்.

சிரிப்பினூடே, "ஏய், ஏய் வம்புக்காரி! நான் அண்ணன் முகம் மாறவில்லை என்றுதானே சொன்னேன்! நீ, என்னென்னவோ சொல்லி, என்னை வம்பிலே மாட்டி விடப் பார்க்கிறாயே! மெய் அண்ணா! நான் இந்த மாதிரி எதையுமே சொல்லவே இல்லை! இந்தப் புளுகுணி பொய் சொல்கிறது!" என்று, அவசரமாகச் சிக்கலில் இருந்து, தன்னை விடுவித்துக் கொண்டான், சின்னவன்!

"புளுகுணி பொய் சொன்னால், அது மெய்யாகத்தானே, இருக்கும்?!" என்றாள் அவள், பதிலுக்கு!

"நீ... நீ..."

"நான், நானேதான்! இதில் என்ன சந்தேகம்?"

"நிச்சயமாகச் சந்தேகப் படவே முடியாது! இந்த மாதிரிப் [illegible]கிறவள், உலகிலேயே, நீ மட்டுமாகத்தான் இருக்க [illegible] ஏனெனில், இன்னோர் இந்துமுகியை, இந்த உலகம் தாங்காது!" என்று சுகவனேசன் புன்னகையோடு இயம்ப, மயூரன் [illegible]!

"தோற்றாய்! தோற்றாய்! அண்ணன் உன்னைக் கண்டு [illegible] விடுவான் என்று நான் சொல்லவில்லை? இன்னும், பார்!,"

தம்பியைத் தொடர்ந்து "பார்வையில் கண்டுபிடிப்பது கஷ்டம்தான்! அப்போது, சரியான குண்டு குள்ளக் கத்தரிக் காயாய் இருந்தாய்! இப்போது..." என்று அவளது எழில் மேனியை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "ஆனால், இப்போது, இப்படி எப்படி? பட்டப் பட்டினியா?" என்று கிண்டலாகக் கேட்டான் சுகவனேசன்.

"நான் ஒன்றும் பட்டினி கிடக்க மாட்டேன்!..." என்று, சற்று ரோஷமாகத் தொடங்கியவளை இடையிட்டு," அதுதான், எங்களுக்கு நன்றாகத் தெரியுமே! அம்மா வகை வகையாகச் செய்து வைப்பதை எல்லாம் மூக்குப் பிடிக்க, எங்களுக்கு இல்லாமல் காலி செய்வாயே!" என்று, விடாமல் சொன்னான் அவன்.

"ஐயோ, அதெல்லாம் இல்லை! பொய்!" என்று சிணுங்கினாள் இந்துமுகி.

"பொய்யா? எங்கள் அம்மா சமையலை, நீ சாப்பிட்டதே இல்லை என்றா சொல்லுகிறாய்? பாவம், அம்மா! இந்த மாதிரி, ருசியை ரசித்துச் சாப்பிட உங்கள் யாருக்கும் தெரியவில்லை, உங்களுக்கெல்லாம் பாடு பட்டு சமையல் செய்வதே வீண், என்று ரொம்ப காலம் அங்கலாய்த்தார்கள்! நீயானால், சாப்பிட்டதே இல்லை என்கிறாயே! என்ன அநியாயம்!" என்று, பெரிதாகக் குறைபட்டான் பெரியவன்!

"சாப்பிட்டதே இல்லை என்றேனா? நீங்கள் சொன்ன மாதிரி, உங்களுக்கு இல்லாமல் சாப்பிட்டது இல்லை என்றுதான் சொன்னேன்!"

"அம்மாவுக்குக் கொஞ்சமாகச் செய்யத் தெரியாததால், தப்பித்தோம்! மற்றபடி. நீ மூக்குப் பிடிக்க முக்கிமுக்கிச் சாப்பிடுவதால்தான் உனக்கு இப்படி 'முகி' என்று பெயர் வைத்திருக்கிறார்கள் என்போமே!" என்று, சுகவனேசன், உயர்வு நவிற்சியாய்க் கொஞ்சம் அதிகப்படுத்திப் பேச,



"என்னவெல்லாம் சொல்லுகிறீர்கள்! நான் ஆன்ட்டியிடம் சொல்லுகிறேன்!" என்று மீண்டும் சிணுங்கினாள் அவள்.

கைதட்டிச் சிரித்தான் மயூரேசன், "அண்ணன் உன் வாயை அடக்குவான் என்றேனே, சரியாகி விட்டதா?" என்றான் பெருமையாக.

"ரொம்பவே சரிதான்! நீளக் கால் எட்டுக்கால் பூச்சி மாதிரி, ஒல்லியாகக் குச்சி குச்சியாகக் கையையும் காலையும் வைத்துக்கொண்டு, ஒரு வார்த்தை பேச, ஒன்பது தரம் யோசிக்கும் ஓர் உம்மணா மூஞ்சியைத்தானே, எனக்குப் பழக்கம்! அந்த உம்மணாமூஞ்சி இவ்வளவு பேசினால், அதுவே அதிர்ச்சியாகி, எனக்குப் பேச்சு வரமாட்டேன் என்கிறது! அதை ஒத்துக்கொண்டு தான் ஆக வேண்டும்!" என்று, தன் பங்குக்கு, சுகவனேசனை மட்டம் தட்ட முயன்றாள் இந்துமுகி!

"நான் ஒரு நாளும் உம்மணாமூஞ்சியாக இருந்தது இல்லை!"

"அதை, உங்களிடம் பாடத்தில் சந்தேகம் கேட்க வந்த துர்பாக்கியசாலிகள் சொல்ல வேண்டும்! அய்யா, வாயைத் திறக்க அரை மணி நேரம்! ஒரு வார்த்தை சொல்ல, ஒரு மணி நேரம்! அப்படித் திறக்கும் போதும் திட்டுவது!"

"ஆகா! பயங்கர மலரும் நினைவுகளாக இருக்கிறதே! நிஜமாகவே, அப்படியாண்ணா? இந்துவைத் திட்டியிருக்கிறாயா? என்று, சுவாரசியமாகக் கேட்டான் சின்னவன்!

உச்சுக் கொட்டினான், அண்ணன்! "பின்னே என்னடா? ஏபிசிடி தெரியாமல், பெரிதாகக் கட்டுரை எழுத முயற்சிப்பது [illegible] ஏ ப்ளஸ் பி ஹோல் ஸ்கொயர் என்றால் என்ன என்று கூடத் தெரியாமல், அல்ஜிப்ரா படிக்க வந்து விட்டாள்! திட்டாமல் என்ன செய்வதாம்?" என்று, தன்னை நியாயப்படுத்திக் கொண்டான்!

“ஏபிசிடியே எனக்கு அந்த ஆண்டுதானே, தொடக்கம்? உங்கள் ‘ப்ளஸ் ஒன்’ படிப்பை, அப்போது என்னிடம் எதிர்பார்த்தீர்கள்! ‘இதுகூடத் தெரியாதா, இது கூடத் தெரியாதா?’ என்று, என்னை அழவே வைத்தார், மய்யூ!” என்று புகார் சொன்னாள் இந்துமுகி!

“ஹையோ! மெய்யாகவே, அழுதாயா, இந்து?” என்று, ஆர்வமாக விசாரித்தான் மயூரேசன். “பாவம், அண்ணா!”

“ரொம்பவும் உருகி விடாதே! அன்றைக்கு அம்மா காஜூ கட்லியும் பஜ்ஜியும் செய்திருந்தார்கள். அதைப் பார்த்ததுமே, அம்மையார் அழுகை நின்றுவிட்டது! முட்டத் தின்று விட்டு, நடக்க முடியாமல், அங்கப் பிரதட்சிணம் மாதிரி, உருண்டுதானே, அவள் வீட்டுக்குப் போனாள்!” என்று சிரித்தவனுக்கு, உள்ளூர சற்றுத் திகைப்பாக இருந்தது!

கேலியும் கிண்டலுமாக, இந்துமுகியிடம் பேசியது, அவ்வளவு ஆச்சரியம் தரவில்லை!

சின்ன வயதில், அவளுடைய குடும்பமே ரொம்பப் பழக்கம். பக்கத்து வீடு!

ரோஜாப்பூக் குவியல் போல, மருத்துவ மனையிலிருந்து, அவளைத் தூக்கிக் கொண்டு, அவளுடைய அம்மா வீட்டுக்கு வந்த போது, சுந்தரவல்லி ஆரத்தி எடுத்தது, ஏழு வயது சுகவனேசனுக்கு, இன்னும்கூட, நினைவு இருக்கிறது!

பெண் குழந்தை ஆசையில், சுந்தரவல்லி அடிக்கடி அவளைத் தன் வீட்டுக்குத் தூக்கி வந்து விடுவாள்.

சின்னப் பெண்ணாக இருந்தாலும், நன்றாக வாயடி அடிக்கிறாள் என்று எல்லோருமே, அவளிடம் கிண்டலாகப் பேசுவது, பழக்கம்தான். மடக்கி மடக்கிப் பேசினாலும், ஏதாவது சொல்லி சமாளித்து விடுவாள்! அதை ரசிப்பதில் எல்லோருக்கும் அசை!

ஜெகதீசனே, அவளை மடியில் வைத்துப் பேசிக் கொண்டிருப்பார்!



இரண்டு வயது பெரியவனான மயூரன், இணை பிரியாத தோழன்! அவள் ஏவியதைச் செய்து கொண்டு, அவளுடனேயே திரிவான்!

ஆனால், குடும்பத்தில் உள்ள எல்லாப் பிள்ளைகளையும் போல, இந்துவுக்கும், நெடுநெடுவென்று வளர்ந்திருந்த சுகனிடம் ஒரு பிரமிப்பு!

‘பெரியண்ணா, பெரியண்ணா’ என்று, அவனுக்கு வால் பிடித்துக் கொண்டு, அவள் அலைவாள்!

அவன் ‘ப்ளஸ் டூ’ சேர்ந்தபோது, பெரிய வீடு கட்டிக் கொண்டு, சுகவனேசன் குடும்பம் இங்கே வந்தது!

தந்தைக்கு மாற்றலாகி, இந்துமுகியுடைய குடும்பம், வடக்கே குடி பெயர்ந்தது!

முதலில் பெரிதாகத் தோன்றிய பிரிவு, புதிய அறிமுகங்கள், பெரிய நிகழ்ச்சிகளில், புதையுண்டு போயிற்று!

ஆனால், கிட்டத்தட்டப் பத்து ஆண்டுகள் கடந்து பார்க்கும்போது, பழைய மாதிரியே, கேலியும் கிண்டலுமாகப் பேச முடிந்தது, அவனுக்கு ஆச்சரியமில்லை!

ஆனால், தன் பேச்சில், சிறு வக்கிரம் இருந்ததோ என்று, அவனுக்குள் ஓர் ஐயம்! மற்றபடி, தன் வீட்டில் ஒருவர் சாப்பிட்டதைச் சொல்லி, அவரை இந்த அளவுக்குக் கேலி செய்வது நாகரீகம் ஆகாதே!

உள்ளூர அவளிடம், சுகவனேசனுக்குச் சிறு கோபம் இருந்ததா?

செடி மறைவில் போய் உட்கார்ந்து, மயூரன் இந்துமுகியோடு பேசிக் கொண்டிருந்தது, அவனுக்குப் பிடிக்கவில்லைதான்! அதை ஒத்துக் கொள்வதில் அவனுக்குத் தடை, தயக்கம் ஏதும் இல்லை!

திருமணம் நிச்சயமாக இளைஞன், மயூரேசன்! இன்னொரு பெண்ணுடன் செடிக்கு அந்தப் பக்கம் உட்கார்ந்து, பேசினால், அதைப் பெண்ணைக் கொடுப்பவர் பார்த்தாலோ, கேள்விப்பட்டாலோ, என்ன நினைப்பார்?

அவனுக்குத்தான், அது மண்டையில் தோன்றவில்லை!

இவளாவது, யோசித்திருக்க வேண்டாமா? இந்த வயதில், பிறர் பார்வைக்கு மறைந்தாற்போல அமர்ந்து, ஓர் இளைஞனுடன் பேசிக் கொண்டிருந்தால், தப்பாக எண்ணுவார்கள் என்று, இருபத்தியோரு வயதுப் பெண்ணுக்குத் தெரிய வேண்டாம்?

இந்தக் கோபத்தைக் குத்தலான பேச்சில் காட்டி விட்டான் போலும்!

அவன் பேச்சு, அவனுக்கு உறுத்தினாலும், மற்ற இருவருக்கும் வித்தியாசமாக எதுவும் தோன்றவில்லை போலும்!

“மெய்யாகவே, அங்கப்பிரதட்சிணம் செய்வதாக வேண்டித்தான் அப்படி உருண்டாளோ, என்னவோ?” என்றான் மயூரேசன் யோசிப்பது போன்ற பாவனையுடன்! “உலகத்திலேயே சமையலில் தலைசிறந்த சுந்தரவல்லித் தாயாரின் சமையலைத் தினம்தோறும் சாப்பிடும் பாக்கியம் கிடைக்க வேண்டும் என்று...”

“என்ன அபாரக்கற்பனை! விட்டால், அண்ணனும் தம்பியுமாகக் காற்றிலேயே கட்டடம் எழுப்பி, அதை விற்றும் விடுவீர்கள் போலிருக்கிறதே! தொழிலுக்கு ரொம்பவே வசதிதான்! செலவே இல்லாத லாபம்!” என்றாள் இந்துமுகி பதிலுக்கு

“உன் யோசனையைக் கேட்டுத் தொழில் நடத்தினால், சிறைக்குத்தான் போக வேண்டும்! அப்படித்தான் திட்டமா?”



“பின்னே, நீங்கள் மட்டும் என்னைச் சாப்பாட்டுராமி என்கிறீர்களே!” என்று குற்றம் சாட்டும் குரலில் கூறினாள் இந்துமுகி.

உணவு விஷயமாக அதிகப்படியாகப் பேசி விட்டதாக ஏற்கனவே நினைத்திருந்த சுகவனேசன், “அப்படியில்லை...” என்று சமாதானம் பண்ணத் தொடங்கிய நேரத்தில் சுந்தரவல்லியின் குரல், உள்ளிருந்து உரத்துக் கேட்டது!

“சின்னத் தம்பி, அங்கே இந்து இருந்தால், உள்ளே கூட்டிவாம்மா! அன்னாசி, திராட்சை போட்ட ரவா கேசரி செய்திருக்கிறேன். அவளுக்கு இனிப்பு என்றால் உயிர்! உள்ளே வந்து, இரண்டு வாய் சாப்பிட்டு விட்டுப் போகச் சொல்லு!”

“என்னவோ என்றால் உயிராமே!” என்று சகோதரர்கள் இருவரும் வாய் விட்டு நகைக்க, “ஐயோ! இந்த ஆன்ட்டி, சரியான நேரத்தில் காலை வாரி விட்டார்களே!” என்று, இந்துமுகியும் முகத்தில் அசடு வழியச் சொல்லிச் சிரித்தாள்!

மூவருமாக உள்ளே செல்லவும், சுந்தரவல்லிக்கு மிகவும் சந்தோஷம்!

மூவருக்குமாகச் சிற்றுண்டி எடுத்துக் கொடுத்தது மட்டுமின்றி, இந்துவுக்குப் பிடிக்கும் என்று, இரவு உணவுக்கும், டப்பாவில் எதையோ எடுத்து வைக்கப் போனாள்.

“வேண்டாம், ஆன்ட்டி!” என்று ஒரேயடியாக மறுத்தாள் சின்னவள்.

சுகவனேசன் வெறுமனே முறுவலிக்க, “பரவாயில்லை! பரவாயில்லை! எங்களுக்காகப் பார்க்காதே! நீ எடுத்துப் போம்மா! நீ எடுத்துப் போவதைப் பாராமல், நாங்கள் வேண்டுமானால், கண்களை மூடிக் கொள்ளுகிறோம்!” என்று சிரித்தான் மயூரேசன்.

“ஏண்டா? இந்து எடுத்துப் போவதைப் பார்க்கக் கூடாது என்று, நீங்கள் ஏன் கண்ணை மூடிக் கொள்ள வேண்டும்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!” என்று சுந்தரவல்லி புரியாமல் கேட்க, மகன்கள் இருவரும், ஒருவரை ஒருவர் பார்த்து, முறுவலித்தார்கள்!

“என்னைப் பயங்கரச் சாப்பாட்டு ராமி என்று, கேலி செய்கிறார்கள், ஆன்ட்டி!” என்று, புகார் சொன்னாள் இந்துமுகி.

“அடப்பாவமே! ஆனால்.. அதற்காகவா, வேண்டாம் என்கிறாய்? சும்மா எடுத்துப் போம்மா!” என்றாள் பெரியவள்.

“அப்படியில்லை, ஆன்ட்டி! நானே, இப்போது கொஞ்சம் கவனித்துதான் உண்பது! இனிப்பை, ரொம்பவே குறைத்துவிட்டேன்! இப்போது, நீங்கள் தந்த கேசரி சாப்பிட்டேனா, இரவு உணவு அத்தோடு, சரி! அதனால்தான் எடுத்துப் போகவில்லை என்றேன்!”

“அதற்காகப் பட்டினி...”

“ஊகூம், பட்டினி கிடப்பது இல்லை ஆன்ட்டி! அது, உடம்புக்கு நல்லதும் இல்லை என்கிறார்கள்! அதிகப்படியாகப் போகாமல் பார்த்துக் கொள்ளுகிறேன்! முன்னைப் போலக் குண்டாக இருந்தால், இப்போது நன்றாக இராதல்லவா?”

இவள் யாருக்கு விளக்கம் சொல்கிறாள்?

ஓரக் கண்ணால் இந்துமுகியைப் பார்த்த சுகவனேசன், அவளது கடைக்கண் பார்வையைச் சந்திக்க நேர்ந்தது!

ஆக, அவனுக்குத்தான் இந்த விளக்கமா?

“நீ எவ்வளவு குண்டாக இருந்தாலும், அழகாகத்தான் இருப்பாய், இந்தும்மா!”

“அதெல்லாம் கிடையாது, ஆன்ட்டி! சின்ன வயதில் இருந்ததையே ‘குள்ளக் கத்தரிக்காய்’ என்கிறவர்கள், இப்போது ‘ரோட்ரோலர்’ என்பார்கள்!”



அவளுக்கு வலித்திருக்கிறது. பாவம்! சே, தப்பு!

ஆனால், இவ்வளவு எழிலான மேனி, எப்படி ‘ரோட்ரோலர்’ ஆக முடியும்? அந்த வார்த்தையை எதிர்பார்க்க, அவளது மனம் எப்படி நொந்திருக்கவேண்டும்?

இந்தக் கழிவிரக்கத்தில் இருந்ததால், கிளம்புவதாகச் சொல்லி இந்துமுகி எழுந்தபோது, கூடவே சுகவனேசனும் எழுந்தான்.

“கார் வெளியேதான் நிற்கிறது! உன் முகவரியைச் சொன்னால், கொண்டு போய் விட்டுவிடுகிறேன்!” என்று, உதவ முன் வந்தான்!

அவள் மறுப்பாகத் தலையசைத்து, “இல்லை, வேண்டாம். அவசியம் இல்லை! வீடு மிகவும் பக்கத்தில்தான்” என்று கூறி அவள் புன்னகை செய்யவும், மயூரேசன் உரக்க நகைத்தான்!

“எதுவானாலும், சொல்லிவிட்டுச் சிரிப்பது! மற்றவர்களும் சேர்ந்து சிரிக்கலாம் அல்லவா?”

“அடுத்த வீட்டுப் பெண், அண்ணா. காலையில் நிறையச் சாமான் வந்து இறங்கியதே, என்ன மாதிரிக் கும்பலோ என்று பேசினோமே! இந்தம்மாள்தான்! இவளைத் தூக்கி அந்தப்பக்கம் போடலாம்.. அல்லது நடராஜா சர்வீசில் கூட்டிப் போகலாம்! அம்மையாருக்கு எப்படி வசதி?” என்று கேட்டவன், இந்துமுகி சிரித்துக்கொண்டே திரும்பவும், “கிளம்பி விட்டால் உனக்குத் துணை வருகிறேன்!” என்று, அவசரமாக எழுந்தான்.

மயூரேசன் காட்டிய அவசரம், சுகவனேசன் முகத்தைச் சுளிக்க வைத்தது!

பக்கத்து வீடுதானே? அவளே போய்க் கொள்ள மாட்டாளா? அடுத்த பெண்ணை உலக மகாப் பெரிய மனுஷி, இந்த இந்துமுகி, அவளது வீடு வரை துணை போய், விட்டு வருவதற்கு?



தொடர்ந்த சில நாட்களில், சுகவனேசன் முகம் சுளிக்கும்படியான நிகழ்ச்சிகள் பல நடந்தன.

மறுநாள் காலையில் சுகன் கிளம்பும் போது, மயூரன் பான்ட் பைகளுக்குள் கைகளை விட்டுக் கொண்டு, ஒரு தினுசான நடையுடன் அண்ணனை நெருங்கினான்.

தம்பியின் முகத்திலிருந்த அசட்டுக் களை, ஓரளவு விஷயத்தைச் சொல்லிவிட சிறு முறுவலுடன், "என்னடா, இன்று மட்டமா? வேறு முக்கியமான வேலை வந்து விட்டது போல?" என்று, குரலில் கேலியுடன் கேட்டான்!

"ஆமாண்ணா! அனால், ஒவ்வொரு முறையும், நான் சொல்லாமலே, உனக்கு எப்படித்தான் தெரிகிறதோ?" என்று தம்பி வழிய, அண்ணன் நன்றாகவே சிரித்தான்!

"பணம் ஏதும் வேண்டுமானால், அம்மாவிடம் சொல்லிவிட்டு, என் பீரோவிலிருந்து எடுத்துக் கொள்!" என்றவன் மேலே பேசிக்கொண்டு நில்லாமல் கிளம்பி விட்டான்.

இன்று சின்னவன் பார்க்க வேண்டிய வேலைகளையும், அவனே கவனித்தாக வேண்டுமே! நின்று கேலி செய்து கொண்டிருக்க, அவனுக்கு ஏது நேரம்?

ஆனால், இன்று எந்த விடுமுறை நாளும் கூட இல்லையே! விநோதினி எப்படி வந்தாள்? தலைவலி, காய்ச்சல் என்று விடுமுறை போட்டுவிட்டு, வருங்காலக் கணவனோடு, வெளியே சுற்ற வந்துவிட்டாளா?



படிப்பை முடித்தாக வேண்டும் என்று நிபந்தனை வைத்த ஞானசேகரன். இப்போது மகளை எப்படி வரவேற்றிருப்பார், என்று யோசிக்கும் போது, அவர் டெல்லிக்குச் சென்றிருந்தது, அவனுக்கு நினைவு வந்தது!

அதனால்தான், இவ்வளவு தைரியமாக வந்திருக்கிறாள்!

பொல்லாத பெண்! தினம் பார்க்கும் தந்தையிடம் வருங்கால மைத்துனன் சொல்லி விடுவானோ என்கிற பயமே இல்லாமல் படிப்பை விட்டு விட்டு வந்திருக்கிறாளே என்று எண்ணியபோதும், சுகவனேசனுக்குச் சிரிப்பும் சேர்ந்தே வந்தது!

போகட்டும்! இந்தச் சமயத்தில் இல்லாமல், வேறு எப்போது இந்த மாதிரிக் குறும்புகள் செய்து மகிழப் போகிறார்கள்? போகட்டும்! இதைப் போய், அவள் தந்தையிடம் வத்தி வைக்க வேண்டாம்!

அந்த வார இறுதி வரை, மயூரனைக் கண்ணில் காணவே முடியவில்லை!

இருவருமே, தப்புத் தண்டா வரை போகிறவர்கள் இல்லை என்பதால், சுகனும், தம்பியிடம் தூண்டித் துருவவில்லை!

புது டெல்லிக்குச் சென்ற ஞானசேகரனின் வேலைகள், அவர் எண்ணியது போல ஒரே வாரத்தில் முடியாததால், அவர் மேலும், ஒரு வாரம் அங்கே தங்க வேண்டியது ஆயிற்று!

அதைப் பற்றி சுகன் கவலைப்படவில்லை! செய்யும் வேலைக்குப் பணப் பட்டுவாடாவுக்கு வேண்டிய ஏற்பாட்டை அவர் எங்கிருந்தாலும் சரிவரச் செய்து விடுவார்! எனவே, அவர் எத்தனை நாட்கள் வெளியூரில் இருந்தாலும், சுகனின் வேலை [illegible] நிற்காது!

ஆனால் ஞானசேகரன், சுகவனேசனிடம் வேண்டிக் கொண்ட இன்னொரு விஷயம்தான், அவனை வண்டாய்ச் சுற்றத் தொடங்கிவிட்டது!

"ஒரு வேண்டுகோள், சுகன்! எவ்வளவு வேலை இருந்தாலும் என் மாப்பிள்ளையை, ஞாயிற்றுக் கிழமை மட்டுமேனும், பங்களூருக்கு அனுப்பி விடுங்கள்! வாரம் ஒருமுறையேனும் அவரைப் பார்க்கவில்லை என்றால், வினுக் குட்டிக்குச் சாப்பிடவே முடியவில்லையாம்! அழுகையாக வருகிறதாம்! இரண்டு வாரமாக, மயூரேசன் அங்கே போகவே இல்லையாமே! என் பெண் அழுதால், என்னால் தாங்க முடியாது, தம்பி! அதனால், இந்த வாரமாவது, உங்கள் தம்பியைப் பங்களூருக்கு அனுப்பி வையுங்கள்! இல்லாவிட்டால், எக்கேடோ கெடட்டும் என்று, படிப்பைத் தூக்கி எறிந்துவிட்டு, விநோதினி சென்னைக்கு வந்து, உட்கார்ந்து விடுவாளாம்! என்னையே மிரட்டுகிறாள்!" என்றார் அவர்!

அப்படியானால், ஓசைப்படாமல் மயூரேசன் யாருடன் சுற்றுகிறான்?

சுமார் பன்னிரண்டு நாட்களாக!

சட்டெனப் பதில் கிடைத்தது!

இந்துமுகி!

அவள் வந்ததும், பன்னிரண்டு நாட்கள்தானே ஆகின்றன!

என்னஇது?

பெண்கள் என்றால், மயூனுக்கு ஒரு தனி இளக்கம் உண்டுதான்! கல்லூரியில் படிக்கும்போது, யாரோ ஒரு பெண் கஷ்டப் படுகிறாள் என்று, அவளை மணந்து பாதுகாப்புக் கொடுக்கலாமா என்று, அண்ணனிடமே கேட்டவன்தான்!

ஆனால், தம்பிக்கு இரக்க சுபாவம் என்றுதானே சுகவனேசன் எண்ணிக் கொண்டிருந்தான்! மலருக்கு மலர் தாவும் வண்டு மனம் என்று எண்ணவே இல்லையே!

அதுவும், ஒரு பெண்ணோடு திருமணமே நிச்சயம் ஆன பிறகு, இது என்ன பைத்தியக்காரத்தனம் செய்கிறான்?



இன்னும்கூட, தன் தம்பியை அப்படி நினைக்க, சுகவனேசனால் முடியவில்லைதான்! ஆனால், இவளோடு சுற்றுவதில், பங்களூரில் தனக்காக ஒருத்தி காத்திருக்கிறாள் என்பதை மயூரன் மறந்துவிட்டான் என்பது உண்மைதானே?

எண்ணங்கள் ஓடும்போதே, சுகன் தன்னைத் தானே கடிந்து கொண்டான்!

மயூரேசன் பங்களூருக்குச் செல்லாததின் காரணம் இந்துமுகிதான் என்று, அவனுக்கு எவ்வித நிச்சயமும் இல்லை! அப்படியிருக்க, அவனுடைய அருமைத் தம்பியைப் பற்றி, இப்படிக் கண்டபடி நினைக்கலாமா?

ஆனால், இதைப் பற்றித் தெரிந்து கொள்வதில் காலம் தாழ்த்தக் கூடாது என்று முடிவு செய்து, முக்கியமான வேலைகளை மட்டும் கவனித்துவிட்டு, வீடு நோக்கிச் சென்றான்.

அங்கே மயூரேசனும், இந்துமுகியும் சாப்பாட்டு அறையில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்! இருவரையும் வாஞ்சையுடன் பார்த்தபடி, சுந்தரவல்லி எதையோ தட்டுகளில் பரிமாறிக் கொண்டு இருந்தாள்.

தன் சமையலை ரசித்துச் சாப்பிட யாராவது கிடைத்தால் போதும்! மற்ற விதமான சிந்தனைகள், சுந்தரவல்லிக்குத் தோன்றுவதே இல்லை!

இளையவர்கள் இருவருமாக, எங்கோ வெளியே சென்றுவிட்டு வந்திருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரிந்தது! இந்துமுகியின் கைப்பையும், மயூரனின் கைப்பெட்டியும் ஒன்றருகே வைக்கப்பட்டிருந்த விதமே, சுகனின் கோபத்தைக் கிளப்பியது!

ஆக, இவளோடுதான் மயூரன் சுற்றிக் கொண்டு இருக்கிறான்! ஆனால் பங்களூரில் அவனுக்காக ஒருத்தி, காற்றிலிட்ட பட்டினியாகச் சாப்பாடு தண்ணீர் இன்றிக் கரைந்து கொண்டு

இருக்கிறாள்! இவனானால், அடுத்து ஓர் அழகான பெண்ணைக் கண்டதும் முன்பு நடந்தது அத்தனையையும் மறந்து விட்டு இவள் பின்னே அலைகிறான்!

இது மட்டும் ஞானசேகரனுக்குத் தெரிந்தால் என்ன ஆகும்? பேசாமல், ஹோட்டல் வேலையை வேறு யாரிடமாவது கொடுத்து, இவர்களது தொழிலைக் கெடுத்து நிர்மூலம் ஆக்கிவிட மாட்டாரா?

'வேலை சரியில்லை., அதனால் ஆளை மாற்றினேன்' என்று ஒரு வதந்தியைக் கிளம்பி விட்டால் போதுமே!

பின் விளைவுகள் எதையும் எண்ணிப் பார்க்கும் பழக்கமே, இவனுக்கு வராதா?

தாயிடமும், தம்பியிடமும் கோபத்தைக் காட்டாமல் அடக்கியே பழகியிருந்தவனின் ஆத்திரம், இந்த நிலைமைக்கு ஆதி காரணமானவளிடம் பாய்ந்தது!

எல்லாம். இந்த இந்துமுகியால் வந்தது! சும்மா டெல்லியிலேயே இருந்து தொலைப்பதற்கு என்ன? இங்கே திரும்பி வந்து, அவன் உயிரை வாங்குகிறாளே!

இவளை எப்படி விரட்டுவது?

"சேப்பங்கிழங்கு வறுவல் இன்னும் கொஞ்சம் வைக்கிறேன், இந்தும்மா! உனக்கு ரொம்பப் பிடிக்குமே என்று செய்யச் சொன்னேன்! செய்து முடிக்கும் வரை, பக்கத்திலேயே நின்று பதம் பார்த்து எடுக்கச் சொன்னேன்! சாப்பிட பெரியவனுக்கும்..." என்று சொல்லிக் கொண்டு இருந்த சுந்தரவல்லியின் பார்வை அறையின் வாயிற்புறமாக நின்றிருந்த மூத்த மகனின் மீது விழவும், அப்படியே பூரித்துப் போனாள் "அடடே பெரியதம்பி! எப்போம்மா வந்தாய்? வாவாவா! உனக்கு நூறு ஆயுசு கண்ணா! இப்போதுதான், உனக்கும் இந்த வறுவல் பிடிக்கும் என்று சொல்லிக் கொண்டு இருந்தேன்! கையைக் கழுவி விட்டுச் சாப்பிடு, வா!" என்று அவனைக் குதூகலத்துடன் அழைத்தாள்.



"அய்யோ!" என்று பயந்த மாதிரி நடித்தாள் இந்துமுகி. "இப்போதே நான் இன்னும் கொஞ்சம் எடுத்துக்கொள்கிறேன், சாமி! இது பெரிய அண்ணன் கைக்குப் போனால் அப்புறம் ஒரு துண்டுகூட மிஞ்சாது! மய்யூப் பையா, உனக்கு வேண்டுமானாலும், முதலிலேயே எடுத்துக் கொண்டு விடு. இந்தா!" என்று, தன் தட்டில் சில வறுவல் துண்டுகளைப் பரிமாறிக் கொண்டு, பாத்திரத்தை மயூரனின் பக்கம் தள்ளினாள்.

"ஒரு துண்டு கூட எடுக்காதேடா!" என்றான் சுகவனேசன், அறையில் ஒரு புறமாக இருந்த வாஷ் பேசினில் கையைக் கழுவியபடி! "அப்படி வீங்கிக் கிடப்பவர்கள், அவர்களே முக்கி முக்கி, இதைச் சாப்பிடட்டும்! எனக்கு வேறு எதையாவது வையுங்கள், அம்மா!" என்றபடி, ஓர் இருக்கையில் அமர்ந்தான்!

சுகவனேசனுக்கு வயிறு காலியாக இருந்தாலும், சாப்பிடுகிற மனநிலை கொஞ்சமும் இருக்கவில்லை. ஆனால், உணவருந்தும் நேரத்தில் வீட்டுக்கு வந்துவிட்டுச் சாப்பாடு வேண்டாம் என்றால், தாயின் மனம் புண்படும்! அத்தோடு, தம்பியிடமும் சற்றுப் பேசியே ஆக வேண்டும்!

இவளை எப்படி விரட்டுவது என்றும் பார்க்க வேண்டும்!

தாய்க்கும் தம்பிக்கும் பிடித்துப் போய்விட்ட இவளை விரட்டுவது கடினமே! ஆனால், அதற்காகக் கையைக் கட்டிக்கொண்டு, சும்மா இருக்க முடியாதே!

ஆனால், பேச்சில் சிறு குட்டு வைக்க அவன் முயன்றபோது, இந்துமுகி வேடிக்கையாகவே திருப்பினாள். "முக்கி முக்கி, ஒரே வேளையில் இதை முழுவதும் சாப்பிடுவானேன்? ஆன்ட்டி எனக்காகத் தினமும்கூடச் செய்து தருகிறீர்கள்! அப்படித்தானே ஆன்ட்டி? அதனால், உங்கள் மூத்த மகனுக்கும் வையுங்கள் ஆன்ட்டி! இல்லாவிட்டால், பெரிய அண்ணன் விடுகிற பெருமூச்சில், எனக்கு நாலு நாட்கள் வயிறு வலிக்கும்! எனக்கு வயிற்றுவலி என்றால் ரொம்பப் பயம்!" என்று பயந்த மாதிரி கண்ணை உருட்டிக் காட்டினாள்.

தன்னை மீறி முறுவலித்துவிட்டு, "வயிற்று வலி என்றால், சாப்பிடமுடியாதே என்றுதானே பயம்?" என்று மடக்கினான். சுகவனேசன்.

எல்லோருடனும் சேர்ந்து சிரித்த போதும், "அதுவும்தான்! ஏன், நாலு நாள் பட்டினி. நீங்கள் கிடப்பீர்களா?" என்று திருப்பிக் கொடுத்தாள் இந்துமுகி.

"நான் ஏன் பட்டினி கிடக்க வேண்டும்? முக்கி முக்கிச் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்கு உருண்டு உருண்டு போகிறவர் களுக்குத் தான், இந்த மாதிரி வைத்தியம் தேவைப்படும்!"

"பாருங்கள் ஆன்ட்டி, திருப்பித் திருப்பி, நான் முக்கி முக்கிச் சாப்பிடுவேன் என்றே கிண்டலடிக்கிறார்! என் அம்மாவும் அப்பாவும் இப்படியொரு பெயரை எனக்கு ஏன்தான் வைத்தார்களோ என்று இருக்கிறதே!" என்று சின்னவள் சிணுங்க, சுந்தரவல்லி இந்துமுகிக்காகப் பரிந்து கொண்டு வந்தாள்!

"ஒரேயடியாகச் சாப்பாட்டை வைத்து என்னடா, கேலி? சும்மாயிரு!" என்று, தன் பெரிய மகனைக் கடிந்தாள்.

"அழுகுணி ஆட்டம்! பதில் சொல்ல முடியவில்லை என்றவுடன், அம்மா காலைப் பிடிக்கிறாய்! சரி, சரி! பிழைத்துப் போ!"

சூழ்நிலைக்குச் சரியான வார்த்தைகளை, சுகவனேசனின் வாய் சொன்ன போதும், மனம் வேகமாக வேறு திசையில் வேலை செய்தது.

சற்று முன் எண்ணியதுபோல, இந்த வீட்டில் இரண்டு பேரை வளைத்து விட்டிருக்கும் இவளை விரட்டுவது, கடினமே!

ஆனால், அதற்காகச் சும்மா இருக்க முடியுமா?

எவ்வளவோ பெரிய சவாலை ஏற்று, வெற்றியே பெற்றவனுக்கு இது எம்மாத்திரம்? ஒரு சின்னப் பெண்! வெறும் சுண்டைக்காய் சமாசாரம்! ஒரு வழி இல்லை என்றால் இன்னொன்று!

சுகவனேசன் தம்பியிடம் திரும்பினான்!






சிறு வயதில் பார்த்த அளவில், இந்துமுகியுடைய குடும்பம் நல்ல விதம்தான். அவளுடைய தாயார் தாமரையிடம், சுந்தரவல்லிக்குச் சொந்தத் தங்கை போலப் பிரியம் உண்டு!

ஆனால், அவனுடைய தாயாருக்கு எல்லோரையுமேதான் பிடித்துப் போகும்!

ஏமாற்றிக் கையெழுத்து வாங்கிய மைத்துனர்களைக் கூட, பெரியவர், நடுவுளவர் என்று ரொம்பவும் மரியாதையாகத்தான் பேசுவான்! அவர்கள் குடும்பத்தில் ஏதேனும் விசேஷம் என்று அவர்கள் பெயருக்காக அழைக்க வந்தாலும், உச்சி குளிர்ந்து, வீட்டில் இருப்பதையெல்லாம் வைத்துக் கொடுத்து, விருந்து மரியாதை செய்துதான் அனுப்புவாள்!

அத்தோடு நில்லாமல், அவளுக்கு இது நன்றாக இருக்கும், அவனுக்கு இது நன்கு பயன்படும் என்று யோசித்து, [illegible] பற்றிய கவலையே இல்லாமல், நல்லதாகப் பரிசு கொடுப்பாள்.

தொடக்கத்தில் பண விஷயம், சுகவனேசனுக்குச் சற்றுக் [illegible] தந்த போதும், இவர்களுக்கு இவ்வளவு செலவு தேவைதானா என்று எரிச்சல் ஏற்பட்ட போதும், அதனால் விளைந்த ஒரு சில நன்மைகளைக் கருதி தாயாரை அவன் தடை செய்தது இல்லை!

முக்கியமாக, சுகவனேசனுக்கு எதிராக எதுவும் செய்ய முடியாமல், பெரியவர்களை முடக்கிப் போட்டது, அதுதானே! எல்லாம் சேர்ந்து இழைந்ததால், வெளி ஆட்களின் தொழில்

முறை மரியாதையும் குறையாது இருந்தது. சுந்தரவல்லியின் அன்பு மனதால் கிடைத்த, அடுத்த பெரிய நன்மை!

ஆனால், அந்த வெகுளித்தனமான அன்பு மனமே, இப்போது எல்லாவற்றையும் கெடுத்துவிடுமோ என்று அவன் அஞ்சும்படியும் ஆகிவிட்டது! அப்படிக் கெட்டு விடாமல் காக்க நடவடிக்கையும் எடுக்க வேண்டியதாகவும் ஆயிற்று!

ஆனால், பணத்துக்காக எப்படியும் நடக்கக் கூடிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள் அல்ல, இந்துமுகி!

எனவே, அநாகரீகமாக மயூரேசனை வளைக்க முயற்சிக்க மாட்டாள் என்று ஓர் எண்ணம் சுகவனேசனுக்கு! ஒரு வேளை, காதல் கீதல் என்று லேசாகத் தோன்றியே இருந்தாலும், மயூரேசன் திருமணம் நிச்சயம் ஆனவன் என்று தெரிந்தால் ஒதுங்கிக் கொள்வாள் என்ற நம்பிக்கையில், அந்தப் பேச்சை எடுத்துப் பேசினான், சுகவனேசன்.

"இன்றைக்கு, உன் மாமனார் எனக்கு போன் செய்தார், மய்யூ! இரண்டு வாரமாக, நீ பங்களூருக்குப் போகாததால், அவர் மகள் அங்கே, உண்ணாமல் உறங்காமல் அழுது கரைகிறாளாம்!" என்றவன், இந்துமுகியிடம் திரும்பி, "இவனுடைய வருங்கால மனைவி! அவளுடைய படிப்பை முடித்தால்தான் திருமணம் என்றுவிட்டார், அவளுடைய தந்தை! இவன் வாராவாரம் வந்தால், தொடர்ந்து படிப்பதாக, மகளின் பதில் நிபந்தனை! இந்த அய்யா இரண்டு வாரமாகப் போகவில்லையாம்! என்னவோ நான் தான் வேலை வேலை என்று இவனை அனுப்பாதது போல விநோதினியுடைய அப்பா, என்னைக் காய்ச்சுகிறார்!" என்று வேடிக்கை போல விஷயத்தைக் கூறி முடித்தான்.

சினம் போல, மயூரேசனின் முகத்தில் சிறு சிவப்பு ஏறிற்று! "என்னது? உண்ணாமல் கரைகிறாளா? மிகவும் நல்லது! அம்மா வாங்கி வைத்திருக்கும் ஒட்டியாணத்தைப் போட முடிகிற அளவுக்கு, இடுப்பும் மெலிய இப்படி ஒரு வழி கிடைத்திருக்கிறதே! ரொம்பவும் சந்தோஷம்! இப்படியே



இன்னும் இரண்டு வாரம் கரையட்டும்!" என்றான் எரிச்சலை மறைக்காத குரலில்!

இதேதடா 'கிணறு வெட்ட பூதம் கிளம்பி விட்டதே' என்று, சுகவனேசன் திடுக்கிட்டுப் போனான். இன்னும் இரண்டு வாரங்கள் இங்கேயே உட்கார அல்லவா, தம்பி திட்டம் போடுகிறான்!

"என்னது? என் மருமகள் பட்டினி கிடக்கிறாளா? அவள் உடம்பு என்னத்துக்கு ஆகும்? இந்த வாரம், நான் பாதாம் அல்வாவும், முந்திரி தூள் பக்கோடாவும் செய்து தருகிறேன். கொண்டு போய்க் கொடுத்து, அவளைத் தேற்றிவிட்டு வா!" என்று, கரிசனம் காட்டினாள் சுந்தரவல்லி!

"ஒன்றும் வேண்டாம்! நான் இப்போது, போகப் போவதில்லை!" என்றான் மயூரேசன் வீராப்பாக,

தம்பி இப்படிப் பேசுகிறானே என்று இருந்த போதும், இந்துமுகிக்கு விஷயம் தெரிந்து விட்டதில், சுகனுக்குப் பரம சந்தோஷம்!

பெரிய அதிர்ச்சியோ? சத்தத்தையே காணோமே என்று எண்ணியவனுக்கு, அவளது அதிர்ந்த முகத்தைக் காணவும் பிடிக்கவில்லை! எனவே தம்பியிடம், "ஏய், ஏய், விநோதினி பாவம்டா! ஒருத்தி பிரியமாக இருக்கிறாள் என்றால், அதை மதிக்கத் தெரிய வேண்டும்! இந்த வாரம் கட்டாயம் பங்களூருக்குப் போய்வா!" என்றான் மூத்தவன்!

அதற்குள், "ஆமாம் மய்யூ! எனக்காகப் பார்க்காதே! அதது, உனக்குக் கிடைக்க வேண்டும் என்று இருந்தால், எப்படியும் கிடைக்கும்! அதற்காக, நீ விநோதினியை வாட விட்டு இங்கே காத்துக் கிடக்க வேண்டாம்! பங்களூருக்குப் போய்வா! இரண்டு நாட்களுக்குள், இங்கே ஒன்று ஆகிவிடாது!" என்று சுகவனேசனை ஒத்துப் பேசினாள் இந்துமுகி.

அப்படியானால், இவளுக்குத் தெரியுமா?

சட்டென அவள் முகத்தைப் பார்த்தால், உதட்டில் புன்னகை இருந்தபோதும் கண்களில் சிறு கவலையை அவனால் கண்டுகொள்ள முடிந்தது!

என்ன வருத்தம்?

மயூரேசனுக்குத் திருமணம் ஆகப் போகிறதே என்பதா? ஆனால், அவன்தான் வெகுவாக அவசரப்பட்டு விட்டானே! அவன் கொஞ்சம் பொறுத்திருந்தான் என்றால், இவள் வருத்தப்பட நேர்ந்திராதே என்று எண்ணியவனுக்குத் தன் மீதே எரிச்சல் வந்தது!

இவள் வருத்தப்பட்டாலோ, படாவிட்டாலோ, அவனுக்கு என்ன வந்தது?

இப்போது, விநோதினி வருத்தப்படக் கூடாது! அதுதான், அவனது தொழிலுக்கு நல்லது! எனவே அதுதான் முக்கியம்!

இவளும் வருத்தப்பட்டாலும், விநோதினியிடம் போகத் தானே, சொல்லுகிறாள்!

இந்துமுகியின் பேச்சை வேகமாக மனதில் திருப்பிப் பார்த்து, "ஆக வேண்டிய நேரத்தில் ஆகாமல், இழுத்து நீட்டித் தொல்லை செய்து கொண்டிருக்கும் விஷயம் என்ன?" என்று விசாரித்தான்!

"அது..." என்று தொடங்கிவிட்டு, இந்துமுகியைப் பார்த்து, "சொல்லி விடலாம், இந்து! பெரிய பெரிய ஆட்களை எல்லாம், என்னைவிட அண்ணனுக்கு நன்றாகத் தெரியும்! யாரையாவது பிடித்து, உதவிகூடச் செய்யக் கூடும்! என்னண்ணா?" என்று அண்ணனிடம் கேட்டு முடித்தான்.

"செய்யக் கூடும்தான்! கட்டாயம் செய்வேன்தான்! ஆனால், என்ன அநியாயம் பார்! அது, என்ன விதமான உதவி என்று இன்னும் யாரும் என்னிடம் சொல்லவே இல்லையே!" என்று புருவம் உயர்த்திக் கேட்டான் பெரியவன்!

இந்துமுகி தட்டை அளைந்தபடி சும்மா இருக்க, மயூரன் சொன்னான்! "இந்துவுக்கு ஒரு வேலை வேண்டுமாம்!



அதற்காகத்தான் இரண்டு வாரங்களாகச் சுற்றுகிறோம்! இதோ என்று கைக்கு வருகிற மாதிரி இருக்கிறது, எப்படியோ தட்டிப் போய்விடுகிறது! சுற்றி அலைவதுதான் மிச்சமாக இருக்கிறது! நாளைக்குக் கூட, டாக்டர் நாகேந்திரன் வரச் சொன்னார்! சிபாரிசுக் கடிதம் தருகிறாராம், வாங்கிக் கொண்டு, அப்படியே அருகில்தானே, 'மாயாஜால்?' உள்ளே போய்ச் சுற்றி விட்டு வரலாம் என்று திட்டம்!"

"அந்த இடம் நன்றாக இருக்குமாமே! மது சொன்னான். வீட்டில் அடைந்து கிடக்காமல், இது போல நாலு இடம், இந்துவைக் கூட்டிப் போய் காட்டிவிட்டு வாடா!" என்றாள் சுந்தரவல்லி வெகுளித்தனமாக.

"காட்டுகிறான், ஆன்ட்டி! கிஷ்கிந்தா, ஸ்கேட்டிங்... சென்னையில் புதிதாக வந்திருக்கும் நிறைய இடம், மயூரன் எனக்குக் காட்டி விட்டான், ஆன்ட்டி! பாவம்! என்னால் அவனுக்கு வீண் செலவு!" என்றாள் இந்துமுகி.

"செலவு என்ன? அவனும்தான் ஜாலியாகச் சுற்றுகிறான்! அதோடு, உனக்குச் செய்வதற்குக் கணக்கா, இந்தும்மா?" என்றாள் சுந்தரவல்லி பிரியமாக.

மெய்யாகவே வேலை தேடுகிறார்களா? அல்லது, வேலை தேடுகிற சாக்கில், இருவரும் சேர்ந்து ஊர் சுற்றுகிறார்களா? கிஷ்கிந்தா, ஸ்கேட்டிங், மாயாஜால்...

இதையெல்லாம், சின்ன வயது சிநேகிதிக்குக் காட்டுவதில் பெரிய தப்பு ஒன்றும் இல்லை! ஆனால், இந்த ஊர் சுற்றலின் உற்சாகத்தில், தம்பி, அவனுடைய வருங்கால மனைவியைப் பின்னே தள்ளியதுதான், சுகவனேசனை உறுத்தியது!

புதிதாக ஓர் அழகிய முகத்தைப் பார்த்த மயக்கம் தவிர, இதற்குக் காரணமாக வேறு என்ன இருக்க முடியும்?

நல்ல வேளையாக, ஞானசேகரன் ஊரில் இல்லை! மகனைப் பார்க்க டெல்லிக்குப் போனவர், அவனைப் பிரிய மனமின்றி, அங்கேயே இருக்கிறார்! அவருக்கு மட்டும் மயூரன் இப்படி

இந்துமுகியோடு சேர்ந்து அலைவது தெரிந்தால், எத்தனையோ பிரச்சினைகள் ஏற்பட்டுவிடும்!

அவர் இங்கே வந்து சேருமுன், இந்தச் சுற்றுதலை நிறுத்தியே ஆகவேண்டும்!

சுற்றுதலை நிறுத்த வேண்டும் என்றால், அதற்குச் சொல்லப்படும் காரணத்தை அகற்றியாக வேண்டும்!

அதாவது, இந்துமுகிக்கு ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்தாக வேண்டும்! ஆனால், இந்த வேலை விஷயம், இருவருமாக ஊர் சுற்றுவதற்காகச் சொல்லப்படும் வெறும் சாக்குப் போக்காக இருந்தால்?

இந்துமுகியைச் சந்தேகமாக நோக்கி, "உனக்கு எதற்காக வேலை? உன் அப்பாவுக்கு, முன்பே, ஏதோ பெரிய வேலை ஆயிற்றே! என் மகளை ராணியாக்கும் என்பாரே! ராணிகள் எல்லாம், எப்போதிலிருந்து பிறரிடம் வேலை செய்யத் தொடங்கினார்கள்?" என்று வேடிக்கை போல வினவினான், சுகவனேசன்.

பார்த்தாயா, என்பது போல, மயூரனைப் பார்த்துவிட்டு, "அப்பா பணம் அனுப்புகிறேன் என்றுதான் சொல்லுகிறார்! எனக்குத்தான் பிடிக்கவில்லை! சும்மா இருக்கவும் பிடிக்கவில்லை! இரண்டு பிரச்சினைகளும் தீரும் அல்லவா?" என்றாள் அவள் மெதுவாக.

அவள் முழு உண்மையும் சொல்லவில்லை என்ற உணர்வு சுகவனேசனுக்கு! ஆனால் அதைக் காட்டிக் கொள்ளாமல் "ஒரு கல்லில் இரண்டு மாங்காயாக்கும்! சரி! நீ என்ன படித்திருக்கிறாய்? படிப்பு தவிர, வேறு தகுதிகள் என்னென்ன? என்ன சம்பளத்தில், என்ன மாதிரி வேலை தேடுகிறாய்?" என்று விசாரித்தான்!

மீண்டும் மயூரனைப் பார்த்துவிட்டு, "பி.ஏ நுண்கலை ஆனால், கடைசி செமஸ்டர் எழுதி முடிக்கவில்லை." என்றாள் அவள் சின்னக் குரலில்!



"வாட்!" என்றான் சுகன் வியப்புடன்!" பரீட்சை பயமா? ஆக, இங்கே இருந்தது போலத்தான் அங்கேயும் படித்தாய் என்று சொல்லு! எத்தனை ஆண்டு பெஞ்சி தேய்த்தாய்?" என்று, கேட்டுச் சிரித்தான்.

சற்றுக் கன்றிய முகத்துடன், இந்துமுகி மீண்டும் தட்டில் உள்ளதை அளைய, சிறு கோபத்துடன் மயூரேசன் அண்ணனை நோக்கினான். "இதற்காகத்தான், இந்து உன்னிடம் கேட்கவே தயங்கினாள். அப்போது, அவளுக்கு உடம்பு சரியில்லை! ஏதோ கோஷ்டிச் சண்டையில், பெண்கள் வெளியே போவதே ஆபத்தாகி விட்டது! அதனால்தான், அங்கிள் அவளைத் தாத்தாவோடு, அங்கே அனுப்பி விட்டார்கள், ஒன்றும் விவரம் தெரியாமல், கேலி என்ற பெயரில், கண்டபடி பேசுகிறாயே! இந்துவுக்கு எவ்வளவு வருத்தமாக இருக்கும்?" என்று குறைப்பட்டான்!

"ஐயோ! நீ ஒன்றும் வருத்தப்படாதே, இந்தும்மா! உன் பெரியண்ணனுக்கு, வேலை வேலை என்று வெளியேயே சுற்றுவதில், வீட்டு மனிதர்களிடம் எப்படிப் பேசுவது என்றே மறந்துவிட்டது! காலகாலத்தில் கல்யாணத்தைப் பண்ணி இருந்தால், அவளாவது கற்றுக் கொடுத்திருப்பாள்!" என்று வாய்ப்புக் கிடைத்தது என்று, தன் தீராக் குறையை ஒரு தரம் சொல்லிக் கொண்டாள் பெற்றவள்.

தாயின் பேச்சில், சுகவனேசனுக்கு வருத்தம் ஏதுமில்லை! மாறாகச் சிரிப்புதான் வந்தது! வாய்ப்புக் கிடைத்தால், சுந்தரவல்லி, இதைச் சொல்லிக் காட்டாமல் இருப்பதே கிடையாது! கேட்டுக் கேட்டு, சுகவனேசனுக்கு மரத்துப் போயிற்று எனலாம்! தாயின் விடா முயற்சியைப் பார்த்து, ஒரு புன்னகை வரும் அவ்வளவே!

ஆனால், ஏதோ விதமாயத் தாயின் பேச்சு அவனை உறுத்தியது.

'விடுங்கள்' என்பது போன்ற தலையசைப்புடன் அவன் பேச முற்படுமுன், "எனக்கு வருத்தம் ஏதும் இல்லை, ஆன்ட்டி!

பெரியண்ணன் விளையாட்டாகச் சொல்லுகிறார் என்று எனக்குத் தெரியாதா?'' என்றாள் இந்துமுகி!

அவன் பேசி வாய் மூடுமுன், "என் தம்பியும் உனக்கு மூத்தவன்தானே? அவனைப் பெயர் சொல்லி அழைக்கிறாய்., நான் மட்டும் என்ன பெரிய அண்ணன்? அங்கே யாருமே என்னை அப்படி அழைப்பதும் இல்லை., அத்தோடு, நீ என் கூடப் பிறந்தவளும் அல்ல!'' என்றான் சுகவனேசன்!

எல்லோருமே திகைத்து நோக்கிய பிறகே, தன் குரலின் வேகமும் பேதமும் புரிய, "பின்னே என்ன அம்மா, நான் என்னவோ முந்திய தலைமுறை மாதிரியும், அங்கிள் என்று சொன்னால் வருத்தப்படுவேனோ என்று பரிதாபப்பட்டுப் 'பெரியண்ணா' என்கிற மாதிரியும் சொல்வது போல் அல்லவா தோன்றுகிறது! நான் கேலியாகப் பேசினாலே, என்னவோ, எனக்கு அடுத்தவர் வருத்தமே புரியாது என்கிறீர்களே! எனக்கு எப்படி இருக்கும் என்று யோசித்தீர்களா?'' என்று, தாயிடம் மயூரன் பேசுகிற பாணியைக் காப்பியடித்துக் கேட்டு சமாளித்தான்!

அதற்குள் சுந்தரவல்லியின் உள்ளம் உருகிவிட்டது! "அடடா! நானே அப்படிச் சொல்லிவிட்டேனே! ரொம்ப வருத்தமாக இருந்ததாம்மா? சாரிடாம்மா!'' என்று வருத்தப் பட்டாள்.

தன்னைப் பற்றிய பேச்சு போதும் என்று, சுகவனேசனுக்குத் தோன்றியது! எனவே, இந்துமுகியிடம் திரும்பி, "நுண்கலை என்றாயே., நன்றாக வரையத் தெரியுமா?'' என்று கேட்டான்.

"நிச்சயமாய்! நாங்கள் நாலு பேர் சேர்ந்து, டெல்லியில் ஓர் ஓவியக் கண்காட்சியே நடத்தினோம்! நான் வரைந்ததில், நாலு படங்கள் விற்றன'' என்றாள் அவள் உற்சாகத்துடன்!

ஒரு கணம் யோசித்தான் சுகவனேசன். சட்டென, அவன் முகம் மலர்ந்தது.



இந்துமுகியையும் மயூரேசனையும் முகம் பாராமல் பிரித்து வைக்க, அதே சமயம் அவனுக்கும் லாபகரமான ஒரு திட்டம், அவனுள் தோன்றி விட்டது!

"உனக்கு வேலை கிடைத்துவிட்டது'' என்றான் அவன்.




**சு**கவனேசனின் அறிவிப்பைக் கேட்டு, உற்சாகத்துடன் முதலில் பேசியவன் மயூரேசன்தான். "சொன்னேன், பார்! அண்ணனிடம் சொன்னால் உடனே ஏற்பாடு செய்துவிடுவான் என்றேனே! பார்த்தாயா? எங்கே அண்ணா, வேலை? யாரிடம்? நல்ல சம்பளம் கிடைக்குமா? படிப்பை முடிக்காதபோது, வேலை என்று கேட்பதே கடினமாக இருந்ததா? கடைசியில், எங்கள் இருவருக்குமே, நம்பிக்கையே போய்விட்டிருந்தது! யார் அண்ணா, இது மாதிரி ஆள் கேட்டது?'' என்று பரபரத்தான் அவன்.

"'இது மாதிரி'யா? என்னம்மா இந்து, எப்போதிருந்து நீ ஆடு, மாடு, மேஜை, ஜன்னல் மாதிரி அஃறிணைப் பொருள் ஆனாய்?'' என்று சுகவனேசன் கேட்கவும், ஒரு கவலை தீர்ந்த மகிழ்ச்சியும் இருக்கவே, எல்லோருக்குமே சிரிப்பு வந்தது.

சன்னச் சிரிப்பினூடே, "கடவுளைக் கூட, 'தெய்வம் வந்தது' என்று அஃறிணையில் சொல்வதுண்டே! மய்யூ அந்த மாதிரிச் சொல்லியிருக்கலாம்!'' என்று இந்துமுகி பெருமிதப் பாவனையில் கூறவும், "போட்டாளே, ஒரு போடு!'' என்ற சுந்தரவல்லியின் இடைச் சொருகலில், மீண்டும் ஒரு சிரிப்பலை எழும்பியது!

A-PDF Merger DEMO : Purchase from www.A-PDF.com to remove the watermark



சிரித்து முடித்ததும், "அண்ணா. நான் சொன்னது. இந்து போலப் படம் வரைவது தெரிந்த ஆள் என்றுதான்! உனக்கும் தெரியும்தானே? சும்மா, என்ன இடக்குப் பேச்சு? சொல்லு! ஓவியம் முக்கியமானதாய் என்ன வேலை? ஏதாவது விளம்பர நிறுவனத்தில் கேட்டார்களா?" என்று மயூரன் மீண்டும் வினவினான்.

இந்துமுகியும் ஆவலாகப் பார்க்க, "விளம்பரம் என்கிற அளவில், உன் ஊகம் சரிதான். ஆனால், வேலை வேறு எங்கும் இல்லை! நம் நிறுவனத்தில்தான்! அதாவது இந்துமுகி இந்த வேலையைப் பார்க்கச் சம்மதம் தெரிவித்தால்!" என்று, ஓரக்கண்ணால் அவளை நோக்கிப் பூடகமாகப் பேசினான் அண்ணன்!

"நம் நிறுவனமா? நீ எப்போது விளம்பர நிறுவனம் தொடங்கினாய்? சொல்லவே இல்லையே!" என்றான் தம்பி.

"சொல்லவில்லைதான்! ஆனால், தொடங்காததை எப்படிச் சொல்ல முடியும்?"

"ச்சு! புதிர் போடாமல் விஷயத்தைச் சொல்லு, அண்ணா! நாம் என்ன சோப்பும் பற்பசையுமா தயாரிக்கிறோம், பல்லை, முகத்தைக் காட்டி விளம்பரம் செய்வதற்கு? கட்டிடங்களை விளம்பரம் செய்வதானால், நாமே முதல் போட்டு ஃப்ளாட் கட்டி விற்கும் போதுதான் செய்ய வேண்டும்., அப்போதுதான் கட்டி வரும் என்பாயே! இப்போது வேறு என்ன?" என்று விவரம் கேட்டான் சின்னவன்.

"அது பத்திரிகை விளம்பரத்துக்கு! இது வேறு. நம் சாதனைகளை எல்லாம், அந்தந்தக் கட்டிடங்களின் படங்கள், அவை பற்றிய விவரங்கள் எல்லாவற்றையும் அழகாகத் தொகுத்து, சிறு கையேட்டுப் புஸ்தகம் மாதிரி அச்சடித்து வைத்துக் கொள்வது வசதி என்று கொஞ்ச நாட்களாகவே நினைத்துக் கொண்டிருந்தேன். ஏதாவது கட்டடம் கட்டுவது என்று வருகிறவர்களுக்கு, ஒன்றைத் தூக்கிக் கொடுத்தால்



போதும்! மாதிரிகள் காட்டியது போலவும் இருக்கும்., அதே சமயம் நம் சாதனைகளை விளம்பரம் செய்த மாதிரியும் இருக்கும்! அனாவசியமாக, நம்மை நாமே. 'டப்பா' அடித்துக் கொள்ள வேண்டாம்! இப்போதைக்கு, முதலில் இந்தக் கையேட்டை இந்துமுகி செய்யட்டும்! அப்புறமாக, நம் அலுவலகத்தில், புதுக் கட்டிடங்களின் தோற்றம் வரைகிற வேலை கொடுக்கலாம்!" என்றான் பெரியவன்.

திருப்தியடைந்தவனாக மயூரேசன், இந்துமுகியைப் பார்க்க, "ஆனால் கட்டிடங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாதே!" என்று கவலைப்பட்டாள் அவள்.

"புள்ளி விவரங்கள் நான் தருகிறேன். இடங்களையும் காட்டுகிறேன். படம் வரைந்து, நான் தரும் விவரங்களைக் கொண்டு, அழகாகக் குறிப்பு நூல் ஒன்று தயாரிப்பது உன் பொறுப்பு! முடியுமா?" என்று கேட்டான், சுகவனேசன்! "முடியாவிட்டால், இப்போதே சொல்லிவிடு! நான் வேறு ஆள் பார்க்க வேண்டும்!"

நிமிர்ந்து, "ஏன் முடியாது? விவரங்களை நீங்கள் தரப் போகிறீர்கள்! படங்களும் அப்படியே, எளிதாக, வீட்டிலிருந்தே செய்துவிடலாமே!" என்றாள் இந்துமுகி சவாலை ஏற்று.

"என்னது? வீட்டில் இருந்தபடியாகவா? அதெல்லாம் நடக்காது, தாயே! உனக்கு வேண்டிய முக்கியக் குறிப்புகள் எல்லாம் அலுவலகத்தில் இருக்கின்றன! என்னென்ன என்று சொல்லுவேன், அதற்குமேல், உன் பொறுப்புதான். கட்டிடங்களை, நேரில் போய்ப் பார்க்க வேண்டியிருக்கும்! என்ன சொல்லுகிறாய்? செய்கிறாயா? ஒரு வேளை, என் அலுவலகத்துக்கு வந்து வேலை செய்யப் பிடிக்காமல், தடை, தயக்கம் ஏதாவது இருக்கிறதா?" என்று, லேசாகக் கண் இடுங்கக் கேட்டான் சுகன்.

"உன் அலுவலகத்துக்கு வந்து வேலை செய்ய, இந்து ஏன் தயங்கப் போகிறாள்? அதுதான், நன்றாக ஏசி செய்து வைத்திருக்கிறாயே!" என்றாள் சுந்தரவல்லி,

"ஆமாமாம்! இரண்டு வாரங்களாக, வேகாத வெய்யிலில், நீ என்னமாக வேலை செய்தாய் என்று நானும்தான் பார்த்தேனே! கிஷ்கிந்தா, மாயாஜால்.... அப்பப்பா! என்ன வெயில்! அதில்தான் என்னே, உன் உழைப்பு!" என்று சுகன் புன்னகையோடு கிண்டலடிக்க, மயூரன் தன்னை மீறிச் சிரித்தான்!

"அதானே! ஏதாவது ஒரு வழியில் சொல்லிக் காட்டாமல் விட மாட்டாயே! ஆனால், ஒரு சின்ன விவரம்! மாயாஜால் வேலை, இன்னமும் செய்து முடிக்கவில்லை!" என்று சிரித்த போதும், கூடவே, "இப்போதைக்கு, முதலில் எந்தப் பக்கம் போக வேண்டும் அண்ணா? சொல்லு, போகிறேன்! இந்துவின் வேலைக்காக அலையவேண்டியதுதான், இனி இல்லையே!" என்று, அண்ணனிடம் வேலை விவரமும் கேட்டுக் கொண்டான்.

உண்டு முடித்ததும், உடனேயே வேலையைப் பார்க்கக் கிளம்பிச் சென்றுவிட, சுகவனேசனுக்கு, 'அப்பாடி' என்று ஆறுதலாக இருந்தது!

ஒரு பிரச்சினை இப்போதைக்கு ஓய்ந்தது! இதை நிரந்தரம் ஆக்க வேண்டும்! மீண்டும் தலை தூக்க விட்டுவிடக் கூடாது!

இதே யோசனையாக இருந்த சுகவனேசன், தற்செயலாக, பங்களூருக்குச் சென்றிருந்த ஒரு வாடிக்கையாளரை நேரில் சந்தித்து, அவரது கட்டிடத்தில் ஒரு மாற்றம் குறித்துத் தெளிவாகத் தெரிந்துகொண்டு, அப்படியே விநோதினியையும் பார்த்துவிட்டு, மயூரேசன் திரும்பி வர, ஏற்பாடு செய்தான்!

தம்பி சந்தோஷமாகப் போனது போலத்தான், அவனுக்குத் தோன்றியது!

ஆனால், அவன் பயணம் கிளம்புகிற சமயத்தில் வந்த இந்துமுகியிடம், "உன்னை இன்னமும் 'மாயாஜாலு'க்குக் கூட்டிப் போகவில்லையே!" என்று மயூரன் வருத்தப்பட்டது அவன் வயிற்றில் புளியைக் கரைத்தது!



"மாயாஜாலோ, இந்துவோ எங்கேயும், ஓடிப் போகப் போவதில்லை! எனவே, இப்போது கிளம்புகிற வழியைப் பார்!" என்று விரட்டி அனுப்பி வைத்தான்!

திரும்பி வந்த பிறகும், "உன்னை அலுவலகத்தில் கொண்டு போய் விட்டுவிட்டு, நான் என் வேலைகளைப் பார்க்கிறேன்!" என்று இந்துமுகியைத் தன்னுடன் வருமாறு அழைத்த மயூரனை, நேரடியாக சைட்டுக்கு அனுப்பிவிட்டு, தன்னுடனேயே அவளை அலுவலகத்துக்கு அழைத்துப் போகத் தொடங்கினான்!

அத்தோடு, விடுமுறை நாட்களில் வேடிக்கை விநோதங்கள் பற்றிய எண்ணமே வராதபடி, இந்துமுகிக்கு வேலைகள் அமைத்துக் கொடுத்தான்!

தலை நிமிர முடியாத அளவுக்குக் கடுமையான வேலை என்று சொல்ல முடியாது! ஆனால், விடுமுறை நாட்களில், கையில் எடுத்துப் போய்ச் செய்து முடிப்பதற்குக் கட்டாயமாக ஏதாவது இருக்கும்!

அப்படி எதுவும் இல்லை என்றாலும், "இன்று முகப்பேர் பக்கமாகப் போகிறேன்! அங்கே, நாம் முதலில் கட்டிய இரட்டை வீடு ஒன்று இருக்கிறது! பார்த்துவிட்டு வரலாம், வா!" என்று, அவளைத் தன்னுடனேயே அழைத்துச் சென்று விடுவான்!

மயூரேசனும், பங்களூர் சென்று வரும் பழக்கத்தில் மீண்டும் திரும்பிவிடவே சுகவனேசனால், கொஞ்சம் நிம்மதியாக இருக்க முடிந்தது!

ஆயினும், தம்பியும் இந்துமுகியுமாகத் தனிமையில் அரட்டை அடிக்க விடாமல் தடுப்பதில், அவன் முழுக் கவனம் வைத்திருந்தான்!

இல்லையென்றால், அது, அவனது தொழிலை அல்லவா பாதிக்கும்!

எட்டு ஆண்டுகளாக, ஊண், உறக்கம் பாராமல் வளர்த்து இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கும் தொழில் ஆயிற்றே! அதைப் பாதிக்க விடலாமா?

பொதுவாக, ஏதாவது அலுவல் சம்பந்தமாகப் பேசியபடியே, அவளை வீட்டில் கொண்டு விட்டுவிட்டு வருவதும், சுகவனேசனுக்கு வழமையாயிற்று.

ஒருநாள் வீட்டில் எல்லோருமாகச் சேர்ந்து இருக்கும் போது, மீண்டும் 'மாயாஜால்' பேச்சு வரவே, அங்கே செல்லும் வழியில் ஓர் இடத்தை இந்துமுகிக்குக் காட்டும் சாக்கில், அவனே, 'மாயாஜாலு'க்கும் அவளை அழைத்துச் சென்று வந்தான்.

அன்றிரவில், இந்துமுகியை அவள் வீட்டுக்கு அழைத்துச் சென்றபோது, அவளுடைய தாத்தா, பாட்டியுடன் சற்று நேரம் பேசும்படி ஆயிற்று.

அப்போது, "இங்கெல்லாம், பாப்பா எவ்வளவு நேரம் கழித்து வந்தாலும் பயமின்றி இருக்க முடிகிறது! ஆனால், டெல்லியில் பெரிய தொல்லையப்பா! துணைக்கு யாராவது கூடவே போய்க்கொண்டு இருக்கும்படி ஆயிற்று! அப்படி ஆள் போனாலும் கூட தடிப் பசங்கள் என்ன ஆட்டம் போடுகிறார்கள்!" என்றார் பெரியவர்!

"வம்பு பண்ணுகிறவர்கள் எல்லா இடங்களிலும் இருப்பார்கள், தாத்தா! கொஞ்ச நாளைக்கு முன், இங்கேகூட இது போலச் சீண்டலில் சிக்கி, ஒரு பெண் இறந்தே போனாள்! இதற்காகத் தனிப் போலீஸ் படையே வைத்தும், இந்தப் பிரச்சினை முழுமையாக ஒழியவே இல்லை! அங்கங்கே இருக்கத்தான் செய்கிறது!" என்றான் சுகவனேசன்.

"இருந்தாலும், அந்த மாதிரி இல்லை, சுகம்! ஒருத்தனைக் குறி வைத்து, ரௌடிகள் வைத்து, வெளியே தலை காட்ட முடியாமல்... இப்போது, நாங்கள் டெல்லியை விட்டு இங்கே எதற்காக வந்தோம் என்று நினைக்கி..." என்று சொல்லிக் கொண்டு வந்தவர், கைப்பையையும், ஃபைலையும் உள்ளே வைத்து விட்டுத் திரும்பி வந்த பேத்தியின், "போதும் தாத்தா!"வில் பேச்சை நிறுத்தினார்.



"ஏம்மா? நம்ம பையன்தானே? சொன்னால் என்ன? உன் அம்மாவானால், 'அண்ணன், அண்ணி' என்று, சுகத்துடைய பெற்றோரைப் பற்றி அவ்வளவு உயிராகப் பேசுகிறாள்! இங்கே இருந்தவரை, அப்பாவும் ரொம்பப் பிரியமாக இருப்பாராமே! இப்போது, அம்மாவோடு பிள்ளைகள் இரண்டு பேரும், அதே பாசத்தோடு பழகுகிறீர்கள்! இரவாகி விட்டால், அவளைக் கொண்டு வந்து விடுகிறீர்கள், பாருங்கள்! ஆனாலும், நமக்கு அதிருஷ்டம்தான்! பக்கத்து வீடு, இவர்களது என்று தெரியாமலே, இந்த 'அவுட்ஹவுசு'க்கு குடி வந்தோமே!" என்று வியந்தார் பெரியவர். "இப்போது பார், எவ்வளவு பாதுகாப்பாகத் தோன்றுகிறது! டெல்லியில், அவ்வளவு வசதிக்கு நடுவிலும் நிம்மதியே இல்..."

"டெல்லிப் பேச்சுதான் வேண்டாம் என்றேனே, தாத்தா!" என்று அலுப்புடன் சிணுங்கினாள் இந்துமுகி. "அவருக்கு எவ்வளவோ வேலை! எதையாவது பேசிப் போரடிக்காமல், அனுப்பி வையுங்கள்! நீ நீங்கள் கிளம்புகிறீர்களா, சுகன்? ஏதோ ஃபைல் பார்க்க வேண்டும் என்றீர்களே!" என்று, அவனை வழியனுப்பும் பாவனையில் வாயிற்புறமாகத் திரும்பினாள்.

விடைபெறும் விதமாகப் பெரியவர்களிடம் முறுவலோடு தலையசைத்துவிட்டு, சுகவனேசனும் எழுந்து நடந்தான்.

வாயிலை அடைந்ததும், ஒரு கணம் அவளைக் கூர்ந்து நோக்கிவிட்டு, "ராஜனா? அல்லது ராவணனா?" என்று கேட்டான். "ராஜன் என்றால், பிருத்விராஜனைச் சொன்னேன்!" என்று கேலியாகக் கேட்டு முறுவலித்தான்.

தலையைச் சிலுப்பி, "நான் சீதையோ, சம்யுக்தையோ அல்ல என்கிறபோது, யார் யாரோ, பிருத்விராஜனாகவும், ராவணனாகவும் இருந்தால், எனக்கு என்ன?" என்றாள் அவள்!

"பெரிதாக ஒன்றும் இல்லை! என்ன, மூட்டை முடிச்சோடு, டெல்லியிலிருந்து, இங்கே தூக்கி வீசியிருக்கிறார்களே... அதுதான் யோசிக்க வைக்கிறது!"

அவனை ஒரு பார்வை பார்த்தாள் இந்துமுகி! உடனேயே முகம் மாற, "நீங்கள் யோசிப்பதா நம்ப முடியவில்லையே! அது, மூளையிருப்பவர்கள் செய்கிற காரியம் ஆயிற்றே!" என்று குருவியாய்த் தலை சரித்து அவள் நோக்க, சுகவனேசன் தன்னை மீறிச் சிரித்தவாறே, "ஆமாம் ஆமாம்! மூளையிருந்தால், உனக்குப் போய் வேலை கொடுப்பேனா?" என்று அவளையும் சிரிக்க வைத்துவிட்டுத் தன் வீட்டுக்குச் சென்றான்.

நகை முகம் மாறாமலே, தன் அறையை நோக்கி நடந்த சுகவனேசன், ஹாலில் அமர்ந்து, டீவி பார்த்துக் கொண்டிருந்த தாயார், தன்னை விசித்திரமாகப் பார்ப்பதைக் கவனிக்கவே இல்லை!



சுகவனேசனின் சாதனைப் பட்டியலைப் பார்க்கப் பார்க்க, இந்துமுகிக்கு அவன் மீது, தனி மரியாதை ஏற்படலாயிற்று!

சுகனுக்கு வேண்டியது, ஒவ்வொன்றாக, அவனது சுகன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கட்டிய கட்டிடங்களின் தோற்றம் கண்ணைக் கவரும் விதமாக வரையப்பட்டிருக்க வேண்டும்! அவற்றைப் பற்றிய குறிப்புகள் கருத்தைக் கவரும் விதமாக எழுதப்பட்டிருக்க வேண்டும்! அவ்வளவே!

ஆனால், தேவையான குறிப்புகளுக்காக, சம்பந்தப்பட்ட ஃபைல்களை ஆராய, ஆராய சுகவனேசன் என்கிற இளைஞன் தன் இருபதாவது வயதிலிருந்து செய்து வந்திருக்கும், இமாலய சாதனை அவளுக்குப் புரிய வந்தது!



இவ்வளவு பெரிய பளுவைச் சுமந்து சாதித்தவன், அவ்வப் போது, கொஞ்சம் எரிச்சலைக் காட்டினால், அதைத் தவறாகக் கருதக் கூடாதுதானே?

இப்போது தான் செய்யும் வேலை, இவனுக்குக் கொஞ்சமேனும் பயன்படக் கூடும் என்றால், அது, ஒரு பெரும் புண்ணியம் என்று தோன்ற, கையேட்டு வேலையை, இரு மடங்குக் கவனத்துடன் செய்தான்!

அவ்வப்போது, அவனே மெச்சும் அளவுக்கு!

மெச்சத்தான் செய்தான்! உண்மையான உழைப்பைப் பாராட்ட, அவன் தயங்குவது இல்லை என்பதையும் இத்தனை நாளில், இந்துமுகி பலமுறை கண்டிருந்தாள்! அவன் தந்த தாராளமான ஊதியத்தை விடவும், அவனது பாராட்டே அவளுக்குப் பல மடங்கு மகிழ்ச்சியைத் தந்தது!

அவனோடு, கட்டுமானப் பணி நடக்கும் இடங்களுக்குச் செல்லும் ஒவ்வொரு தடவையும், அவளது அறிவுக்குப் பெரு விருந்தாகவே அமைந்தது!

கட்டுமானப் பணியாளர்கள்; அவனை ஆவலோடு வரவேற்று, அவனைச் சூழ்ந்து நின்று, சந்தேகம் கேட்பதும், நன்றி தெரிவிப்பதும், உதவி கேட்பதும், சுகவனேசன் இன்முகத்தோடு அவர்களோடு பேசுவதும், இந்துமுகிக்கு வியப்புடன் மகிழ்ச்சியையும் தந்தன!

தொழிலாளர்களோடு அவன் கலந்து பழகுவதைப் பார்த்துக்கொண்டு நிற்பது, அவளுக்கு மிகவும் சுவாரசியமான பொழுது போக்கு எனலாம்!

அவளையும், சுகன் அலட்சியமாக நடத்தவில்லை!

அவ்வப்போது, சுருக்கென்று சிறு குத்தல் கலந்த சீண்டல்கள் இருந்தபோதும், அவனோடு வேலைக்குச் சென்று வருவது, அவளுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று!

இன்றியமையாதது என்பார்களே, அந்த அளவுக்கு!

ஒரு நாள், ஒரு பெரிய வீட்டு வேலை நடந்து கொண்டிருக்கும் இடத்துக்கு, சுகவனேசன் இந்துமுகியை அழைத்துச் சென்றான்.

நகர்ப்புறம் தாண்டி, சற்று மரம் செடி கொடிகள் அடர்ந்த இடம் அது!

பொதுவாகத் தேவைக்கு மேலாக, அதாவது, கட்டடம் கட்டுமிடம், போக வரத் தாராளமான வழி, பாம்பு பச்சைகளை விரட்டுவதற்காகத் தரையோடு படர்ந்து கிடக்கும் செடி, கொடிகள் தவிரப் பசிய மரங்களை வெட்டுவதை, சுகவனேசன் தவிர்த்து விடுவான்.

அதற்குமேல் வெட்டுவதானால், அது கட்டடத்தின் உரிமையாளரின் விருப்பம்.

இதுபோன்ற இடங்களில், பல வண்ணப் பட்டாம் பூச்சிகளைப் பார்த்து ரசிப்பதில், இந்துமுகிக்கு அலாதி விருப்பம் உண்டு என்பதால், அவளையும் கட்டாயமாகத் தன்னோடு அழைத்துச் செல்வான்!

அன்றும் அப்படித்தான் சென்றிருந்தார்கள்.

இசை வல்லுனரான உரிமையாளருக்காக, இசைக் கருவிகளின் வடிவத்தில் அந்தக் கட்டிடத்தில் அமைக்கப் பட்டிருந்த கிரில் வேலை சம்பந்தப்பட்ட குறிப்புகளை எடுத்துக்கொண்டு, வீட்டின் பின் பகுதியில் இருந்த பெரிய தோட்டப்பகுதியைப் பார்த்துக் கொண்டிருந்தனர்!

“பூஜைக்குப் பூச்செடிகள் வைக்க வேண்டும் என்கிறார். மரங்களை வெட்டாமல் இருந்தால் நன்றாக இருக்கும்...” என்று, சுகவனேசன் சொல்லிக் கொண்டிருந்தபோது, வண்டு ஒன்று ரீங்கரித்தபடியே இந்துமுகியின் முகத்தருகில் பறந்து வந்துவிட்டது!

அனிச்சையாகக் கையை வீசி, அதை விரட்ட அவள் முயன்றபோது, அவளது விரலில் இருந்த மோதிரம் கழன்று வண்டின் பின்னே பறந்தது.



இன்னும் சற்று அதிக வேகத்துடன் அவள் கையை வீசியிருந்தால், அந்தச் செடி கொடிகளின் சருகுகளில் விழுந்து, மோதிரம் தொலைந்தே போயிருக்கக் கூடும்!

ஆனால், சட்டெனச் சரிந்து, மோதிரம் தரையில் விழுமுன், தேர்ந்த கிரிக்கெட் வீரனைப் போல, சுகவனேசன் அதைக் ‘காட்ச்’ பிடித்துவிட்டான்!

“அந்தக் காலத்தில், நெல்லை காய வைத்திருக்கும் போது, அதைக் கொத்தித் தின்ன வரும் கோழியைக் காதில் அணிந்திருக்கும் குழையை எடுத்து வீசித் துரத்துவார்களாம்! அதை, நான் நம்பியதே இல்லை! நீயானால், வண்டை விரட்ட, மோதிரத்தையே வீசிவிட்டாயே! இனிமேல், அந்தப் பாடலை நம்புவேன் தாயே! கட்டாயம் நம்புவேன்!” என்று சிரித்தான் அவன்.

“சும்மாவா வீசினேன்? தவறாமல் ‘காட்ச்’ பிடித்து, அதைக் கொண்டு வந்து தர, ஆள் பக்கத்தில் இருக்கும் தைரியத்தில்தானே, வீசினேன்!” என்றாள் இந்துமுகி பதிலுக்கு!

“அடடா! ‘தர’ என்று ஒரு கொக்கி வைத்துவிட்டாயே! நைசாகப் பைக்குள் போட்டுக் கொள்ளலாம் என்று திட்டமிட்டேனே! கெடு...த்து விட்டாயே” என்று சிரித்தபடி, மோதிரத்தைத் திருப்பிப் பார்த்தான் அவன். “அழகாக இருக்கிறது. ஆனால், கையை உதறுமுன் விழுந்து விட்டதே! அவ்வளவு லூசானதையா அணிந்திருந்தாய்! அல்லது, அதை அணிந்தே தீர, சிறப்புக் கதை ஏதும் இருக்கிறதா?” என்று மோதிரத்தைக் கொடுக்காமலே, கிண்டலாகக் கேட்டான் அவன்.

“இல்லாமல் போகுமா? நிச்சயமாக இருக்கிறது!” என்று, பெரிதாக அறிவித்தாள் இந்துமுகி!

அவன் புருவங்களை உயர்த்தவும், “என் இருபத் தொன்றாவது பிறந்த நாளைக்கு, என் பெற்றோர் பரிசாகக் கொடுத்தது! அப்போதும், ‘வளரும் பிள்ளை’ தானே என்று நினைத்தார்களோ, என்னவோ? ஒரு சுற்று பெரிதாக வாங்கி

விட்டார்கள். நகைக் கடையில் கேட்டால். பெரிதாக்க முடியுமே தவிர சின்னதாக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள்! அப்பா, அம்மா ஆசையாகக் கொடுத்தது! கழற்றி வைக்க மனமில்லாமல், அப்படியே அணிந்து கொண்டிருக்கிறேன். எப்போதும், கவனமாக இருப்பேன். திடீரென்று வண்டு வரவும்..." என்றவள், மற்றதுதான் உனக்குத் தெரியுமே என்பது போலக் கையைக் காட்டினாள்.

"ஏமாற்றி விட்டாயே!" என்றான் சுகவனேசன்.

அவள் கேள்வியாக நோக்கவும். "'அந்த' பிருத்விராஜன் கொடுத்ததோ என்று நினைத்தேன்!" என்று அவன். "துஷ்யந்தன் மாதிரி, தொலைந்து போகட்டும் என்றே, தன் மோதிரத்தைக் கழற்றிப் போட்டு விட்டாரோ என்று...."

கையில் இருந்த நோட்டுப் புத்தகத்தை ஓங்கிக் காட்டினாள் இந்துமுகி. "இதாலேயே ஒன்று போட்டுவிடுவேன்! ஆனால், புத்தகம் கிழிந்துவிட்டால், எழுதி வைத்தது எல்லாம் வீணாகி விடுமோ என்றுதான் தயக்கமாக இருக்கிறது!"

"ஆமாம்மா! நீங்கள் ஓங்கிப் போடுகிற வரை, எங்கள் கை பூப்பறித்துக் கொண்டு இருக்குமாக்கும்?" என்று இலகுவாகக் கேட்டபடி, மோதிரத்தைத் தன் விரலில் போட்டுப் பார்த்தான் சுகவனேசன்.

"ஆகா! அம்மையார் கை, அதி நளினம் போலத் தோன்றுகிறது! என் சுண்டு விரல்கூட, நுழைய மாட்டேன் என்கிறது! போகட்டும்! இது என் பர்சில் இருக்கட்டும் நழுவி விழாதபடி செய்து தருகிறேன்!" என்று, தன் பர்சின் 'ஜிப்'பைத் திறந்து மோதிரத்தை உள்ளே வைத்து மூடினான்.

சந்தேகமாக நோக்கிவிட்டு, "மூ...ன்று கிராம்! இன்றைய விலைக்குக் குறைந்தாலும் ஆ..யிரத்தி ஐ..நூறு ரூபாய்! திரும்பக் கிடைக்குமோ, என்னவோ, தெரியவில்லையே!" என்று, மேடை ரகசியமாக முணுமுணுத்தாள் இந்துமுகி!



"அப்பப்பா! எவ்வளவு பெரிய புதையல்! மூன்று தலைமுறைக்குக் காணுமே! இதைப் போய் யாராவது திருப்பிக் கொடுப்பார்களா? மறந்துவிட வேண்டியதுதான்!" என்று அவன் தொடர, இருவருமே நகைத்தனர்.

மறுநாளில் இருந்து, "மூ...ன்று கிராம்! மறந்துவிட வேண்டியதுதானா?" என்று இந்துமுகி கேட்பதும், "பின்னே? எவ்வளவு பெரிய சொத்து! கைக்கு வந்ததை, யாரேனும் விட்டு விடுவார்களா?" என்று அவன் பதில் கூறுவதும், தொடர்ந்து இருவருமாகச் சிரிப்பதும் வழக்கமாயிற்று!

நாலு நாட்கள் பார்த்துவிட்டு, "அது என்னடா, மூன்று கிராம்?" என்று ஆவலோடு சுந்தரவல்லி விசாரித்தாள்.

"மோதிரம், அம்மா! இந்துவின் மோதிரம்! என்னிடம் இருக்கிறது! சுண்டு விரல்கூட நுழைய முடியாத அளவுக்குச் சின்னது! இதைப்போய்த் திருப்பிக் கொடுக்க வேண்டுமாம்! முடியாது என்கிறேன்!" என்று, இந்து கேட்கும் விதத்தை நினைத்துப் பார்த்துச் சிரித்தபடியே, மாடியேறிச் சென்றான், சுந்தரவல்லியுடைய மூத்த மகன்.

"ஏய், ஏய், நில்லுடா!" என்று, அவன் அறை வரை மகனைப் பின்னோடு விரட்டிச் சென்று, "இந்து நல்ல பெண்! அப்படித்தானேடா?" என்று வினவினாள், தாய்.

"இதைக் கேட்க, இவ்வளவு தூரம் வேண்டுமா, அம்மா?" என்று சிரித்தான் மகன். "கீழேயே கேட்டிருந்தால், அப்போதே சொல்லியிருப்பேனே!" என்றபடி, சட்டையைக் கழற்றி, அதன் தாங்கியில் மாட்டினான்.

"ஊம் தெரிகிறது.. தெரிகிறது! அவள் பேச்சை எடுத்தாலே, துரைக்கு, ஒரே சந்தோஷமாக்கும்! சிரிப்பு, பொங்கிப் பொங்கி வருகிறதே!" என்றவள், மகனைக் கனிவுடன் நோக்கி, "நான் போய், இந்துவுடைய தாத்தாவிடம் போய்ப் பேசட்டுமாடா?" என்று வினவினாள்.

வியப்புடன் தாயைத் திரும்பிப் பார்த்தான், சுகவனேசன்! "இந்துவுடைய தாத்தாவிடம்... என்னம்மா சொல்லுகிறீர்கள்? அவரிடம் போய், நீங்கள் என்ன பேச... அவ்வப்போதுதான், அங்கே போய், அவரோடு பேசுகிறீர்கள்! அப்புறம் என்ன? 'போய்ப் பேசட்டுமா' என்று, அனுமதி கேட்கிற மாதிரி, இது என்ன கேள்வி? சேச்சே! நன்றாகவே இல்லை, அம்மா! நீங்கள், உங்கள் விருப்பம் போல, யாருடன் வேண்டுமானாலும், பேசலாம். அதையெல்லாம் என்னிடம் கேட்கத் தேவையே இல்லை!" என்றான்!

சுந்தரவல்லி தலையில் அடித்துக் கொண்டாள்! "மட்டிப் பையா! மட்டிப் பையா! சும்மா ஒருவருடன், அதுவும், இந்துவுடைய தாத்தா மாதிரி நன்றாகப் பழகிய ஒருவருடன் பேச, உன்னிடம் அனுமதி கேட்டுக் கொண்டிருப்பேன் என்றா, எண்ணினாய்?! மக்கு, மக்கு! திரவியம் சாரிடம், இந்துவைப் பெண் கேட்டுப் பேசட்டுமா, என்று அல்லவா, நான் கேட்டேன்!" என்று, மகனின் அறியாத்தனத்தைப் பார்த்துச் சிரித்தாள்.

"நீங்கள் போய், இந்துவைப் பெண் கேட்பதா? யாருக்கு



"எப்படிப் பழகிவிட்டேன்?" என்று, அலட்சியம் காட்டிக் கேட்டான், சுகவனேசன். "பக்கத்து வீட்டில் இருக்கிறாள். அவளுடைய பெற்றோர், முன்னர் தெரிந்தவர்கள்! அதனால், அலுவலகத்துக்கு அழைத்துப் போகிறேன். திருப்பிக் கூட்டி வருகிறேன்! அவ்வளவுதானே?"

"ஐயோ! அவ்வளவுதானா?" என்று ஏமாற்றத்துடன் கேட்ட சுந்தரவல்லியின் முகம் சட்டெனப் பிரகாசமுற்றது! பத்திரம் காட்டுவது போலச் சுட்டு விரலைக்காட்டிப், "பெரிய தம்பி, சும்மாச் சொல்லாதே! இதே, சின்னவன் சொன்னால், சம வயதுத் தோழமை என்று ஒத்துக் கொள்ளுவேன்! ஆனால், நீ அப்படி அல்ல! பெண்களைக் கண்டாலே, அவ்வளவு தூரத்தில் நிறுத்துகிறவன், அன்றைக்கு, இந்து தோளைத் தட்டிக் கூப்பிட்டாயே! வேறு யாரிடமும் பேசவிடாமல், அவளிடம் நீயே பேசுவது, மய்யூவை முந்திக்கொண்டு, அவளை நீயே வீட்டுக்குக் கொண்டு விடுவது... தம்பி, எனக்கும் கண் இருக்கிறது! அதனால், சும்மாக் கதைக்காதே! சொல்லு, இந்துவுடைய தாத்தாவிடம் எப்போது போய்ப் பேசட்டும்?" என்று, பிடிவாதமான குர

மய்யூவிடம் வெளிப்படையாகப் பேசப்போய், அது, வேறு விதமாய் அனர்த்தமாகி விடக் கூடாது! அதனால்தான், இப்படி, இவளைக் கூட்டிக் கொண்டு அலைகிறேன்! வேறு, ஒன்றும் கிடையாது! அதனால், நீங்கள் வீண் கற்பனைகள் செய்யாதீர்கள், அம்மா! ப்ளீஸ்!"

திகைத்துப் போய்த் தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்துவிட்ட சுந்தரவல்லிக்குச் சற்று நேரம் பேச்சே எழும்பவில்லை!

தீவிரமாக யோசித்தவள், மறுப்பாகத் தலையசைத்து, "சின்னத் தம்பி, அப்படிப் பட்டவன் இல்லைம்மா! வினு மேலே அவனுக்கு ரொம்பப் பிரியம்! மாற மாட்டான்." என்றாள்.

"எனக்கும் அதே எண்ணம்தான், அம்மா! ஆனால், அழகாய் ஒருத்தி வந்து, கண்ணைக் கசக்கினால், தம்பி எந்த அளவுக்கு போவான் என்று, உங்களுக்கும் தெரியும்!"

மீண்டும் யோசித்துவிட்டு, "ஆனால், இந்து? அவள் மனதில் ஆசையைக் கிளப்பிவிட்டுவிட்டு... டேய், பெண் பாவம் பொல்லாதுடா!" என்றாள் தாயார், வருத்தத்துடன்.

"இந்தக் காலத்துப் பெண்கள், அப்படி ஒன்றும் 'மோப்பக் குழையும் அனிச்ச'ங்கள் அல்ல, அம்மா! கவலைப் படாதீர்கள்! ஏற்கனவே, டெல்லியில் ஏதோ ரோமியோ காரணமாகத்தான், இந்துமுகியை, இங்கே மூட்டை கட்டி அனுப்பியிருக்கிறார்கள் என்பது, என் ஊகம்! விடுங்கள் அம்மா! இதெல்லாம் போட்டு மனதைக் குழப்பிக் கொள்ளாதீர்கள்! மய்யூ திருமணத்தை, எப்படிச் சிறப்பாக நடத்தலாம் என்று மட்டும் யோசியுங்கள்! அந்த வைர மாலையை, நீங்கள் எப்போது விநோதினிக்குப் போடப் போகிறீர்கள்? நிச்சயத்தன்றா? அல்லது, திருமணமாகி, நம் வீட்டுக்கு வரும்போதா?" என்று சுகவனேசன் கேட்கவும், சுந்தரவல்லி, தனக்கு மிகவும் பிரியமான கனவுகளில் இனிமையாக மூழ்கி, இந்தப் பிரச்சினையை மறந்தாள்!






மேலும் மூன்று தினங்கள் சென்றபின்னர், 'மூன்று கிராம் மோதிரம்' பற்றித் தினமும் கேட்கும் வழக்கம்போல, இந்துமுகி கேட்டபோது, சுகவனேசன் அவளுக்கு ஓர் இன்ப அதிர்ச்சியைத் தந்தான்!

அடையாறு தாண்டி, ஓர் ஆம்னி பஸ் நிறுவனத்துடைய உரிமையாளருக்கான பங்களா ஒன்றை, சுகவனேசன் கட்டிக் கொண்டிருந்தான், கிட்டத் தட்ட முடிக்கும் தருவாயில் இருந்தது வீடு. அவனது புதுமையாக, மேலே உள்ள தண்ணீர்த் தொட்டியை, பஸ் வடிவில் அமைத்து, கட்டிட உரிமையாளரின் பாராட்டைப் பெற்றிருந்தான்.

அவளது புத்தகத்துக்காக, அந்த வீட்டைக் காட்ட, சுகவனேசன், அவளையும் அழைத்துச் சென்றிருந்தான்.

அப்படியே, வீட்டின் கடைசிப் பூச்சு வேலைகளைப் பற்றி, சில கிலோமீட்டர் தூரத்தில் ஒரு வாடகை வீட்டில் வசித்த உரிமையாளரிடம் பேசி முடித்துவிட்டு, இருவருமாகத் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள்!

அந்த நேரத்தில் இந்துமுகி தன் மோதிரப் பேச்சை எடுக்கவும், காரை ஓரமாக ஒதுக்கி, ஒரு மரத்தடியில் நிறுத்தி, "நீ சொன்னதுபோலவே, மோதிரத்தைச் சிறிது பண்ண முடியாது என்று, உங்கள் குடும்பங்களுக்கு நகை செய்து தரும் கடைக்காரரும் சொல்லி விட்டார், இந்து!", என்றபடி, சுகன், தன் கைப்பையை எடுத்தான்.

"அங்கேயும் எல்லா நகைக் கடைகளிலும், அப்படித்தான் சொன்னார்கள். என்ன செய்வது? சற்றுக் கவனத்துடன் அணிய வேண்டியதுதான்." என்றாள் அவள்.

"அவசியம் இல்லை!" என்று, அவன் கூறவும், திரும்பி அவனைப் பார்த்து, "மோதிரத்தை அணிய வேண்டாம் என்கிறீர்களா? அது, அம்மாவும் அப்பாவும்..." என்று விளக்கம் கூற முயன்றவளை, "ஊகூம்!" என்று தலையசைத்துத் தடுத்தான்.

அவள் புரியாமல் நோக்கவும், "எந்த விரல்? நடுவிரல்தானே? இப்போது கண்ணை மூடிக்கொள்!" என்றான் சுகவனேசன்

"எதற்கு?"

"உன் மூ...ன்று கிராம் தங்க மோதிரம், அரும் பெரும் சொத்து, உனக்கு வேண்டுமா, இல்லையா? வேண்டும்தான் என்றால், நான் சொன்னபடி செய்!"

"ஓங்கி ஒரு குட்டு வைத்து விடாதீர்கள், சுகன்! ப்ளீஸ்!" என்று பயந்தவள் போன்ற பாவனையுடன், கண்களை மூடிக் கொண்டாள் அவள்.

"நான் சொல்லும்வரை, கண்ணைத் திறக்கக் கூடாது! கையை நீட்டு!"

அவன் எதிர்பார்த்தது போலவே, அவளது இடதுகை நடுவிரலில் மோதிரம்தான் ஏறியது. ஆனால், கூடவே அவளது மணிக்கட்டிலும், ஏதோ படுவதை இந்துமுகி உணர்ந்தாள்!

சட்டெனக் கண்ணைத் திறந்து பார்த்தபோது, மெல்லிய சங்கிலிகளால் ஆன பிரேஸ்லெட்டை, சுகவனேசன் அவள் கையில் அணிவித்துக் கொண்டிருந்தான்.

நொந்துவிடுமோ என்று அஞ்சியவனைப் போல, மென்மையாகக் கையைப் பற்றி, பிரேஸ்லெட்டின் கொக்கியை



அவன் மாட்டிய விதம், 'இது எதற்கு?' என்று அவள் சொல்லத் தொடங்கிய வார்த்தைகளைத் தடுத்து நிறுத்தி, விழிகளில் நீர் அரும்பச் செய்தது!

அவள் நோக்குவதை உணர்ந்தவன் போல, சுகவனேசன் அவள் கையிலிருந்து பார்வையை உயர்த்தினான்.

லேசாகச் செறுமிக்கொண்டு, "உன் கை, இவ்வளவு மிருதுவாக இருக்கிறதே, இந்து!" என்று வியந்து கூறினான், அவன்.

இந்துமுகிக்கும், பேச முடியாமல், தொண்டையில் ஏதோ அடைத்தது போன்ற உணர்வில் சற்றே செறுமிக்கொள்ள வேண்டியிருந்தது! சிறு இருமலில் அதை மறைத்து, "கைக்கு என்னென்ன வைத்தியம் செய்கிறேன், தெரியுமா? பாதாம் எண்ணை தடவி உருவிவிட்டு, லோஷனில் கழுவி... கொஞ்சமேனும் நன்றியிருந்தால், இந்தக் கைகள் மிருதுவாய் இருந்துதானே தீரவேண்டும்!" என்று வேடிக்கை பேச முயன்றாள் அவள்.

"பரவாயில்லை! உன் கைகளுக்கு, நன்றி நிறையவே இருக்கிறது!"

சிரித்துவிட்டு, "அதிருக்கட்டும், சுகன்! இது என்ன?" என்று பிரேஸ்லெட்டைக் காட்டினாள் இந்துமுகி.

"உன் மோதிரம் நழுவி விடாமல் பண்ணுகிறேன் என்றேன் அல்லவா? பார், செய்துவிட்டேன்!"

சொன்னது போலவே செய்திருந்தான்.

பிரேஸ்லெட்டின் ஒரு வளையத்திலிருந்து சென்ற இன்னொரு மெல்லிய சங்கிலி, மோதிரத்தின் கீழே சேர்க்கப் பட்டிருந்த வளையத்தில் இணைக்கப் பட்டு, மோதிரம் கழன்றுவிடாமல், இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தது.

மோதிரம் விழாது! உண்மைதான்!

ஆனால், மூன்று கிராம் தங்கத்தைக் காப்பதற்காக, அவன், குறைந்தாலும் நாலு கிராம் தங்கம் செலவு செய்திருந்தான்!

கேலியாக நோக்கி, " 'சுண்டைக்காய் கால் பணம், சுமை கூலி முக்கால் பணம்', என்று பாட்டி ஒரு பழமொழி சொல்வார்கள்! இப்போதுதான், அதில் நம்பிக்கை வந்தது! அப்படிச் செய்கிற புத்திசாலிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்!" என்று புருவம் உயர்த்தி நகைத்தாள்.

தோளைக் குலுக்கி, "என்ன செய்வது? சுண்டைக்காயைச் சுண்டைக்காயாக எண்ணாமல், வைரமாக மதித்து, மூக்கால் அழுகிறவர்களுக்காக, இப்படியும் செய்யத்தானே வேண்டியிருக்கிறது?" என்று முறுவலுடனேயே பதில் கொடுத்தான் சுகன்!

ஒப்புதலாய்ப் புன்னகைத்து, "உண்மைதான், சுகன்! என்னைப் பொறுத்த வரையில், இந்த மோதிரம், ஒன்றரை காரட் புளூஜாகர் ஒற்றை வைரத்தை விட, மதிப்பில் உயர்ந்ததுதான்!" என்றவள், கையில் கிடந்த நகையை ஒரு தரம் பெருமிதமாய் நோக்கி, "ரொம்ப நன்றி, சுகன்! என் மனம் உணர்ந்து செயல் பட்டிருக்கிறீர்கள்! இது, எப்போது தொலைந்து விடுமோ என்கிற கவலை இல்லாமல் இனி, நான் நிம்மதியாக இருக்க முடியும்! சொல்லுங்கள், இதற்கு எவ்வளவு செலவாயிற்று?" என்று விசாரித்தாள்.

"எதற்கு?" என்று, சுருக்கமாகக் கேட்டான் அவன்.

"எதற்கு என்றால்... இந்த பிரேஸ்லெட்டுக்குத்தான் எவ்வளவு செலவு ஆயிற்று என்று கேட்டேன்." என்றாள் அவள்.

"இந்தக் கேள்வியை எதற்குக் கேட்கிறாய் என்றுதான், நானும் கேட்டேன்!"

"இதென்ன கேள்வி?! பணம் தர வேண்டாமா? அதிலும்..." என்று இழுத்தவள், கண்ணில் குறும்புடன், "வெறும் மூன்று கிராம் தங்கத்தையே, பெரும் சொத்து திருப்பித்தர முடியாது என்கிறவரிடம் இருந்து, அதை விட அதிகத் தங்கத்தை சும்மா வாங்கிக் கொள்ள முடியுமா?" என்று கேட்டாள்!



"வெறும் மூன்று கிராம் தங்கமா? யாரோ, சற்று முன் தானே, இதை ஒன்றரை காரட் புளூஜாகர் ஒற்றை வைரத்தை விட உயர்ந்த மதிப்பு உள்ளது என்றார்கள்! அது யார் அப்படிச் சொன்னது?... உனக்குத் தெரியுமா, இந்து?" என்று, ஏதோ மறந்ததை நினைவு படுத்திக் கொள்ளக் கடுமையாக முயற்சிப்பவனைப் போன்ற பாவனையுடன் சுகவனேசன் வினவ, இந்துமுகி கலகலவென்று நகைத்தாள்!

திருப்தியுடன் நோக்கி, "ஆங்! இது சரி!" என்று, காரை எடுத்தான் அவன்.

ஆனால், அவள் அத்துடன் விடாமல், "சரியில்லை, சுகன்! ஆயிரக் கணக்கில், நான் உங்களிடம் இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியாது! தயவு செய்து, இதற்கு எவ்வளவு ஆயிற்று என்று சொல்லுங்கள். தந்து விடுகிறேன்! நீங்களும் வாங்கிக் கொண்டே ஆக வேண்டும்! யோசித்துப் பார்த்தால், நீங்களே ஒத்துக் கொள்வீர்கள்!" என்று மறுபடியும் வலியுறுத்தினாள்.

"யோசிப்பதா? என்னால் அது முடியாது என்றுகூட, யாரோ சொன்னார்களே! யோசிப்பதற்குத் தேவையான பொருள் ஏதோ என்னிடம் இல்லை என்றும் சொன்னார்களே! இது என்ன பொருள் இந்து? எனக்கேனும் தெரியுமா?"

"அப்பப்பா!" என்று காதைப் பொத்திக் கொள்ளுவது போலப் பாவனை செய்தாள் அவள். "எதையும் சொல்லிக் காட்டாமல் விடவே மாட்டீர்கள் என்று, மய்யூ சொன்னது சரிதான் என்று தெரிகிறது! ஆனால் ஒன்று சுகன்! உங்கள் ஞாபக மறதிக்குச் சீக்கிரமாக, யாராவது நல்ல டாக்டரைப் பாருங்கள்! இல்லாவிட்டால், என்னையே, 'நீ யார்?' என்று கேட்டாலும், கேட்டு விடுவீர்கள்! ஜாக்கிரதை!" என்று எச்சரித்தாள்.

சாலையை நன்றாகக் கவனித்துவிட்டு, திரும்பி ஒரு தரம் அவளை ஏற இறங்கப் பார்த்தான் சுகவனேசன். "ஆமாம்! என் காரில், என் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு வருகிறாயே, நீ யாரம்மா? எப்போது, காரில் ஏறினாய்?" என்று புருவம் சுருக்கி விசாரித்தான் அவன்.

அவன் கேட்டு முடிக்கும் முன்னரே, அவளுக்குச் சிரிப்பு பீறிட, அவனும் அதில் கலந்து கொண்டான்!

சிரித்து ஓய்ந்ததும், "இப்படிப் பெண்ணாய் லட்சணமாய்ச் சிரித்துப் பேசிக்கொண்டு வருவாயாம்! கண்ட கேள்வியெல்லாம் கேட்டுப் போரடிக்கக் கூடாதாம்! உனக்குச் சம்பளம் கொடுக்கிற முதலாளி உத்திரவாதம்!" என்றான் சுகவனேசன்.

தலையைச் சிலுப்பி, "சிரித்துக் கொண்டு இருந்தால்தான், பெண்ணாய் லட்சணமாய்த் தெரிகிறதா? ஆனாலும் முதலாளி, 'பெண்பிள்ளை சிரித்தால் போச்சு' என்று எந்த முட்டாளோ, எழுதி வைத்திருக்கிறானே! நான் என்ன செய்யட்டும்?" என்று, வேண்டும் என்றே கேட்டாள் அவள்.

"சொன்னவனைத்தான் முட்டாள் என்று, ஏற்கனவே, மண்டையில் தட்டி விட்டாயே! அப்புறம், அதைப்பற்றி என்ன?"

"பெண்ணாய் லட்சணமாய்ச் சிரித்துக் கொண்டு இரு என்பதும், கொஞ்சம் அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது..."

"கடவுளே! சந்தோஷமாகச் சிரித்துக் கொண்டு இரு என்றால், அதுவும் தப்பா? விட்டுவிடு, தாயே! வேண்டாம்! என்னை நேரடியாக 'அடே முட்டாளே' என்று நீ கூப்பிடுமுன், நான் சொன்னதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுகிறேன்! ஆளை விடு! இனி எந்தப் பேச்சும், வேண்டாம்! இந்த நகையைப் பற்றிய பேச்சும் உட்படத்தான்!"

"அதெப்படி..." என்று இந்துமுகி தொடங்கிய போதும் திரும்பிப் பார்த்துச் சன்னச் சிரிப்புடன் சுகவனேசன் மறுப்பாய்த்



தலையசைக்கவும், அதற்குமேல் பேச, அவளுக்கு மனம் வரவில்லை!

ஆனால், சும்மா இருக்கவும் பிடிக்காமல், மயூரேசனிடம் நடந்ததைக் கூறி, ஆலோசனை கேட்டாள்.

வியப்பும் சிரிப்புமாகக் கேட்டிருந்துவிட்டு, "விட்டுவிடு, இந்து!" என்றான் அவன், "ஓர் இரண்டாயிரம், மூவாயிரத்தில், அண்ணனுக்கு ஒன்றும் பாதித்து விடாது! அண்ணன் அனாவசியமாகப் பணத்தை வாரி இறைப்பவன் அல்ல! இந்தப் பணத்தை வாங்க மறுத்தால், அதற்குக் காரணம் இருக்கும்! ஒருவேளை, அந்தக் கையேட்டுப் புத்தகம் பிரமாதமாக அமைய, இது உந்து கோலாக இருக்கட்டும் என்று எண்ணியிருக்கக் கூடும்! ஓசியடித்தது போல, உனக்கு ஒரு மாதிரி இருந்தால், புத்தகத்தை மிக நன்றாக அமைத்துக் கடனைத் தீர்த்துக் கொள்!" என்று யோசனை சொன்னான்.

இந்துமுகியும், அதே முடிவுக்கு வந்தாள்.

எப்போதுமே, அவள் செய்வனத் திருந்தச் செய்கிறவள் தான். அதிலும் இப்போது, 'ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராய்' என்பார்களே, அது போல, ஈடு சொல்ல முடியாததாக, அந்தக் கையேட்டுப் புத்தகத்தை அமைத்துவிட எண்ணி, முனைந்து வேலை செய்தாள்.

புத்தகத்தின் 'ப்ரூஃப்'பை, அச்சகத்திலிருந்து வீட்டிற்குக் கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போனார்கள்.

புரட்டிப் பார்த்துவிட்டு, சுகவனேசன் வெகுவாகப் பாராட்ட, இந்துமுகியின் மனம், குதூகலத்தில் துள்ளிக் குதித்தது!

"கை கொடு! கை கொடு! அண்ணன் லேசில் எந்த வேலையையும் பாராட்ட மாட்டான்! 'வசிஷ்டர் வாயால் பிரம்ம ரிஷி'ப் பட்டம் வாங்கியிருக்கிறாய்! என் மனமார்ந்த வாழ்த்துக்கள்!" என்று, அவளது கைகளைப் பற்றிக் குலுக்கினான் மயூரேசன்.

"பார்த்து! பார்த்து, மெள்ளத்தானே, குலுக்கு! நீ குலுக்குகிற வேகத்தில் அவளது கை ஒடிந்துவிடப் போகிறது!" என்றான் சுகவனேசன் ஒரு மாதிரிக் குரலில், கிண்டலாக.

"ஆமாமடா! அவன் சொல்லுவதும் சரிதான்! பூ மாதிரி இருக்கிறது, இந்துவின் கை! உன் முரட்டுப் பிடிக்கு, அது சரிப்படாது! விடு!" என்றாள் சுந்தரவல்லியும்.

"ஆமாம் அண்ணா! நீதானே இந்துவின் கையைப் பூச்செண்டு மாதிரிப் பிடித்து மென்மையாகத் தடவிக் கொடு! அம்மா சந்தோஷமாகப் பார்த்துக் கொண்டு நிற்பார்கள்!" என்று குறைப்பட்டான், மயூரேசன்.

"வேண்டாம்! என் இந்துக் கண்ணம்மாவின் கையை, உங்களை மாதிரி முரடர்கள் யாரும் தொடக்கூட வேண்டாம்!" என்றாள் சுந்தரவல்லி, சற்றுக் கடுமையான குரலில்! உடனேயே, "சின்னப் பெண்! அழகான கை! யாருக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ?" என்றாள் ஏக்கத்துடன்.

"யாருக்கோவா? இப்போது சொல்லுங்கள், அம்மா! அந்த பங்களூர்க்காரி, எப்படியோ போகட்டும் என்று, இந்த அழகா...ன கைக்கு, நான் விண்ணப்பம் போட்டு விடுகிறேன்!" என்றான் மயூரேசன்.

"இந்த வார்த்தை சொன்னதற்கு, உன்னை நான் உதைப்பது இருக்கட்டும், உன் அண்ணன், கட்டுமானத்துக்கு வந்திருக்கும் செங்கல்லால் அடித்தே, உன் மண்டையைப் பிளந்து விடுவான்! 'அந்த பங்களூர்க்காரி'யா? கொழுப்புடா, உனக்கு! நாளையிலிருந்து, உனக்குச் சாப்பாட்டில் நெய்யே கிடையாது போ!" என்றாள் சுந்தரவல்லி கோபக் குரலில்.

"முதலில், விநோதினியிடம் வத்தி வைக்க வேண்டும், ஆன்ட்டி! அதை மறக்காதீர்கள்!" என்று சொல்லிக் கொடுத்தாள் இந்துமுகி.



"ஹைய்யோ! இந்த வீட்டில் அப்பாவிப் பையனான எனக்கு எதிராக, ஒரு பேரணியே இருக்கிறதே! ஊகூம்! இந்தச் சூழ்நிலை நமக்குச் சரிப்படாதுப்பா! பேசாமல் பங்களூருக்கு ஓடிப்போய் அங்கே, ஒரு வாரம் டேராப் போட்டுவிட வேண்டியதுதான்! பங்களூர்க்காரி, இவர்களுக்கு எவ்வளவோ மேல்!" என்று மிரண்ட பாவனையில் மயூரன் கூறவும், எல்லோருக்குமே சிரிப்பு வந்துவிட்டது!

சற்று நேரம் லகுவாகப் பேசிக் கொண்டிருந்துவிட்டு, அவரவர் இலக்கு நோக்கி எல்லோரும் சென்றனர்.

சின்ன மகனின் பின்னோடு வந்து, "விளையாட்டுக்குக் கூட வினுவைப் பற்றி, அப்படிப் பேசாதேடா! நம் கெட்ட நேரம், ஏதாவது நடந்துவிடப் போகிறது! அவன் ஒருவன் தனி மரமாக நிற்பதே, வேதனையாக இருக்கிறது! உன் திருமணமாவது ஒழுங்காக நடக்கட்டும்!" என்றாள் தாய்.

ஏதோ வேடிக்கையாகச் சொல்ல வாய் திறந்தவன், தாயின் விழிகளில் நீரின் பளபளப்பைக் கண்டதும், அவள் கையைப் பற்றி, "கவலையே படாதீர்கள், அம்மா! எங்கள் திருமணம் நிச்சயமாக நடக்கும்! பழைய வசனமாகச் சந்திர சூரியர்கள் இடம் மாறினாலும், அல்லது புதிய வசனமாக, பூமி திசை மாறிச் சுழன்றாலும், எனக்கும் வினுவுக்கும் திருமணம் நடந்தே தீரும்! சரிதானா? நிம்மதி ஆயிற்றா?" என்று உறுதி கூற, அவளும் புன்னகையோடு தலையாட்டி விட்டுப் போனாள்!

உள்ளே சென்று கொண்டிருந்த தாயின் உருவத்தைக் கனிவுடன் பார்த்துக் கொண்டு நின்ற மயூரனுக்கு, இந்துமுகியின் பிரேஸ்லெட் திடுமென நினைவு வந்தது!

ஏதேதோ யோசித்தவன் சட்டெனச் சிரித்தான்.

"தனிமரமா? எத்தனை நாள் என்று, அதையும்தான் பார்ப்போமே...!" என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான் அவன்!




கையேட்டுப் புத்தகத்தின் 'ப்ரூப்பி'ல், சில திருத்தங்கள் போட்டு, அச்சடிக்க அனுப்பி, திருத்தி வந்ததை, இந்துமுகி சரி பார்ப்பதைக் கவனித்து விட்டு, "நீ சரியான வேலைப் பிசாசு போலத் தெரிகிறது! பாவம், அந்த பிரிண்டிங் பிரஸ்காரர்!" என்று, பிரஸ்காரர் மீது பரிதாபப்பட்ட போதும், சுகவனேசனின் குரலில் பாராட்டே தொனித்தது!

அவளுக்கும் அது புரிந்து, உள்ளூரப் பெருமைதான். காட்டிக் கொள்ளாமல், "இதுவே, கதைப் புத்தகம் என்றால், வெறும் அச்சுப் பிழையாகக் கருதி, மனதுக்குள் திருத்திக் கூடப் படித்துக் கொள்வார்கள். ஆனால், நம்முடையது அப்படியல்ல, நம் சாரி உங்கள் சாதனைகளைக் குறிப்பதாயிற்றே! இதில் சிறு தவறு இருந்தாலும், சாதனையை ஒழுங்காகச் சொல்லக் கூடத் தெரியாதவர்கள் எதைச் சாதிக்கப் போகிறார்கள் என்று, எதிர்மறை அபிப்பிராயம் வேறு ஏற்பட்டுவிடும் அல்லவா? அதனால்தான், இவ்வளவு கவனம் செலுத்துகிறேன்!", என்று, முயன்று வருவித்த சாதாரணக் குரலில் கூறினாள்.

"நீ சொல்வது, ரொம்பச் சரி! ஆனால், இதெல்லாம், உடைமையாளர்கள் கவலை! இந்த அளவுக்கு, நீயும் யோசித்து இருக்கிறாயே என்று மகிழ்ச்சியாக இருக்கிறது!" என்று உணர்ச்சிகரமாகக் கூறினான் அவன்.

உடனேயே, "இந்த மாதிரி, இந்த நிறுவனத்தில் உள்ள எல்லோரும் நினைத்திருந்தால், இத்தனை ஆண்டுகளில், எங்கேயோ போயிருக்கலாம்!" என்று, ஒரு பெருமூச்சுவிட்டான்!



"நீங்கள், 'உடைமையாளர்கள் கவலை' என்றுவிட்டு, வருத்தப்பட்டால் எப்படி?" என்று கேட்டாள் அவள்.

"ஆனால், அதே கவலை நீ பட்டிருக்கிறாயே!" என்றவன் தொடர்ந்து, "ஆனால் வெறுமனே சம்பளத்துக்கு வேலை செய்யும் மற்றவர்களோடு, உன்னைச் சேர்க்க முடியாது! அப்படித்தானே இந்து?" என்று அவளையே பார்த்துக் கேட்டான்.

ஒருகணம் திகைத்துவிட்டு, "ஆமாம்!" என்றாள் அவள். "பல ஆண்டுகளாகப் பழகிய சின்ன வயதுத் தோழி, நான். இரண்டாவது தலைமுறையாகத் தொடரும் நட்பு! அதே, பக்கத்து வீட்டு வாசம் வேறு, தொடர்கிறது! என்னை எப்படி, மற்றவர்களோடு சேர்க்க முடியும்? முடியவே, முடியாதுதான்!" என்று தெளிவான குரலில், உறுதியாகக் கூறி முடித்தாள்.

"அத்தோடு..." என்று தொடங்கிச் சற்று நிறுத்தினான், சுகன்! பிறகு, "வீட்டுப் பெண்ணாக, உன்னை நீயே எண்ணுவதால்தான், இந்த அளவுக்கு நீ யோசித்திருக்கிறாய்! எப்படியோ, என் வேலை நல்லபடியாக நடக்கிறது! நன்றி, இந்து!" என்று முடித்தான்.

"வீட்டுப் பெண் என்று சொல்லிவிட்டு, நன்றி தெரிவிப்பார்களா?" என்று முறுவலித்தாள் இந்துமுகி!

"உடனே மடக்கி விடுகிறாயே! ஆனால், நீ சொல்வதும் சரிதான்! நன்றி வாபஸ் பெறப்பட்டது! ஆனால், 'வீட்டுப் பெண்' விஷயத்தை, நீ ஒரு போதும் மறக்கக் கூடாது! மறப்பதற்கு, நானும் விட மாட்டேன்., சொல்லிவிட்டேன்...!" என்று எச்சரித்துச் சிரித்தான் அவன்!

கையேடு பற்றிய பேச்சு, மீண்டும் வந்தபோது, அதன் மூலம் அறிந்த அவனது சாதனைகளைப் பற்றி, இந்துமுகி பேசினாள். "தனி ஆளாய் கிடந்து, இந்தப் பாடு பட்டிருக்கிறீர்களே, சுகன்! ஆன்ட்டி வெகுளி., மய்யூவோ, இன்னமும் அவ்வப்போது

சின்னப் பிள்ளைதான். எப்படித்தான் சமாளித்தீர்களோ!" என்று அதிசயித்தாள், அவள்.

பழைய நினைவுகள், அப்படியே படமாக அவன் நெஞ்சுக்குள் ஓடின.

ஆனால், அன்றைய வலி, இந்துமுகியின் இதமான வார்த்தைகளில், அடியோடு மறைந்து போயிற்று!

சாதித்தோம் என்ற பெருமை மட்டுமே மீதமாய் நின்றது!

சாதனையைப் பற்றி, அவள் இன்னும் ஒன்றைக் கண்டு, அவனிடம் சொன்னாள், "உங்கள் கட்டிடங்களில், ஒரு தனிச் சிறப்பைக் கண்டேன், சுகன்! சாதாரண ஃப்ளாட்டுகள் கூட, தெருவில் நின்று பார்க்கும் போதே, கவனத்தை ஈர்த்து விடுகின்றன! உள்ளேயும், சர விளக்கோ, கிரில் வேலையோ, வண்ணப் பூச்சோ, ஏதாவது ஒரு தனிச் சிறப்பு இருக்கவே, இந்த முதல் ஈர்ப்பு மங்குவதும் இல்லை!" என்றாள் அவள்.

வியப்பும் மகிழ்ச்சியுமாக, அவளைப் பார்த்துவிட்டு, சுகவனேசன், தன் ரகசியத்தை அவளிடம் சொன்னான், "தாஜ்மகால் பார்த்திருக்கிறாயா?" என்று கேட்டுவிட்டு, "நீ டெல்லிக்காரி! உன்னிடம் தாஜைப் பாத்திருக்கிறாயா என்று கேட்டது தப்புதான். தாஜ்மகால், இவ்வளவு பிரமிப்பை ஏற்படுத்துவதன் காரணம், ஆக்ரா வாயிலில் இருந்து, அது அமைக்கப்பட்டிருக்கும் தூரமும் உயரமும் என்பார்கள். முதல் பிரமிப்போடு போகிறவர்களைக் கட்டடத்தின் எழில், இன்னமும் மயக்கி விடுகிறது! அந்த உத்தியைத்தான், நானும், இயன்றவரை கையாளுகின்றேன்!" என்றான் அவன்!

பிறகு, அவன் ஒவ்வொரு படி ஏறியதையும், அவளுடன் இலகுவாகப் பகிர்ந்து கொள்ள முடிந்தது!

எதிர்காலக் கனவுகளையும்!

ஞானசேகரனின் ஹோட்டல்களின் மூலம் கிடைக்கும் பணத்தை, எப்படி முதலீடாகப் பயன்படுத்தி, எப்படி பெரிய



அளவில் தொழிலை விரிவுபடுத்தப் போகிறான் என்பதையெல்லாம், அவளிடம் மனம் விட்டுக் கூறினான்!

கேட்கக் கேட்க, மனதுள் இருப்பதையெல்லாம், தன்னிடம் ஒளிவு மறைவின்றிச் சொல்லுகிறானே என்று, உள்ளம் குளிர்ந்து போனாள், இந்துமுகி.

இந்தக் கால கட்டத்தில், விநோதினி, தன் படிப்பை முடித்தாள்.

நிச்சயதார்த்தம், அதையடுத்துத் திருமணம் இரண்டிற்கும், நல்ல நாள் பார்த்துத் திருமண ஏற்பாடுகளும் நடக்கலாயின.

ஹோட்டலும், அடிப்படைக் கட்டிட வேலை முடிவடைந்து, பூச்சு வேலை தொடங்கி இருந்தது.

திருமண வேலைகளில் கலந்து கொள்வதற்காக, விநோதினியுடைய அண்ணன் பரிபூரணனும் வந்திருந்தான்.

ஞானசேகரனுக்கு டெல்லியில் இருந்த இரு ஹோட்டல்களையும் நிர்வகித்து வருகிறவன் அவனே! அந்த முறையில், இந்தக் கட்டிடத்தையும் பார்வையிடச் சென்றான்.

சுகவனேசனே, அவனை அழைத்துச் சென்று காட்டினான்.

கட்டிடத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு, "அப்பா எதற்கு, இவ்வளவு பெரிதாக இங்கே கட்டுகிறார் என்று எனக்குப் புரியவில்லை! டெல்லியில் என்றால், நாட்டின் தலைநகரம், தலைமை அலுவலகம் வேறு அங்கே இருக்கிறது! எப்போதும், பெரிய ஹோட்டல்களில் தங்குகிறவர்கள் கூட்டம், அலை மோதிக் கொண்டே இருக்கும்! இந்த ஊரில், பாதி அறைகள் பூட்டிக் கிடந்து நஷ்டம்தான் வரும்! பேசாமல், அப்பா, அங்கேயே இதையும் கட்டியிருக்கலாம்! அப்பாவுக்குப் பிறகு, நிர்வகிப்பதற்கு எனக்கும் வசதியாக இருக்கும்!" என்றான் பரிபூரணன்.

'அப்பாவுக்குப் பிறகு!'

எவ்வளவு சாதாரணமாகச் சொல்லுகிறான்!

தந்தைக்குப் பிறகு, தான் பட்ட துன்பங்கள், சுகவனேசனுக்கு நினைவு வந்தன.

அந்த மாதிரித் துன்பங்கள் அவனுக்கு வர வாய்ப்பில்லை! ஏற்கனவே ஞானசேரகன், மகன் கையில் நிர்வாகத்தைக் கையில் கொடுத்து, நன்றாகப் பழக்கி விட்டிருக்கிறார்!

ஆயினும், தந்தையின் மறைவைப் பற்றி, இவ்வளவு சாதாரணமாக அடுத்தவரிடம் பேசலாமா?

அசுசியாக உணர்ந்தபோதும், அதை மறைத்து, "இங்கேயும், இது போலப் பெரிய ஹோட்டல்கள், எப்போதுமே நிறைந்து வழிவதாகத்தான் கேள்வி! அத்தோடு, இதையும் அங்கேயே கட்டினால், இங்கே நான் பிழைப்பது எப்படி?" என்று வேடிக்கை போலப் பேசி, சமாளிக்க முயன்றான், அவன்.

"ஓகோ! நீங்கள்தான், அவரிடம் கெஞ்சிக் கூத்தாடி, ஹோட்டலை இங்கே கட்ட வைத்தீர்களோ? யாராவது வந்து மாலை போட்டுக் காலைப் பிடித்தால், கிழவருக்குத் தலை சுழன்று விடுமே!" என்று அலட்சியமாகக் கூறியவனை, இமை இடுங்கப் பார்த்தான் சுகவனேசன்.

ஏறத்தாழ, அவன் வயதுதான் இருக்கக் கூடும்! விநோதினியுடைய உடன் பிறந்த அண்ணன் என்றால், அதுவே அதிகம்! அதற்கு மேல் போக, நிச்சயம் வழியில்லை! ஆனால், இதற்குள்ளாகவே, நிறைய 'ஆடி'யிருப்பான் போலும்! பிஞ்சிலேயே, சற்று வெம்பியிருந்தான்.

தலைமுடிக்குச் சாயமிட்டுக் கொண்டால், அவனுக்கு அண்ணன் போலத் தோற்றம் தரக் கூடியவரைப் போய்க் கிழவன் என்கிறான்!

அப்பா ஆயிற்றே என்ற மரியாதை, கொஞ்சமும் இல்லையே!



அது மட்டுமல்ல!

மரியாதை நிமித்தம் கூட வந்து, இடம் காட்டிக் கொண்டிருக்கும், இன்னொரு நிறுவனத் தலைவனிடம் பேசும் முறையும் இவனுக்குத் தெரியவில்லை!

இவன் மட்டும், ஞானசேகரனுடைய மகனாக இல்லாதிருந்தால்.... விநோதினிக்கு அண்ணன் வேறு!

உறவினன் ஆகப் போகிறவனுடன் நட்போடு பழக வேண்டும் என்று நினைத்தால் முடியாது போலிருக்கிறதே!

முடிந்தவரை கோபத்தை அடக்கிக் கொண்டு, "நாங்கள் யார் காலையும் பிடித்துக் கெஞ்சிக் கூத்தாடி, வாய்ப்புப் பெறுவது இல்லை, மிஸ்டர் பரிபூரணன். அதற்கு அவசியமும் இருந்தது இல்லை! பார்த்து முடித்துவிட்டால், கிளம்பலாமா?" என்றான் சுகவனேசன்.

"இன்னும் முடிக்கவில்லை..." என்று இழுத்தவனின் பார்வை கட்டிடத்தில் இல்லை!

பூச்சுக்கான கலவையைச் சுமந்து சென்ற பெண்களை நோட்டமிட்டவன், "இந்தத் தமிழ் நாட்டுப் பெண்களின் எடுப்பே தனி! மற்ற எந்தப் பெண்களையும் விடத் தனி அழகு! அதிலும், அந்தப் பச்சை, சிவப்புச் சட்டைகள்... இரண்டில், எது மேல், சுகவனேசன்? மேஸ்திரியிடம் சொன்னால், கணக்குப் பண்ணித் தருவானா?" என்று தங்கையுடைய நெருங்கிய உறவினன் ஆகப் போகிறவன் என்கிற எண்ணமே இல்லாமல் வெட்கமின்றிக் கேட்டான்!

"செருப்படி வாங்காமல், இங்கிருந்து போகப் போவது இல்லையா? அந்த இரண்டு பேரும், மேஸ்திரியுடைய சொந்தத் தங்கைகள்!" என்ற சுகவனேசன், மற்றவனின் முகம் வெளுப்பதை, உள்ளூரத் திருப்தியோடு கண்டான்.

அவன் சொன்னது உண்மையும்கூட! தங்கைகளைப் பற்றி யாராவது பேசினார்கள் என்று தெரிந்தால்கூட, மேஸ்திரி புரட்டி

எடுத்து விடுவான். "உன்னாண்ட வேலையன்னா, எனக்கு நிமிதியா இருக்கு, சார்! மத்தவனுக்கு அல்லாம் காலிப் பசங்க! அவனுங்க தோலை உரிச்சு, உப்புக் கண்டம் போடணும்!" என்று சுகவனேசனிடம் சொல்லுவான்!

அவனிடமா, கணக்குப் பண்ணித் தரச் சொல்ல எண்ணுகிறான், இந்த ராஸ்கல்!

அவர்களில் யார் மேல், என்று கேட்பதானால், சுகனைப் பற்றித்தான், அவன் என்ன நினைத்தான்? தங்கையை, அந்த வீட்டில் கொடுக்க, அவன் கொஞ்சமும் தயங்கவில்லையே!

மனைவி இறந்தும், மறுதாரம் கொள்ளாமல் பத்து ஆண்டுகளுக்கும் மேலாகத் தனித்து வாழும் ஞானசேகரனுக்கு, இப்படி ஒரு மகனா?

"கிளம்புவோம், மிஸ்டர் பரிபூரணன், சண்முகம் முரடன் அடித்துப் போட்டுவிட்டு, அப்புறம்தான் கேள்வி கேட்பான்!" என்று பயமுறுத்திய பிறகுதான், பரிபூரணன் அங்கிருந்து அசையச் சம்மதித்தான். 'பச்சை, சிவப்பு சட்டை'களிடமிருந்து பார்வையை அகற்றுவது, அவனுக்கு அவ்வளவு கடினமாக இருந்தது!

அவர்கள் இருவரும் சற்று அழகான பெண்கள்தான்! ஆனால், அழகான பெண்களை, இப்படித்தான் பார்க்க வேண்டும் என்பது இல்லையே! தங்கையாக, தாயாக, தெய்வமாக... எத்தனையோ விதமாக, நல்லபடியாகவே பார்க்கலாமே!

இத்தனைக்கும், இவன் மணமானவன் என்று கேள்வி!

பாவம், இவனுடைய மனைவி!

பரிபூரணனைத் தன் அலுவலகத்துக்கு அழைத்துப் போய்க் காட்ட வேண்டும், புதிதாக அச்சடித்து வந்திருந்த கையேடு ஒன்றைக் கொடுத்து, இந்துமுகியையும் அறிமுகப் படுத்த வேண்டும் என்று, சுகவனேசன் முதலில் எண்ணியிருந்தான்.



ஆனால் 'சைட்' டில் அவன் நடந்து கொண்ட விதம், எப்போதடா இவனை ஹோட்டலில் கொண்டு போய்த் தள்ளிவிட்டு, ஒதுங்கி கொள்வோம் என்று நினைக்க வைத்து விட்டது!

அத்தோடு, அலுவலகத்தில் இந்துமுகி இருப்பாள்! அவளை, இவனுக்கு அறிமுகப்படுத்துவது இருக்கட்டும் இந்தப் பதரின் கண்ணில் அவள் படுவதே தப்பு!

இந்த நாய், அவளைப் பார்த்துவிட்டால், அழகே உருவான அவளைக் கணக்குப் பண்ணித் தருகிறாயா என்று, சுகனிடமே கேட்கக் கூடும்! இவனுக்குத்தான், பெண்களைப் பார்த்து விட்டால், மனித நாகரீகமே மறந்து விடுகிறதே! அப்படி ஏதும் கேட்டுவிட்டால், அப்புறம் இவனது கைகால்களை உடைக்காமல் விட, சுகவனேசனால் முடியாது! அதன் பின் விளைவுகள், என்னென்னவோ ஆகக் கூடும்!

எனவே, இவனை அலுவலகத்துக்கு அழைத்துப் போகாதிருப்பது, எல்லோருக்குமே நல்லது!

பரிபூரணனை அடியோடு கை கழுவவும், சுகவனேசனால் முடியவில்லை!

"உங்களைப் போலக் கொள்கைப் பிடிப்பு உள்ளவர்களோடு பழகினால், பூரணனுக்கு எவ்வளவோ நல்லது, சுகன்! அதனால்தான், ஒரு பத்து நாட்கள் அங்கே இருக்கும்படியாக, அவனை வரச் சொன்னேன், உங்களைப் பார்த்தாவது, அவனும் படிக்கட்டுமே!" என்று ஆவலாகப் பேசிய ஞானசேகரனிடம் முகத்தில் அடித்தாற்போல, அவனுக்கும் எனக்கும் சரிப்படாது என்று கூறவும் சுகனால் முடியவில்லை!

எப்படியும், தம்பியுடைய மனைவி ஆகப் போகிறவள், வினோதினி. அவளுக்காக இப்படி ஓர் உறவைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று, அவ்வப்போது பரிபூரணனைத் தன்னோடு அழைத்துச் சென்றான் சுகன்!

தவிர்க்க முடியாமல், சில சமயங்களில், அவனை அலுவலகத்துக்கும் கூட்டிப் போக நேர்ந்தது உண்டு!

அப்போதெல்லாம், கள்ளம் கபடற்று, எல்லோருடனும் கலகலப்பாக பேசிப் பழகும் இந்துமுகி, இவன் முன்னே வந்து, தன்னோடு பேசத் தொடங்கி விடுவாளோ, என்று உள்ளூர சுகனுக்குக் கவலையாக இருக்கும்! அப்புறம், அவளை, இவனுக்கு அறிமுகம் செய்தாக வேண்டுமே!

ஆனால் எப்படியோ, ஒருதரம்கூட, இந்த மாதிரி நேரவே இல்லை!

முதல் இரண்டு சமயங்களைத் தற்செயல் என்று எண்ணிய சுகவனேசனுக்கு, அடுத்த முறை, உண்மை புரிந்து போயிற்று!

பரிபூரணனைச் சரியாகக் கணித்துவிட்ட இந்துமுகி, கவனத்துடன் அவனைத் தவிர்க்கிறாள்!

உள்ளூரப் பெருமிதாக இருந்தது, அவனுக்கு!

'இன்னொருவர் சொல்ல வேண்டுமா, இந்துவுக்கு?' என்று கர்வப் புன்னகையோடு எண்ணமிட்டவன் திடுமென அதிர்ந்தான்!

அவனும்தான், இந்துமுகியைப் பார்த்து நாளாயிற்று!

அவ்வப்போது, பரிபூரணனோடு அலைவதுதான் காரணம் என்று சொல்லித் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ள, அவன் தயாரில்லை!

அலுவலகத்தில் சந்திக்க முடியாததற்கு, அது காரணமாக இருக்கக்கூடும்!

ஆனால் இந்த நாலு நாட்களாக, அவர்களது வீட்டுக்கும் அவள் வரவில்லையே!

அதைக்கூட, திருமண விஷயமாகத் துணிமணி வாங்குவது பற்றிப் பேசுவதற்குத் தந்தையோடு, பரிபூரணனும் வந்ததைக்



காரணமாக - சும்மா பேருக்கு ஒரு காரணமாக எடுத்துக் கொள்ளலாம்!

ஆனால், அலுவலகம் செல்ல அவன் அழைக்கப் போகுமுன்னரே கிளம்பிப் போய்விடுவதும், ஒரு சின்னச் சீட்டு எழுதி அனுப்பிவிட்டு, அவன் கிளம்புமுன் மாலையில் திரும்பிப் போய்விடுவதும், பத்திரமாக வந்து சேர்ந்தாளா என்று பார்க்கப் போனால், தலைவலி என்று, தூங்கப் போய்விடுவதும்...

இவையெல்லாம் சொல்லும் சேதி, ஒன்றே ஒன்றுதான்!

அதாவது பரிபூரணனைப் போலவே, அவனையும் - இந்த சுகவனேசனையும் இந்துமுகி தவிர்க்கிறாள்!

இருவரையுமே, அவள் ஒன்றாகவா மதிக்கிறாள்?

என்ன அநியாயம்?!




இந்துமுகி, தன்னைத் தவிர்க்கிறாளோ என்பதே, சுகவனேசனுக்கு மிகவும் உறுத்தலாக இருந்தது!

அதிலும், அந்தப் பொறுக்கி, பரிபூரணனுக்குச் சமதையாக நடத்துவதை, அவனால் தாங்கவே முடியவில்லை!

உடனே இவளை அழைத்துக் கேட்க எண்ணினால், உடம்பு சரியில்லை என்று, லீவு எழுதிக் கொடுத்துவிட்டுச் சென்றிருப்பதாகத் தெரிய வந்தது!

என்ன உடம்பு சரியில்லை? எல்லாம் பொய்! அவனை நேராகப் பார்த்து உடம்புக்கு என்ன என்று சொல்லிவிட்டுப் போக முடியாதோ?

அவன் முகத்தைப் பார்த்துவிட்டு, “சில தினங்களாகவே, இந்துமுகி கொஞ்சம் ஒரு மாதிரி சோர்வாகத்தான் தோன்றினாள்!” என்றார் மானேஜர்!

ஒரு வேளை, உண்மையாகவே, அவளுக்கு உடம்பு சரியில்லையோ என்று, சுகனின் மனம் கலங்கியது!

திரைப்படங்களில் வருகிற மாதிரி, ஏதாவது பெரிய நோய்... அதற்காகத்தான், அதைச் சொல்லாமலே, அவனை ஒதுக்க முயற்சிக்கிறாளோ?

இனி, அவளைப் பாராமல், எந்த வேலையும் ஓடாது என்று தெரிந்தது.

வீட்டுக்குச் சென்று, அவளைப் பார்த்துவர எண்ணி அவன் எழுந்தபோது, மயூரேசன் வந்தான்.

“இந்த இந்துவைப் பார் அண்ணா! பட்டுச் சேலை தேர்ந்தெடுக்கக் காஞ்சீபுரத்துக்கு வா என்றால், முகத்தில் அடித்தாற்போல, முடியாது என்று விட்டுப் போகிறாள்! வினுவுடைய குடும்பமே, கூட இருக்கிறபோது, அவள் இப்படிச் சொன்னால், எனக்கு எவ்வளவு அவமானம்! எனக்கு, ரொம்பவும் தலையிறக்கமாகப் போயிற்று! வினு அண்ணன் கூட, அவளிடம் தானே சென்று பேசிப் பார்ப்பதாகச் சொன்னார். மாமாதான் வேண்டாம் என்று விட்டார்! அவருக்கு, அவள் மேல் கோபம் என்று நினைக்கிறேன்!” என்று அவனும் இந்துமுகியின் மீது குற்றப் பத்திரிகை படித்தான்.

என்ன ஆயிற்று, இந்துவுக்கு? இவனையும் விரட்டுகிறாளோ!

பழைய சந்தேகம் வலுப்பெற, சுகவனேசனின் தவிப்பு மேலும் அதிகரித்தது.

முக்கியமான காகிதங்களை எடுத்து, உள்ளே வைத்து மேஜையின் இழுப்பறையை அவன் பூட்டுகையில், சின்னவன் சொல்லிக்கொண்டே போனான்!



“வினு, வினு என்பாளே, அண்ணா! அவளைப் பார்க்க, ஒரே தடவை என்கூட வந்ததோடு சரி! அப்போதுகூட, ‘இதோ வருகிறேன்’ என்று சொல்லிப் போனவள் திரும்பி வரவே இல்லை! பிறகு, வினுவுக்கு போன் செய்து மன்னிப்புக் கேட்டாளாம்! அதற்குப் பிறகு, ஆளைக் கண்ணிலேயே காணோம்! இவள் இப்படிப் பண்ணுவாள் என்று தெரியாமல், நான் வேறு, வினுவிடம், இவளை ‘இந்திரி, சந்திரி’ என்று புகழ்ந்து தள்ளி விட்டேன்! உங்கள் தேவ மங்கை எங்கே என்று, அவளும் என்னை வறுத்தெடுக்கிறாள். ஆனாலும், இந்த இந்து சுத்த மோசம், அண்ணா!”

“ஏன் இப்படி இருக்கிறாள் என்று, கேட்டுத் தெரிந்து சொல்லுகிறேன்!” என்றபடி, கைப்பெட்டியை எடுத்தான் சுகன்.

“துணி, நகை தேர்ந்தெடுப்பதில், இந்துவுக்குத் தனித் திறமை உண்டு! அதனால், அவளையும் கூட்டிப் போகலாம் என்றால், பெரிய பிகு பண்ணிக் கொள்கிறாள்! அம்மாவிடம் சொன்னால், போகட்டும், அவள் என்ன நம் வீட்டுப் பெண்ணா, என்று அவர்களும், ஏனோதானோ என்று பதில் சொல்லுகிறார்கள்! முன்னெல்லாம், அவள் மீது, எவ்வளவு உயிராக இருப்பார்கள்! இப்போது, இப்படிப் பேசலாமா? இந்தப் பெண்கள் புதிர்கள் என்பது, சரியாகத்தான் இருக்கிறது! நல்ல வேளையாக, என் வினு மட்டும் அப்படியில்லை! அந்த மட்டும் கடவுள் காப்பாற்றினார்! என்று தொடர்ந்து சொல்லி ஒருவாறு ஓய்ந்தான், மயூரன்!

திருமணம் பற்றித் தாயுடன் பேசியது நினைவு வர, சுந்தரவல்லியின் விட்டேற்றியான போக்கின் காரணம்புரிந்தது!

ஆனால், முதலில் சும்மாவே இந்துவிடம் அன்னை அன்பு காட்டவில்லையா? இடையில்தானே, இந்த எண்ணம், பேச்சு எல்லாம்? இடையில் வந்ததை, இடையிலேயே விட்டுவிட்டு, இந்த அம்மா முன் போலவே நடப்பதற்கென்ன?

அந்த அன்பு, இந்துவுக்கு மிகவும் தேவைப்படும் நேரமாகக்கூட, இருக்கலாம்!

வயதான தாத்தா, பாட்டியிடம் சொல்ல முடியாததை, இந்துமுகி, சுந்தரவல்லியிடம் தெரிவிக்கக் கூடுமே! அந்த அளவு சொந்தம், அவளுக்குச் சுந்தரவல்லியிடம் எப்போதுமே உண்டு அல்லவா?

இந்துமுகியின் போக்கு, அதன் காரணம் எல்லாமே, சிறிதும் கவலைப்படத் தேவையில்லாத அற்ப விஷயமாகக் கூட இருக்கலாம்!

ஆயினும், அது என்ன வென்று, தெரிந்து கொண்டாலன்றித் தனக்கு அமைதியிராது என்று உணர்ந்து, இந்துமுகியைத் தேடிப் போனான், சுகனேசன்!

அங்கே, அவளது வீட்டுக்குப் போனால், "என்னப்பா, இந்துவுக்கு இப்போது என்ன அவசரம்? 'எங்கே, எங்கே' என்று அலுவலகத்திலிருந்து தினம் நாலு போன்! இப்போது நீயானால், நேரிலேயே வந்துவிட்டாய்! அதுதான், புத்தகம் முடிந்துவிட்டது, இனி வேறு வேலை தேட வேண்டும் என்றாளே! அப்புறம் என்ன?" என்று, எரிச்சலோடு கேட்டார், அவளுடைய தாத்தா!

"வேறு வேலையா? என்ன தாத்தா சொல்லுகிறீர்கள்? எனக்கு ஒன்றும் புரிய வில்லையே!" என்று சுகவனேசன் திகைத்தான்.

அவன் முகத்தைப் பார்த்துவிட்டு, "எனக்கும்தான் எதுவும் புரியவில்லை! தாயாய், பிள்ளையாய்ப் பழகிக்கொண்டு இருக்கிறோம்! திடீரென்று, 'வேலை அவ்வளவுதான் வீட்டைக் கூட மாற்ற வேண்டும்' என்று, வாடின முகத்துடன் பேத்தி வந்து நின்றால், எனக்கு எப்படி இருக்கும் சொல்லு!" என்று திரவியம் கேட்க, சுகவனேசன் மேலும் திகைத்தான்!

வீடு வரை மாற்ற வேண்டும் என்றால், ஏதோ பெரிய விஷயமோ என்று தோன்றியது! ஆனால் அப்படி என்ன இருக்க முடியும்? அவன் கலங்கியது போல, நோய் என்றாலும், இந்தப்



பெரியவர்களை அழைத்துக்கொண்டு, வீடு மாற்றிப் போவதால் என்ன சாதகம்?

வேறு என்ன?

பழச்சாறு கொண்டு வந்து வைத்துவிட்டு, எதிரே அமர்ந்த பாட்டியும் அதைத்தான் கேட்டாள், "என்ன விஷயம்ப்பா? நம்ம ஊரில் நிம்மதியாக இருக்கலாம் என்று வந்தோம்! ஆனால், இங்கேயும் குடியைக் கிளப்ப வேண்டும் என்றால், மனதுக்குச் சங்கடமாக இருக்கிறதே! ஆனால், இது பற்றி, உங்கள் வீட்டில் யாரிடமும் பேசக் கூடாது என்றாள். அதிலும், உன்னிடம்தான், இது பற்றிப் பேசவே கூடாதமாம்! அனாவசியமாக உன் வீட்டில் தகராறு ஆகிவிடுமாம்! கேட்டது தெரிந்தால், கோபப் படுவாள் தான், ஆனால், விஷயம் புரியாமல் குழம்புவது, ரொம்பக் கஷ்டமாக இருக்கிறதே! சொல்லு என்ன ஆயிற்று?"

என்ன ஆயிற்று?

தலையை அசைத்தான் சுகவனேசன், தொடர்ந்து, "தாத்தா, பாட்டி, இருவரும் என்னை நம்புவீர்கள் அல்லவா? நீங்கள் சொல்லும் அத்தனையும் எனக்கும் புதிராகத்தான் இருக்கிறது! முதலில், வேலை விஷயம்! நிறுவனத்துடைய எம்டியான நான் அறிந்த வரையில், இந்துவை யாரும் வேலையை விட்டு நிறுத்தவில்லை! என்னைத் தவிர யாரும், அதைச் செய்யவும் முடியாது! புத்தகம் முடிந்தபின், 'டிராயிங்' பகுதியில் இந்துவுக்கு, முன் சொன்னது போலவே, வேலை போட்டுக் கொடுத்து, அவளும், அதைச் செய்து வருகிறாள். நாலு நாளாக, அவளைப் பார்க்கவே முடியவில்லை! காலையில், இரவில் நான் வந்து பார்ப்பது உங்களுக்கே தெரியும்! எங்கள் வீட்டில் என்ன தகராறு? வழியே இல்லை! மயூரன்கூட, இன்று வந்து, இந்துவைக் காணவில்லையே என்று கேட்டான்..."

"ஒரு வேளை, அந்தப் பெண்... மய்யூவும் இந்துவும் சாதாரணமாகப் பழகுவதை, அவள் தப்பாக எடுத்துப் பேசியிருப்பாளோ?"

"சேச்சே! வினு, அந்த மாதிரிப் பெண்ணே இல்லை, பாட்டி! இந்து கெட்டிக்காரி என்று, கல்யாணப் பட்டு வாங்கக் காஞ்சீபுரத்துக்கு இவளைக் கூப்பிட்டுக் கொண்டு இருக்கிறாளே! ஊகூம்! அதெல்லாம் இல்லை! வேறு என்னவோ!" என்றசுகன், உள்ளிருந்து உறுத்தல் தாளாமல், "பாட்டி நீங்கள் அவளை நன்றாகக் கவனித்தீர்களா? அவளுக்கு உ...உடம்பு நல்ல ஆரோக்கியமாகத்தானே, இருக்கிறது?" என்று, ஒருவாறு கேட்டுவிட்டான்.

"உடம்பா... அவள் உடம்புக்கு ஒன்றும் இல்லையேப்பா! மூன்று நாட்களுக்கு முன்னேகூட, வழக்கம்போல, 'ப்ளட் பாங்க்'கில் ரத்தம் கொடுத்துவிட்டு வந்தாளே! வழக்கம் போல, நான்தான் கூடப் போனேன்!" என்றாள் பெரியவள்.

அப்பாடா! ஒன்றும் இல்லை! அவன் அஞ்சியதுபோல, இந்துவுக்குப் பெரிய நோய் ஏதாவது இருந்திருந்தால், அவளிடம் இருந்து ரத்தம் எடுக்க மாட்டார்கள். யாராவது, எப்படியேனும் போகட்டும் என்று, நோயுள்ள ரத்தத்தை, இந்துமுகியும் கொடுக்க மாட்டாள்! அப்படி நினைக்கக் கூடியவள், மூன்று மாதத்துக்கு ஒருதரம் ரத்தம் கொடுக்கிற வழக்கத்தையே, தொடங்கி இருக்க மாட்டாளே!

ஆக, இந்துமுகிக்கு, உடம்புக்கு ஒன்றும் இல்லை!

இந்த விஷயம், இவ்வளவு ஆறுதல் தரும் என்று, சுகனே எதிர்பார்க்கவில்லை!

அந்த அளவுக்கு, இறுக்கம் தளர்ந்து, 'அப்பாடி' என்று விழ வேண்டும்போல இருந்தது அவனுக்கு!

இன்னும், பிரச்சினை அப்படியேதான் இருந்தது! ஆனால், அது உடம்பு சம்பந்தப்பட்டது அல்ல!

இது வேறு ஏதோ!

ஆனால், உடம்பு ஆரோக்கியமாக இருந்தால், வேறு எந்த பிரச்சினையாக இருந்தாலும் சமாளித்துவிடலாம். என்று



தைரியம் இருக்கவே, பெரியவர்களிடமும், அவன் அதையே சொன்னான்.

"நீங்கள் இருவரும் எதற்கும் கவலைப்படாதீர்கள். வீடு மாற்றுவதற்கும் விடாதீர்கள்! முதலில், தம்பியின் திருமணம் முடியட்டும்! இன்னும் ஒரு வாரம் பொறுங்கள். எல்லா விசேஷங்களையும் வைத்துக்கொண்டு இப்போது, இந்துவிடம் ஆற, அமர, உட்கார்ந்து பேச, என்னால் முடியவில்லை! வாய்ப்புக் கிடைத்தால் அதற்குள்ளாகவே அவளோடு பேசிப் பிரச்சினையைத் தீர்த்து விடுகிறேன். பெரிதாக, எதுவும் இராது! ஏதாவது, சின்ன தப்பு அபிப்பிராயமாக இருக்கும்! இனிமேல், கொஞ்சமும் கவலைப்படாதீர்கள்!" என்று சொல்லி, அவர்களிடம் விடை பெற்று சுகவனேசன் கிளம்பினான்.

கிளம்புமுன் ஒன்று தோன்ற, "அலுவலகத்திலிருந்து, யார் போன் செய்தார்கள்?" என்று விசாரித்தான்.

"யார் என்று, பெயர் சொல்லவில்லையேப்பா! ஏதோ, அவள் வேலை பார்க்கும் பிரிவில் விசாரிக்கச் சொன்னார்கள் என்றான், அந்த ஆள்! டெலிபோன் ஆபரேடர் கேட்டிருப்பான் என்று எண்ணினேன்! ஏன், சுகன்? என்ன விஷயம்? அலுவலகத்தில் எவனும், அவளுக்குத் தொல்லை கொடுக்கிறானோ?" என்று திரவியம் கவலையோடு வினவினார்!

"ம்ம்ம்... அப்படி இராது, தாத்தா! இந்து, நம் வீட்டுப் பெண் என்று எல்லோருக்கும் தெரியும், நானே அழைத்துப் போகிறேனே! அதனால், அலுவலகத்தில் உள்ள யாரும், அவளிடம் வாலாட்டத் துணிய மாட்டார்கள். ஒருவேளை, வேலையில் ஏதாவது பிரச்சினையோ, என்று நினைத்தேன்! எதுவானாலும், என்னிடம் பேசிவிட்டே முடிவு பண்ணச் சொல்லுங்கள். வரட்டுமா?" என்று, காரை நோக்கி நடந்தான் அவன்.

அலுவலகத்துக்குப் போய் விசாரித்தபோது, அங்கே யாருமே, இந்துவின் வீட்டுக்கு டெலிபோன் பண்ணவில்லை என்று தெரியவந்தது!

ஆனால், யாரோ இந்துமுகியின் வீட்டு டெலிபோன் எண்ணைக் கேட்டு வாங்கினார்கள் என்றார்கள். டெலிபோனிலேயே கேட்டதால், எண் வாங்கியவர் யார் என்று தெரியாது என்றார்கள்.

ஒரு சின்னப் பெண்ணின் டெலிபோன் எண்ணைக் கேட்டால், சும்மா கொடுத்து விடுவதா? போனில், அங்கே பெரிய தொல்லையாகி விட்டதாம்! வருத்தப்பட்டார்கள்! என்று, தான் விசாரித்ததற்கும், அதுவே காரணம் போல, விஷயத்தை முடித்தான்!

ஆனால், இந்த போன் எண் கேட்டவனுக்கும், இந்து நடந்துகொள்ளும் முறைக்கும், ஏதேனும் தொடர்பு இருக்கக் கூடும் என்று, அவனுக்குத் தோன்றியது!

அனால், எவனோ ஒருவன் போன் செய்தான் என்று, தன்னிடம்... தன்னுடைய குடும்பத்திடம், இந்துமுகி வெறுப்புக் காட்டுவானேன்? ஒட்டு மொத்தமாக, ஒதுக்குகிறாளே!

சுகவனேசனுடைய குடும்பத்தை, அந்த வில்லனோடு இணைப்பது, என்னவாக இருக்கக் கூடும்?

அதைக் கண்டுபிடித்தால், இந்தப் பிரச்சினையே தீர்ந்து போகும் என்று, நிச்சயமாக நினைத்தான், சுகவனேசன்!




இந்துமுகியுடைய தாத்தாவும் பாட்டியும், அவளிடம் என்ன சொன்னார்களோ, மறுநாள் அலுவலகத்துக்குச் செல்ல, சுகவனேசனுக்காக, அவள் காத்திருந்தாள்!

ஆனால், இடைப்பட்ட நாலு நாட்களைப் பற்றி, அவன் பேசுவதற்கு, அவள் இடம் கொடுக்கவே இல்லை!



ஏதோ சில நாட்களாக, அவளுக்குக் கொஞ்சம் சோர்வாக இருந்தது தவிர, வேறு எதுவுமே நடக்காதது போல, அவள் காட்டிக் கொள்ளவும், அவனும் விட்டுப் பிடித்தான்!

இருக்கட்டும்! இங்கேதானே இருக்கப் போகிறாள்! மயூரனின் திருமணம் முடிந்தபிறகு, இவளோடு, நிதானமாகப் பேசலாம்!

பேசுவதற்கு நிறையவே இருக்கிறதே! மிகமிக முக்கியமா...ன விஷயங்கள்!

புன்னகையோடு, இந்துமுகியை, அவள் போக்கிலேயே போக விட்டான், சுகவனேசன்!

அன்றைக்குத் திருமண மண்டபத்தைப் பார்த்துவிட்டு வர, சுகவனேசன் இந்துமுகியையும் உடன் வரச் சொல்லி அழைத்தான்.

முதலில் அவ்வளவாகப் பிடிக்காதது போலப் பேசி, இந்துமுகி, ஒதுங்கிக் கொண்டாள்.

வற்புறுத்திக் கூப்பிட, அவனுக்கும் பிடிக்கவில்லை! அவள் இங்கே இருக்கிறாள் என்பதே போதும்! அவளது விருப்பத்துக்கு மாறாக, அவள் எதையும் செய்ய வேண்டாம் என்று எண்ணினான் அவன்!

இந்த நிலையில், மயூரன் தன் வழக்கமான ஆரவாரத்துடன், அலுவலகத்துக்குள் வந்தான்!

“என்ன மானேஜர் சார், வரும் வெள்ளிக்கிழமை, திருமணம் தெரியும் அல்லவா? அலுவலகத்தில், எல்லோருக்கும் விடுமுறை அறிவித்து விட்டீர்கள் அல்லவா? அத்தனை பேரும், குடும்பத்தோடு வந்துவிட வேண்டும்! ஓர் ஆள் குறைந்தாலும், நான் உங்களைச் சும்மா விட மாட்டேனாக்கும்!” என்றபடி, அண்ணனின் அறைக்குள் நுழைந்தான்!

கையில், ஒரு நீள நோட்டுப் புத்தகத்துடன் இந்துமுகியை உள்ளே பார்த்ததும், ஏதோ வேற்று கிரகவாசியைப் பார்த்தது

போல, வாயைப் பிளந்து கொண்டு, அப்படியே நின்று விட்டான்!

சில வினாடிகளில், அவனது நடிப்பு புரிந்து விட, "வண்டு! பெரிய வண்டு, மய்யூ! உன் திறந்த வாய்க்குள் போய்விடப் போகிறது! அப்புறம், உலகத்திலேயே, வயிற்றுக்கு உள்ளிருக்கும் வண்டை, அறுவை சிகிச்சை செய்து எடுத்த ஒரே ஆள் என்று 'கின்னசி'ல் உன் பெயர் வந்து விடப் போகிறது! வாயை மூடிக்கொள்!" என்று சிரித்தாள் இந்துமுகி.

"ஆகா! உனக்குச் சிரிக்க வேறு, நினைவிருக்கிறதா? ஆச்சரியம்தான்! அதைவிட ஆச்சரியம், எங்களை அடையாளம் தெரிவது! ஏன் அண்ணா, யாருக்காவது, இவ்வளவு சீக்கிரமாக அம்னீஷியா குணமாகுமா?" என்று அண்ணனிடம் கேட்டான் மயூரன் குறையோடு!

"ஐயோ, என்னப்பா நீங்கள் உங்களுக்கெல்லாம், ஒரோர் சமயம், உடம்பு சோர்வாக இருந்ததே இல்லையா ஆளாளுக்குப் பாய்கிறீர்களே!" என்று சமாதானமாகப் பேசினாள் இந்துமுகி.

"அப்படியானால், நாங்கள் எல்லோரும், இன்றைக்கு நகைக்கடைக்குப் போகிறோம், வருகிறாயா?"

"நாங்கள் எல்லோரும் என்றால்?"

"ஏன்? அதைச் சொன்னால்தான், அம்மையார் வருவீர்களா? கேட்டுக்கொள்! என் பட்டியலில், உன் விரோதி யாரும் இல்லை! நான் என் அம்மா, வினு, வினுவுடைய அப்பா, அண்ணன், டிரைவர்... அண்ணா, என் காரை இங்கே நிறுத்திவிட்டு, 'குவாலிஸை' எடுத்துப் போகிறேன்! அதில் தான் நிறையப்பேர் வசதியாகப் போக முடியும்! ... என்ன மகாராணி வருகிறீர்களா? நகை...க்கடை! அப்படியே தங்களுக்கும் ஒரு செட் பார்க்கலாமே!" என்று ஆசைக் காட்டிவிட்டு, "சீக்கிரமே தேவைப்படுமே! என்ன அண்ணா சொல்லுகிறாய்?" என்று முடிவு செய்ய வேண்டியவன் சுகன்தான் போல, அவனிடம் கேட்டான், மயூரேசன்.



சுகவனேசன், இந்துமுகியைக் கேள்வியாய்ப் பார்க்க, மறுப்பாகத் தலையசைத்தாள் அவள். "வெகு முக்கியமாக, வேறு வேலை இருக்கிறதே, மய்யூ! நானும் சுகனும் கல்யாண மண்டபத்தைப் பார்க்கப் போகிறோமே! மணமேடை அலங்காரம், வெளியே என்ன மாதிரி ஒளி அமைப்பு, யார்யாருக்கு எந்த அறைகள் .... எல்லாம் இன்றைக்கு முடிவு செய்யப் போகிறோம்! அதை விட்டு, இங்கே வர முடியாதே." என்றாள்.

"ஆமாமடா! அது ஒரு வேலை, இன்று தீர்மானமாகச் சொல்லிவிட்டால், பூக்கடைக்காரரும், எலக்ட்ரீஷியனும் அவரவர் வேலையைப் பார்ப்பார்கள். அதனால், நானும், இந்துவும், மண்டபத்துக்குப் போகிறோம்!" என்றான் சுகவனேசன்.

"ச...ரி.." என்று இழுத்த மயூரேசன் சட்டெனச் சிரித்தான்.

"என்னடா?"

"அதுவா?... எல்லா வேலைகளையும், நேரிலே போய்ப் பார்த்துப் பார்த்துச் செய்து கொண்டு இருக்கிறீர்களே, உங்கள் திருமணத்தின்போது எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார்த்தேன்! ஜரிகைச் சேலையைத் தூக்கிக் கட்டிக்கொண்டு மணப்பெண் அலங்காரத்துடன், இந்து 'விசுக் விசுக்'கென்று அங்கும் இங்கும் நடப்பதுபோலக் கற்பனையில் ஒரு காட்சி தோன்றிற்றா, அப்படியே சிரிப்பு வந்து விட்டது!"

புன்னகையோடு, சுகவனேசன் திரும்பினால், இந்து எங்கோ பார்த்துக் கொண்டு நின்றாள். "நான் என்றேனும் திருமணம் செய்துகொண்டால்தானே?" என்று, அக்கறையற்று முணுமுணுத்தபடி!

"எல்லாம் செய்து கொள்ளுவாய்! அண்ணன் செய்து கொள்ள வைப்பான்!" என்று மயூரன் அழுத்தமாகக் கூறவும், திடுக்கிட்டுத் தம்பியைப் பார்த்த சுகவனேசன் அவசரமாகக் குறுக்கிட்டு, "ஏய், நீ காரை எடுத்துப் போக வந்தவன்! சும்மா

வாயாடிக் கொண்டு நின்று, நேரத்தைப் போக்காதே! அப்புறம் அம்மா, வினு இரண்டு பேரிடமும் திட்டு வாங்குவாய்! ஜாக்கிரதை!" என்று எச்சரித்தான்.

"ஐய்யய்யோ! ஆமாம் டோய்! புது ஆளாய் மச்சான் வேறு வந்திருக்கிறார்! மச்சான், இரண்டு நாட்களில் வரப் போகும், மச்சான் மனைவி, மச்சான் குழந்தை.... எத்தனை புதுஉறவுகள், அண்ணா! இத்தனை பேரிடமும் நல்ல பேர் வாங்குமுன், வியர்த்து விறுவிறுத்துப் போய் விடும் போல இருக்கிறது! சரிசரி, நான் கிளம்புகிறேன்! சாவியைக் கொடு!" என்று, கார்ச் சாவியை வாங்கி கொண்டு ஓடினான் அவன்!

கையில் இருந்த சில முக்கிய வேலைகளை முடித்துக் கொண்டு, இவர்கள் இருவரும் திருமண மண்டபத்துக்குக் கிளம்பினார்கள்!

மணமேடையில் பூ அலங்காரம், ஹாலில் செயற்கை மரம் செடி கொடி, செய் ஊற்று அமைப்பு, உள்ளேயும் வெளியேயுமாக மின் விளக்கு அலங்காரங்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாக, சுகனும் இந்துமுகியுமாக முடிவு செய்தனர்.

முன்பே திட்டமிட்டதுதான். சில கடைசி மாறுதல்களுடன், அததைச் செய்ய வேண்டியவர்களிடம் வேலையை ஒப்படைத்தனர்.

கல்யாண மண்டப நிர்வாகி, அங்கிருந்த தலையணை, மெத்தை, போர்வை போன்ற படுக்கை வசதிகள் வந்து பார்க்குமாறு அழைத்தார். இன்னமும் அதிகமாகத் தேவைப் படுமானால், அவர்களது இன்னொரு மண்டபத்திலிருந்து வரவழைக்க முடியும் என்பதால், எவ்வளவு தேவைப்படும் என்பதைத் தெரிவிக்குமாறு கோரினார், அவர்.

அரை கிலோ மீட்டர் தூரத்தில், சுகவனேசனுக்கு, இன்னொரு வேலை கிடைத்திருந்தது.



திருமண மண்டபத்து வேலையோடு, அந்த இடத்தையும் ஒருதரம் நேரில் பார்த்துவிட்டுத் திரும்புவதற்காகத்தான் சுகவனேசன் திட்டமிட்டிருந்தான்.

எனவே, இந்துமுகியிடம் படுக்கை வசதிகள் பற்றிக் கவனிக்குமாறு கூறிவிட்டு அரை மணி நேரத்தில் திரும்பி விடுவதாகக் கூறி, அவன் தொழிலைக் கவனிக்கச் சென்றான்!

சொன்ன நேரத்தில் அவன் திரும்பி வந்தபோது, மண்டபத்தில் எடுபிடி வேலை செய்கிறவன் ஓடி வந்து, "பெண் வீட்டுக்காரங்க வந்திருக்கிறாங்க, சார்! ஆனால், ஏதோ அவசர வேலை இருப்பதாக, மேடம் கொஞ்ச முன்னே ஆட்டோவிலே கிளம்பிப் போய் விட்டாங்க! நீங்க கேட்டா, சொல்லச் சொன்னாங்க!" என்றுரைத்தான்.

அவனுக்குத் தெரியாமல், அப்படி என்ன அவசர வேலை என்று யோசித்தபடியே சுகவனேசன் மண்டபத்தின் உள்ளே சென்றபோது, பக்கவாட்டு அறை ஒன்றிலிருந்து, ஞானசேகரனின் குரல் உரத்துக் கேட்டது!

"திருமணமாகி, ஐந்து ஆண்டுகள் கழித்துப் பிறந்தாயடா! அந்தக் கடவுளைக் குறிக்கும் விதமாகப் பரிபூரணன் என்று பெயர் வைத்தோம்! ஆனால், நீயோ, முன் பாதியை மட்டுமே, உன் பெயராக எண்ணிவிட்டாய் போல! குதிரை மாதிரி, எட்டு திக்கிலும் புத்தியும் பார்வையும் போய் விடுகிறது! சே! டெல்லியில்தான் அப்படி என்றால், இங்கே வந்த இடத்திலுமா அப்படி? அதிலும், தங்கையைக் கொடுக்கிற இடத்தில் வந்து தேவலப்படுத்துகிறாயே! சேர்ந்துதானே வந்தோம்! நான் உள்ளே வந்து சேருமுன் ஓடி வந்து, அவளிடம் இளிக்க வேண்டுமா? நகைக் கடையில் இருந்து, இங்கே உடனே வரவேண்டும் என்று, ஏன் துடித்தாய் என்று, இப்போது விளங்குகிறது! முதலில், நீயும் ஒரு விஷயத்தை நன்றாகத் தெரிந்து கொள்! அந்தப் பெண் இந்துவை, இங்கே இவர்கள் வீட்டில், சொந்தப்

பெண்ணைப் போல, வைத்திருக்கிறார்கள்! அவளிடம் வாலாட்டினால், அந்தக் குடும்பமே கொதித்துவிடும். வினு கல்யாணமே நின்றாலும் நின்றுவிடும்! அந்த மாதிரி ஏதாவது நேர்ந்தது என்றால், உன்னை ஒன்றும் இல்லாமல் நடுத்தெருவில் நிறுத்தி விடுவேன், ஜாக்கிரதை!'' என்று மகனை மிரட்டிக் கொண்டிருந்தார், அவர்!

சட்டென, ஏதோ வெளிச்சம் தெரிந்தது போல இருந்தது, சுகவனேசனுக்கு!

பரிபூரணன் டெல்லியில் இருப்பவன்!

இந்துமுகி, டெல்லியில் இருந்து, இங்கே திரும்பி வந்தவள்!

அவளுடைய தாத்தா, பாட்டியின் பேச்சுப்படி பார்த்தால், டெல்லியில் வசிப்பது சிரமம் ஆகி, அதுவும் இளம் பெண்ணான அவர்களுடைய அருமைப் பேத்திக்குச் சிரமமாகி, அதனால் பேத்தியோடு சென்னைக்குக் குடி பெயர்ந்து வந்திருக்கிறார்கள்!

டெல்லி வாழ்வைச் சிரமம் ஆக்கியவன், பரிபூரணனா?

அவன் வந்ததிலிருந்துதானே, இந்துமுகி, ஒளிந்து ஓடுவது?

படிப்பைக்கூட முடிக்காமல், ஓடிவர வைத்திருக்கிறான்! ராஸ்கல்! என்ன செய்திருப்பான்? எதுவாயினும், ரொம்பவே தொல்லை கொடுத்திருக்கிறான்!

கையில் கிடைத்தால், அவனை அடித்துத் துவைத்துவிட வேண்டும்போல, சுகவனேசனுக்கு ஆத்திரம் பொங்கத்தான் செய்தது!

ஞானசேகரன் சொன்னது போலவே, அவனுக்குக் கொதிப்பு உண்டாயிற்று!

ஆனால், அடித்தற்குப் பிறகு?



அதன் பின் விளைவாக, தம்பியின் வாழ்வில் நிம்மதி கெட்டுவிடும்!

அத்தோடு, பரிபூரணனின் தொல்லையால் அல்லவா, இந்து இந்தப்பக்கம் வந்தது!

அந்த நன்றியை மறக்கலாமா?

அதனால், பரிபூரணனைப் போகிறான் என்று, விட்டுவிடலாம்!

ஆனால், இன்னொரு தடவை வாலை ஆட்ட விடாமல், பார்த்துக் கொள்ள வேண்டும்! ஞானசேகரனே அந்த முயற்சியில் ஈடு பட்டிருப்பதால், பொறுத்திருந்து பார்ப்பதுதான் உசிதம்!

'உங்களைப் போன்றவர்களோடு பழகுவது, என் மகனுக்கு நல்லது' என்று ஞானசேகரன் ஏன் சொன்னார் என்பது, அவனுக்கு இப்போது மிக நன்றாக விளங்கியது!

ஆனால், அவரது ஆசை வீண்! பிறரைப் பார்த்துத் திருந்துகிற ஜன்மமா, இந்தப் பரிபூரணன்! தான் செய்வது தப்பு என்கிற எண்ணம் வந்தால் அல்லவா, ஒருவனுக்குத் திருந்தத் தோன்றும்! இவனுக்கு அந்த மாதிரி நினைப்பே இல்லையே!

ஆனால், பரிபூரணனைக் கண்டு மிரண்டு, இப்படி ஓடத் தேவையில்லை என்று, இந்துமுகிக்குத் தைரியம் சொல்லவேண்டும்!

அவனைத் தாண்டியல்லவா, ஒருவன் இந்துமுகிக்குத் தீங்கிழைக்க முடியும்!

பக்க பலமாக, அவன், அவளுக்கு துணையிருக்கையில், எந்தப் பயமும், இந்துவுக்குத் தேவையில்லை!

ஆனால், தைரியமான பெண் என்று, அவன் எண்ணிக் கொண்டிருந்த இந்துவா, படிப்பைக்கூட முடிக்காமல், இப்படிப் பயந்து ஓடி வந்தாள் என்று, உள்ளூர ஆச்சரியப்பட்டபடி, வினோதினியுடைய உறவினரை நாடிப் போனான், அவன்.

ஞானசேகரனின் முகம் சற்று வெளுத்திருந்தது.

அதைக் கண்டதும், சற்றுக் கவலையுடன், "என்னசார், உடம்புக்கு ஒன்றும் இல்லையே! ரத்த அழுத்தத்துக்கான மாத்திரை போட்டு விட்டீர்கள் அல்லவா?" என்று விசாரித்தான்.

"உம். அதெல்லாம் சரியாகப் போட்டுவிடுவேன். இதோ, இவனுக்கு ஒருத்தியைக் கட்டி வைத்திருக்கிறேனே! பரிதாபத்துக்குரிய அவளுக்காகவேனும், நான் ஆரோக்கியமாக இருந்தாக வேண்டுமே!" என்றார் அவர், அலுப்புடன்.

பரிபூரணனின் முகம் கன்றிக் கறுக்க, சுகவனேசனுக்கும் சங்கடமாகிப் போயிற்று!

அவர், தன் மகனைத் தனிமையில் திட்டுவது, வேறு! அவன் முன்னிலையில் மட்டம் தட்டுவது வேறு அல்லவா? எதையும், சுமுகமாகவே சீர் செய்துகொள்வதுதானே, அவனுடைய தம்பி வாழ்வுக்கு நல்லது?

எனவே, பேச்சை மாற்றும் முகமாக, "மண்டபத்தைச் சுற்றிப் பார்த்தீர்களா, சார்? வசதி போதும் அல்லவா?" என்று, அவரிடம் வினவினான்.

"ரொம்பப்..." என்று, ஒப்புதலாக அவர் பேசுமுன் இடையிட்டு, "என்ன வசதி? வேர்த்துக் கொட்டுகிறது! திருமணத்துக்கு வருகிறவர்கள், ஈரத்துணியைப் பிழிந்து கட்டிக்கொண்டு போவது போல வியர்வையில் நனைந்து, திரும்பிப் போகப் போகிறார்கள்!" என்றான் பரிபூரணன்.

சிறு வியப்புடன் சுகவனேசன் நோக்கவும், "ஆச்சரியப் படாதீர்கள், சுகன்! அங்கே, உள்ளே இருப்பது அவ்வளவுதான், கலர் ஒன்றுதான் கண்ணில் படும்! மற்ற எதுவுமே புரியாது!" என்று, பெரியவர் ஏளனமாகப் பேசினார்.

ஆத்திரமுற்று, "என் கண்ணை விடுங்கள்! உங்களுக்கு உடம்பில் சுரணை இருக்கிறதா என்று, எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. வியர்வை கசகசப்பு உங்களுக்குத் தெரிகிறதா



இல்லையா? அல்லது, மாப்பிள்ளை வீட்டுக்காரர் ஏற்பாடு செய்த மண்டபம் ஆயிற்றே என்று, பூசி மெழுகுகிறீர்களா?" என்று, பெற்றவரை மட்டம் தட்ட முயன்றான் பரிபூரணன்.

தந்தையும் மகனும், தன் முன் சண்டையிடுவது பிடிக்காமல், "இந்த மண்டபம், முழுவதும் ஏசி செய்யப்பட்டது, மிஸ்டர் பரிபூரணன். விழாவன்று காலையிலேயே ஏசி போட்டு வைத்து விடுவார்கள்! மற்ற நாட்களில், அனாவசிய மின்சாரச் செலவு என்று, 'ஆஃப்' பண்ணி வைப்பார்கள். இன்றும் அப்படித்தான். அதனால்தான் வியர்க்கிறது! ...இங்கே, உங்களுக்கு, இந்தப் பக்கம் உள்ள அறைகளை ஒதுக்கி இருக்கிறோம். பிடித்திருக்கிறதா என்று பாருங்கள்! வாருங்கள்! நீங்கள் வேண்டுமானால், சற்று நேரம் அலுவலக அறையில் உட்காருங்கள், சார்!" என்று, அவரை உட்கார வைத்துவிட்டுப் பரிபூரணனை அழைத்துக் கொண்டு சென்றான்.

ஆனால், ஞானசேகரனின் காது கேளாத தூரம் சென்றதும், "நாங்கள் வந்த போது, இங்கே நின்று, ஏற்பாடுகளைப் பார்த்துக் கொண்டிருந்தாளே, ஒரு பெண், அவள் உங்களிடம் தான் வேலை பார்க்கிறாளா? அவள் வீடு எங்கே இருக்கிறது?" என்று கேட்கவும், சுகவனேசனுக்கு, ரொம்பவுமே, 'சீ' என்று ஆகிவிட்டது!

சட்டென நின்று, மற்றவனை உறுத்து நோக்கி, "இதோ பாருங்கள், மிஸ்டர் பரிபூரணன், இந்து, எங்கள் குடும்பத்தில் ஒருத்தி! அவளுக்கு ஒன்று என்றால், என் குடும்பம் முழுவதும் சேர்ந்து நின்று, அவளுக்குத் தொல்லை கொடுப்பவரை நசுக்கி விடுவோம்! யார் என்று பார்க்க மாட்டோம்! உங்கள் தங்கையின் வருங்காலக் கணவன், என் தம்பியும் அப்படித்தான்! அதனால், இந்துவிடம் மரியாதையுடன் பழகுவது, உங்களுக்கு நல்லது. டெல்லிக்கு, முழுத் தோலுடன் கிளம்ப வேண்டும், பாருங்கள்!" என்று, இறுகிய குரலில் எச்சரித்தான்!

சில கணங்கள் திகைத்து நின்ற பரிபூரணன், உடனேயே கடகடவென்று சிரித்தபடி, சுகவனேசனின் கையைப் பற்றினான். “என்ன சார், சடக்கென்று, என்ன கோபப் பட்டு விட்டீர்கள்! ஏதோ, பார்த்த முகம் போலத் தெரிகிறதே என்று விசாரித்தேன்! அதற்குள், ஏதேதோ எண்ணி விட்டீர்கள் போல! அதெல்லாம் ஒன்றுமே கிடையாது, சார்! இந்த வயதானவர்கள் பேச்சை வைத்துக்கொண்டு, என்னைத் தப்பாக நினையாதீர்கள்! வாருங்கள், போவோம்! வந்து... அப்பா, சொல்கிற மாதிரி, நீங்கள் எல்லாம் சரியாகத்தான் செய்திருப்பீர்கள்! இனி, இங்கிருந்து கிளம்புவோமா?” என்றான்.

பரிபூரணன் தன் மிரட்டலைச் சரியாகப் புரிந்து கொண்டான்., இனி இந்துவிடம் வாலாட்ட மாட்டான் என்ற நம்பிக்கையுடன் இந்துமுகியைத் தேடிப் பிடித்து, விவரம் சொன்னால், அவள் தன் செயல்களின் காரணமாக, சுகவனேசனிடம் வேறு சொன்னான்!




“நான் பரிபூரணனைப் பற்றி பயப்படவில்லை!” என்றாள் இந்துமுகி.

“என்ன கதை, இது? அவனிடம் பயம் இல்லை என்றால், அவனைக் கண்டாலே, ஏன் ஓடுகிறாய்? ஓடவில்லை, அது இது என்று, கதை சொல்லாதே! அந்த ஆள் வந்ததிலிருந்து நீ எவ்வளவு மாறியிருக்கிறாய் என்று, நான் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன்!” என்றான் சுகவனேசன்!



சிறு மௌனத்தின் பின், “சொல்லு, பயம்தானே? இவனுக்குப் பயந்துதானே, டெல்லியிலிருந்து கிளம்பி, இங்கே வந்தாய்?” என்று கேட்டான் சுகன்!

“டெல்லியை விட்டு, நாங்கள் கிளம்ப இந்தப் பரிபூரணன் தான் காரணம்! ஆனால், முதலைக்குத் தண்ணீரில் தான் பலம்! அங்குள்ள ரௌடிகளை வைத்துக்கொண்டு, அவன் அங்கே ஆடிய ஆட்டம், இங்கே செல்லாது என்று, எனக்குத் தெரியும்! அங்கே கூடத் தாத்தா, பாட்டியின் மன நிம்மதிக்காகத்தான், அங்கிருந்து கிளம்பச் சம்மதித்தேன். ஆனால், கரையில் இழுத்துப் போட்ட முதலை மாதிரி, இங்கே அவனால் எதுவும் பண்ண முடியாது என்று, எனக்குத் தெரியும்! அதனால், என்னைப் பற்றி, எனக்குப் பெரிய பயம் கிடையாது!” என்றாள் அவள்.

“பின்னே? வேறு யாரைப் பற்றிப் பயம்? அவன் கண்ணில்கூடப் பட்டு விடாமல், ஏன் ஒளிந்து ஓடினாய்?” என்று, விவரம் கேட்டான் சுகவனேசன்.

அவள் பேசாதிருக்கவும், “இப்போது, தாத்தா பாட்டியிடம் போய், டெல்லியில் என்ன நடந்தது என்று கேட்டு, அதற்குமேல் விஷயத்தை ஊகித்து அறிவது, எனக்குப் பெரிய காரியம்அல்ல! ஆனால்... ஏன் இந்து, என்னிடம் கூட, மறைக்க வேண்டுமா?” என்று, ஒரு கனிவும் கண்டிப்புமான குரலில் சுகவனேசன் கேட்டபோது, அதற்குமேல், அவள் மறைக்கவில்லை!

“சுகன்... அந்தப் பரிபூரணனின் தன்மை, இதற்குள் உங்களுக்குப் புரிந்திருக்கும்!”

“நன்றாக! சரியான பொம்பிளைப் பொறுக்கி!”

“அப்படித்தான்! டெல்லியில் என்னைப் பார்த்ததும், இவனுக்கு ஏதோ கிறுக்குப் பிடித்துப் போயிற்று! போகிற இடம் எல்லாம் பின்னாலேயே சுற்றினான். கல்லூரிக்கு வெளியே, காரை வைத்துக்கொண்டு காத்திருப்பான்! நான், அவனுடைய

ஆள் என்கிற மாதிரி ஒரு பிரமையை உண்டு பண்ண முயற்சித்தான். நான் நல்ல வார்த்தையாகச் சொல்லிப் பார்த்தேன்! கேட்கவில்லை! ஒரு நாள் செருப்பைத் தூக்கி, ஒன்று வைத்தே விட்டேன்!"

"இது, இது, இதைத்தான், நான் எதிர்பார்த்தது!" என்றான் சுகவனேசன் பெருமைக் குரலில்!

லேசாக முறுவலித்துவிட்டு, அவள் தொடர்ந்தாள். "ஆனால், விலகிப் போவதற்குப் பதிலாக, அந்தப் பொறுக்கிக்கு, வெறி பிடித்துவிட்டது! ஆள் வைத்து, என்னைத் தூக்கிப் போக முயற்சித்தான்!"

"என்னது?! மிரட்டினால், கைகால் நடுங்குகிறது! இவன், உன்னைத் தூக்கிப் போவதா? ஆச்சரியம்தான்! ஆனால், என்ன திமிர், பார்! அவனைப் பிடித்து, கை, கால் எதையாவது, உடைத்து விடலாமா என்று வருகிறது!" என்றான் அவன், ஆத்திரத்துடன்.

"ஐயோ, வேண்டாம்! இதற்குப் பயந்துதானே.."

"பயந்துதானே?... பயந்துதானே என்ன? என்ன விஷயம்? அவனுக்கு அடி பட்டால், உனக்கு என்ன?" என்று கேட்டான் அவன்.

"அது... அதைப் பிறகு சொல்கிறேன். முதலில், இதை முடித்து விடுகிறேன். பரிபூரணன் இந்த முயற்சி செய்யும் வரை, நான் வீட்டில் எதையும் சொன்னது இல்லை! சும்மாவே, வீட்டிற்கு ஒரே பெண் என்று, என்மீது அதிகப்படி உண்டு! அனாவசியமாகக் கவலைப் படுவார்களே என்று, இது போல எதையும், சாதாரணச் சீண்டலைக் கூட, அப்பா, அம்மாவிடம் நான் தெரிவித்தது இல்லை! அன்றைக்கு... அதுதான், இவன் தூக்கிப் போக முயற்சித்தபோது, என் சிநேகிதிகளும் உதவியதால்தான் தப்பினேன்! ஆனால், அவர்கள் என் பெற்றோரிடம் கூறி விட்டார்கள்! அவ்வளவுதான்! என்னை



மூட்டை கட்டி, தாத்தா பாட்டியுடன் இங்கே அனுப்பி விட்டார்கள்!..."

"அதற்காகத்தான், அவனைச் சும்மா விட்டேன்!" என்றான் சுகவனேசன்.

"எதற்காக?"

"ம்... நானும், அதை அப்புறம் சொல்கிறேன்!" என்றான் அவன் கண்ணில் சிறு சிரிப்புடன். பிறகு, "ஆனால் சொல்லு! அங்கேயும், போலீஸ், காவல் நிலையம் எல்லாம் உண்டு தானே?" என்று டெல்லிக் கதையைத் தொடரும்படி உந்தினான்.

"நிச்சயமாக உண்டு! நாட்டின் தலைநகரம் ஆயிற்றே! இல்லாதிருக்குமா? ஆனால், ஒரு சிறு கஷ்டம்! எல்லாத் துறையையும் போல, இதிலும் சில புல்லுருவிகள் இருந்தார்கள்! அந்தப் பகுதி இன்ஸ்பெக்டரும், இந்த வில்லனும், வில்லனுக்கு உதவி புரியும் லோகல் ரௌடியும், ரொம்ப நெருக்கம்! அப்பாவுக்குப் பெரிய வேலைதான் என்றாலும், அவர் சாது..."

"மகளை மாதிரி இல்லை போல!" என்று, சிறு கேலியாக முணுமுணுத்தான் அவன்.

"என்னது?" என்று, கண்ணை உருட்டினாள் அவள்.

"ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை! மேலே சொல்லு, தாயே!"

"அப்புறம் என்ன? 'முள் வாழையிலை மேலே பட்டாலும், வாழையிலை முள் மேல் பட்டாலும்...' அப்படியென்று ஒரு பழை..ய்ய பழமொழி உண்டே! அதைக் காது புளிக்கும் அளவு சொல்லி, தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா எல்லோருமாக முடிவெடுத்து, நாங்கள் மூவருமாக, இங்கே வந்து சேர்ந்தோம்! அதற்கு மேல் நடந்தது, உங்களுக்குத் தெரியும்! இப்போது சொல்லுங்கள், எதற்காக, இந்தப் பரி...காட்டுக் குதிரையை... குதிரை என்பது கூடத் தப்பு, அந்தக் கழுதையைச் சும்மா விட்டீர்கள்?" என்று கேட்டாள் இந்துமுகி.

"சொல்லுகிறேன். அதற்கு முன்னால், அவனை நான் அடிக்கக் கூடாது என்று ஏன் நினைத்தாய்? அதைச் சொல்லு!" என்று கேட்டான் அவன்.

"அது..." என்று தொடங்கியவள், விழியுயர்த்தி அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, வாயை மூடிக் கொண்டாள்.

மௌனம் தொடரவும், "ஓகே, இந்து! அந்தக் கழுதையை அடிக்காததின் ஒரு முக்கியக் காரணத்தை, நான் முதலில் கூறி விடுகிறேன். அதன் பிறகு பேச, உனக்கு இலகுவாக இருக்கிறதா என்று பார்!" என்று தொடங்கி, சுகவனேசன், தன் காரணத்தைத் தெரிவித்தான்! "பரிபூரணன் கெட்டவன் என்றாலும், அவன் உனக்கே தீமை செய்ய முயன்ற போதும், அவன் கொடுத்த தொல்லையின் காரணமாகத்தானே, நீ, சென்னைக்குத் திரும்பி வந்தாய்! இல்லாவிட்டால், டெல்லியிலேயே இருந்திருப்பாயே! உன்னை இங்கே வரச் செய்த, அந்த ஒரு நல்ல காரியத்தின் நன்றியாகத்தான், அவனை அடித்து நொறுக்க, எனக்கு மனம் வரவில்லை!"

அவளது முகத்தையே பார்த்தபடி, சிறு முறுவலுடன் அவன் விளக்கம் அளித்த விதத்தில், இந்துமுகியின் முகம் எழிலாய்ச் சிவந்து போயிற்று!

ரசனையுடன் பார்த்து, ஒற்றை விரலால், அவளது கன்னத்தை வருடி, அவன் கேட்டான். "இனிச் சொல்லலாம் அல்லவா?"

புன்னகையோடு தலையாட்டியவளின் முகம், மீண்டும் ஒரு தரம் ரோஜாவாயிற்று.

சமாளித்துக்கொண்டு, "நீங்கள், உங்கள் கனவுகளைப் பற்றி, என்னிடம் சொன்னீர்கள் அல்லவா? அந்த வெற்றிகளின் முக்கிய அடிப்படை, ஞானசேகரன் அங்கிளுக்கு நீங்கள் கட்டிக் கொடுக்கப் போகும் ஹோட்டல்கள்தான், என்பீர்களே! லாபமாக வரும் பணம் மட்டுமின்றி, அதனால் உங்களுக்குக்



கிடைக்கப்போகும் நல்ல பெயரும், அதைத் தொடரும் தொழில் வளர்ச்சியும்! பரிபூரணனுடைய தந்தை அவர் என்று தெரிந்த பிறகு, என்னால், உங்கள் தொழில் கெட்டுவிடுமே என்று அஞ்சிவிட்டேன்! எனக்காக, நீங்கள் அவனை உதைக்கப் போய், அதனால், அங்கிள் உங்களுக்கு எதிராக வேலை செய்து.... எப்படியும், தந்தை.. மகன் பக்கம் தானே நிற்பார்! அதனால்தான், தலையையே காட்டாமல், ஒதுங்கி விடலாம் என்று முயற்சித்தேன்!... ஒரு மனைவி, கணவனின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்க வேண்டுமே தவிர, அழிவுக்கு, வழி வகுக்கக் கூடாது என்று எண்ணி..." என்று சொல்லிக் கொண்டே போனவள், சொல்வதை உணர்ந்து, சட்டென நாக்கைக் கடித்துப் பேச்சை நிறுத்தினாள்!

குங்கும நிறமே கொண்டுவிட்ட முகத்துடன் எழுந்து ஓடப் போனவளின் கைகளைப் பற்றித் தடுத்து நிறுத்தினான் சுகவனேசன்.

ஆர்வத்துடன் அவளை நோக்கி, "எதிர்காலத்தில், என் தொழிலின் வளர்ச்சிக்கு எல்லையே கிடையாது என்பது, இப்போது புரிகிறது!" என்றுரைத்து, குனிந்து, அவளது கைகளில் மென்மையாக முத்தமிட்டான்!

பற்றிய கைகளை விடாமல், அருகிலேயே அமரவைத்து, "ஆனால், என்... நம் தொழில் விஷயமாக, நீ கொஞ்சமும் கவலையே படத் தேவையில்லை, கண்மணி! ஞானசேகரன் சாருக்கு, மகனைப் பற்றி, நன்றாகத் தெரிகிறது! மண்டபத்திற்கு நான் போய்ச் சேர்ந்தபோதுகூட, உன்னிடம் ஒழுங்காக நடக்கவிட்டால், நடுத்தெருவில் நிறுத்தி விடப் போவதாகத்தான், அந்த வெள்ளி மூக்குக் குதிரையை மிரட்டிக் கொண்டிருந்தார்! வினுவிடம், அவ்வளவு பாசம் அவருக்கு! இவனால், அவளுக்கு வருத்தம் நேரும் என்றால், வீட்டை விட்டே வெளியே விரட்டி விடுவார். உன் மீது, நம் வீட்டில் எல்லோருக்கும் எவ்வளவு பிரியம் என்பதுதான், அவருக்கு நன்றாகத் தெரியுமே! அதைச் சொல்லித்தான், அவனைத் திட்டினார்! 'நகைக் கடையில்

இருந்து. இதற்காகத்தான் விரட்டியடித்துக் கொண்டு. வந்தாயா' என்று. விளாசிவிட்டார்!'' என்றான் அவன்.

“ஓ.கோ! அப்படியா? நகைக்கடையில் இருந்தவன் எப்படி வந்தான் என்று. இப்போது புரிகிறது! மய்யூ மண்டு. அங்கே போய், நாம் மண்டபத்துக்குப் போவதாகச் சொல்லியிருக்கும்!...''

“இந்த நாய். மோப்பம் பிடித்துக்கொண்டு வந்துவிட்டது! ஞானசேகரன் சாருடைய மகனை, நாய் என்கிறோமே என்று கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கிறது! ஆனால், அவனுக்கு, அதைவிடப் பொருத்தமான பட்டமே கிடையாது! மகன் குணம் புரிந்துதான், சாரும், கூட வந்திருக்கிறார் என்று தோன்றுகிறது! எப்படியோ. நன்றாக மிரட்டி வைத்திருக்கிறார். மிரட்டல் வேலை செய்யும் என்று நம்புவோம்! எதற்கும், எச்சரிக்கையோடு, இப்படி என் பக்கத்திலேயே இருந்துகொள்!'' என்று. அவளை. இன்னும் சற்று அருகிழுத்தான் சுகவனேசன்!

“ஆமாம்ாம்! எச்சரிக்கை தேவைதான்! உங்களிடம்!'' என்று. அவன் பிடியிலிருந்து. லாவகமாக விலகி ஓடினாள் இந்துமுகி!

“நல்லதற்குக் காலமில்லை என்று. சும்மாவா சொன்னார்கள்? ஊம்!'' என்று. நீளமாய்ப் பெருமூச்சு விட்டான் சுகவனேசன்!

கலகலவென்ற சிரிப்பொலி. அவனுக்குப் பதிலாகக் கேட்டு. அவன் முகத்திலும் புன்னகை விரிய வைத்தது!

வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள வேண்டும் என்று இந்துமுகி நினைக்கவில்லை. ஆனால், உள்ளூரப் பொங்கிய நேசம் தானாகத் தன்னைக் காட்டிக் கொண்டது!

அதிலும். உண்மை நேசம் கொண்டிருந்த இருவரும், அதை உடனேயே கண்டு கொண்டனர்! கண்டு கொண்டதோடு. கேலி செய்யவும் தொடங்கினர்.

திருமணத்துக்கு முன்பாகவே, பகல் முழுவதும். விநோதினி இங்கே வருங்காலக் கணவனின் வீட்டில்தான் இருந்தாள்



மகளின் மகிழ்ச்சியையே பெரிதாக எண்ணிய ஞானசேகரனும், அதைத் தடுத்தாரில்லை!

அலுவலகத்தில். வேலைகளைப் பிரித்துக் கொடுத்துவிட்டு சுகவனேசனும் வந்துவிட்டால். நால்வருமாய் ஒரே கும்மாளம் போட்டார்கள்!

அந்தக் கேலி. கிண்டல். விளையாட்டில். சுந்தரவல்லியின் முகம் கடுப்பதை. அந்த நால்வரில் யாருமே கவனிக்கவில்லை!

நாளை மறுநாள் திருமணம் என்கிற நிலையில். மாடியில் தன்-இப்போது அவர்கள் இருவருக்குமாக ஒதுக்கப்பட்டிருக்கும் அறைகளின் அலங்காரத்தைக் காட்டவென்று. மயூரேசன், தன் வருங்கால மனைவி விநோதினியை அழைத்துப் போனான்.

இந்தச் சமயத்தில். ஒட்டிக் கொண்டு கூடப் போவது. இங்கிதம் அல்ல என்று, ஏதோ போன் பண்ண வேண்டும் என்று சொல்லிக்கொண்டு. இந்துமுகி, கீழேயே நின்றுவிட்டாள்.

அலுவல்களை முடித்திருக்கும் விதத்தை எட்டிப் பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லி. மாலை ஒருதரம் வெளியே சென்றிருந்த சுகவனேசனும். இன்னும் வந்து சேரவில்லை! அவனாக இருக்காதா என்று, எங்கேயோ செல்லும் கார்களின் ஓசை ஒவ்வொன்றுக்கும், அவள் வெளியே எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சூழ்நிலை தான் விரும்பிய வண்ணம் அமைந்தது போல, சுந்தரவல்லி. இந்துமுகியிடம் வந்தாள். “உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும். இந்தும்மா!'' என்று தொடங்கினாள்.

முகம் பூவாய் மலர. அன்புக்குரியவனுடைய தாயைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள் இந்துமுகி. “சொல்லுங்கள். அத்...'' என்றுவிட்டு, முகம் சிவக்க, அவசரமாகத் தன்னைத் திருத்திக் கொண்டு. “சொல்லுங்கள், ஆன்ட்டி! முதலில், வசதியாக உட்கார்ந்து கொள்ளுங்கள், ஆன்ட்டி!'' என்று. சோஃபாவில்

கிடந்த குஷனை எடுத்துத் தட்டிச் சரிப்படுத்தி வைத்துவிட்டு, ஆவலோடு பெரியவள் முகத்தைப் பார்த்தாள்.

ஒரு கணம், சுந்தரவல்லியின் முகம் சொல்லொணாத வேதனையைக் காட்டியது!

பதறிப் போய், "என்ன ஆன்ட்டி? என்ன? உடம்பு ஏதும் சரியில்லையா? மய்யூவைக் கூப்பிடட்டுமா?" என்று, மாடிப் பக்கமாகத் திரும்பினாள் இந்துமுகி.

"வேண்டாம்மா!" என்று அவள் கையைப் பற்றித் தன் அருகே உட்கார வைத்தாள் சுந்தரவல்லி!

அவள் பேசச் சங்கடப்படுவதைக் கண்டு, இந்துமுகி தானே, எடுத்துக் கொடுத்தாள். "என்ன விஷயம், ஆன்ட்டி? வீட்டில்... இந்தத் திருமணத்தில் ஏதாவது பிரச்சினையா? எதுவானாலும் என்னிடம் தைரியமாகச் சொல்லுங்கள், ஆன்ட்டி! நானே,... அதாவது, என்னால் ஆனதைச் செய்து சரிப்படுத்துகிறேன்!" என்று தென்பூட்டினாள்.

"நானும், உன்னிடம் தானம்மா, சொல்ல வேண்டும்!..." என்று தொடங்கி, "பாரம்மா! நீ, விரைவிலேயே திருமணம் ஆக வேண்டிய பெண். அதனால், சுகனோடு, இப்படி ஒட்டிப் பழகுவது தப்பு! சற்றுத் தள்ளி நின்று பழகினால், பிற்பாடு உன்னை மணக்கப் போகிறவனோ, அவனை மணக்கிறவளோ, தப்பாக நினைக்க எதுவும் இராது! புரிந்து கொள்ளுவாய் என்று நினைக்கிறேன்!" என்று பெரியவள், பெரியதாக ஒரு குண்டைப் போட்டு உடைத்தாள்!

திகைத்து விழித்த இந்துமுகி, ஒருவாறு தன்னைச் சமாளித்துக்கொண்டு, "ஆன்ட்டி, இப்போது சுகன் என்னிடம் வேறு மாதிரி..." என்று தொடங்கினாள்.

ஆனால், சுந்தரவல்லி ஆத்திரத்துடன் குறுக்கிட்டாள்! "சொன்னால், கேட்க மாட்டாய்? வேலை மெனக்கெட்டு, பெரிய மனுஷி ஒருத்தி சொன்னால், அதை அப்படியே கேட்டு



நடப்போம் என்று ஏற்பதில்லையா? இதோ, தெளிவாகச் சொல்லுகிறேன் கேட்டுக்கொள்! உனக்கும், சுகனுக்கும் ஒரு போதும், திருமணம் நடக்காது! அதனால் சொல்வது புரிந்து,. அவனை நினைப்பதை விட்டுவிட்டு, ஒழுங்காக நடந்துகொள்! அவ்வளவுதான் விஷயம்!" என்று கடுமையான குரலில் கூறிவிட்டு, எழுந்து வீட்டின் உட்பக்கமாகச் சென்று மறைந்தாள்.




இந்துமுகிக்கு, ஏகப்பட்ட அதிர்ச்சிகள்!

முதலாவதாக, சுந்தரவல்லியின் கடுமையான பேச்சு! அந்த மாதிரிக் கடும் குரலில், சுந்தரவல்லி, அவளிடம் பேசியதே இல்லை!

யாரிடமுமே, சுந்தரவல்லி கடுமையாகப் பேசி, இந்துமுகி கேட்டது கிடையாது! அதிலும், அவளிடம் பேசும்போது, குரலே குழையும்!

அப்படிக் கொஞ்சிக் குலவுகிறவள், கடுமையாகப் பேசியதே அதிர்ச்சி என்றால், அந்தக் குரலில் அவள் சொன்ன விஷயம், தாங்க முடியாத பேரதிர்ச்சியாகிப் போயிற்று!

சுகனுக்கும், அவளுக்கும் திருமணம் நடக்காது என்று, திட்டவட்டமாகக் கூறி விட்டாளே!

வாய்க்கு வாய், 'தங்கம், செல்லம்' என்கிறவள்! 'இந்தத் தங்கத்தை அடைய எந்த வீடு கொடுத்து வைத்திருக்கிறதோ' என்று, எத்தனை முறை சொல்லியிருப்பாள்!

அதே வாயால், இப்படி, எப்படிச் சொல்ல முடிந்தது?

A-PDF Merger DEMO : Purchase from www.A-PDF.com to remove the watermark



அத்தோடு, மகனிடம் கலந்து பேசாமல், அப்படி வாக்குக் கொடுக்கவும் மாட்டாள்!

தன்னோடு கலந்து பேசியிருந்தால், சுகன் தங்கள் நேசத்தைத் தாயிடம் எடுத்துச் சொல்லாமல் இருந்திருக்க மாட்டான்!

பின்னே ஏன்?

எதனால், அவளைச் சுந்தரவல்லிக்கு வெறுத்துவிட்டது?

தன்னை அறியாமல், ஏதேனும் தப்பு செய்திருப்போமோ என்று, இந்துமுகி, தன் மூளையைக் கசக்கி, யோசித்துப் பார்த்தாள்!

எதுவும் தெரியவில்லை!

ஒருவேளை, மயூரனிடம் தாராளமாகப் பழகுகிறாள் என்று எண்ணிவிட்டாளோ என்று யோசித்தால், அதுவும் சரியாக வரவில்லை! வினு, சுகனிடம் பேசிப் பழகுவதை விட அதிகமாக, அவள் மயூரேசனிடம் பழகியதே கிடையாது!

இல்லை! அவள் அறிய, அவளை மறுக்க எந்தக் காரணமும் இல்லை!

என்னவோ, அவளது தலைவிதி, சுந்தரவல்லிக்கு அவளைப் பிடிக்காமல் போய் விட்டது! ஆனால்...

எழுந்து உட்கார்ந்து, இனி என்ன நடக்கும் என்று, இந்துமுகி யோசித்துப் பார்த்தாள்.

இப்போதும், தாயின் இந்த வார்த்தைக்காக, சுகவனேசன் தன்னை ஒரேயடியாகக் கைவிட்டுவிட மாட்டான் என்றுதான் இந்துவுக்குத் தோன்றியது!

தங்கள் இருவரின் நேசத்தை எடுத்துச் சொல்லி, தாயை உணரச் செய்து, தங்கள் திருமணத்துக்குச் சம்மதம் வாங்கிவிடுவான் என்றே எண்ணினாள்.



ஆனால், திடுமெனத் தன்னைப் பிடிக்காமல் போய்விட்ட சுந்தரவல்லி, ஒரேயடியாக மறுத்துவிட்டால், அதை அவன் மீறுவானா என்பது, சந்தேகமே!

இந்தத் தாய்க்காகவும், தம்பிக்காகவும்தானே, இவன் இந்த அளவு உழைத்து முன்னேறியதே!

அத்தோடு, அப்படிப் பெற்றவளை மீறி, சுகவனேசன் வருவது என்றால், இந்துமுகிக்குமே, அது பிடிக்கவில்லை! அதுவும், சுந்தரவல்லியை!

அப்படியானால்...

மீண்டும் ஒரு மூச்சு அழுது தீர்த்தாள் அவள்!

சற்று முன் யோசனையோடு, தலைவலி மாத்திரையைப் போட்டுக்கொண்டு தூங்கப் போவதாகவும், யார் வந்து கூப்பிட்டாலும் எழுப்பிவிட வேண்டாம் என்றும், பாட்டியிடம் சொல்லிவிட்டு, அறைக் கதவை உள்ளே தாளிட்டுக் கொண்டு, விளக்கையும் அணைத்துப் படுத்துவிட்டதால், மறுநாள் பொழுது விடியும் வரை, இந்துமுகிக்குத் தனிமை கிடைத்தது!

சுகவனேசன், மயூரேசன், விநோதினி மூவருமே, அவளை வந்து தேடிவிட்டுப் போனார்கள்! சுகன் இருமுறை வந்தான்.

கொஞ்ச நேரம், தாத்தா பாட்டியுடன் உட்கார்ந்து பேசி விட்டு, மறுநாள் மண்டபத்துக்குச் செல்வது பற்றிய ஏற்பாடு களையும் கூறிவிட்டுப் போனான்!

சுந்தரவல்லி, இன்னமும், இவனிடம் ஒன்றுமே சொல்லவில்லையா?

சொல்லியிருந்தால், இவன் குரலில் இந்தத் துள்ளல் இராதே! அவளிடம் மட்டும் சொல்லி, அவளது உற்சாகத்தை, அன்றே அணைக்க வேண்டுமா?

அவளுக்குத் தொந்திரவாக இருக்கக் கூடாது என்று, எல்லோருமே தணிந்த குரலில் பேசினாலும், சூழ இருந்த

அமைதியில், எல்லாவற்றையும் தெளிவாகக் கேட்டுக் கொண்டு, கண்ணீர் பெருக்கியவாறு படுத்திருந்தாள் இந்துமுகி!

மறுநாள் பொழுது விடிந்தது.

அன்று திருமண மண்டபத்துக்குச் செல்ல வேண்டிய நாள்.

மாலையில் வரவேற்பு என்பதால், காலையிலேயே, அங்கே சென்று விடுவதாகத் திட்டமிட்டிருந்தார்கள்.

வேறு வழியின்றி எழுந்து வந்தவளின் முகத்தைப் பார்த்துவிட்டு, வீட்டுப் பெரியவர்கள் இருவரும் அதிர்ந்து போனார்கள்!

"என்னம்மா, காய்ச்சலா? ரொம்பச் சளி பிடித்துக் கொண்டது போல இருக்கிறதே! முதலில் டாக்டரிடம் போகலாம், வா!" என்று பரபரத்தனர்!

மண்டபத்துக்குப் போவதைத் தவிர்க்க, இது ஒரு வாய்ப்பு என்று தோன்றவும், "சரி தாத்தா!" என்று சோர்வுடன் பதிலளித்தாள் பேத்தி!

காய்ச்சல் என்பது, நோய்க்கிருமிகளை எதிர்த்து நம் உடம்பு போராடுவதன் விளைவுதான்., அதனால், 'இம்' மெனுமுன் டாக்டரைத் தேடி ஓடக் கூடாது! தானே சரியாகிறதா என்று, பொறுத்துப் பார்க்க வேண்டும் என்று அடித்துப் பேசுகிற பேத்தி, மருத்துவரைப் பார்க்க, உடனே சம்மதிக்கவும், தாத்தாவும்,. பாட்டியும் கதி கலங்கிப் போனார்கள்!

அதற்குள், இந்துமுகியின் தலைவலி குணமாகிவிட்டதா என்று பார்த்துவிட்டுப் போக, சுகவனேசன் வந்து சேர்ந்தான்.

பெரியவர்களின் பயத்தைக் கேட்டது, சட்டென, அவளது நெற்றியைத் தொட்டுப் பார்த்தான்.

அவனது கையை அப்படியே நெற்றியில் அழுத்திப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றிய பேராவலை அடக்கிக் கொண்டு, இந்துமுகி அசையாமல் அமர்ந்திருக்க,



"என்னம்மா செய்கிறது?" என்று கனிவுடன் கேட்டான் அவன்.

பேசமாட்டாமல் தொண்டையை அடைக்க, அவள் சும்மா இருக்கவும், எழுந்து "வா! உன்னை நானே, எங்கள் டாக்டரிடம் அழைத்துப் போகிறேன்!" என்று கூப்பிட்டான்.

இவனோடு, இவன் வீட்டு டாக்டரிடமா?

அதிர்ந்து போனாள், இந்துமுகி!

அவளுக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லை., அழுததால்தான் இப்படி என்று, அவனுக்குப் பழக்கமான அந்த டாக்டர், சுகவனேசனிடமே சொல்லிவிட்டால்?

"வேண்டாம், வேண்டாம்!" என்றாள் அவசரமாக.

ஏன் என்பது போல, மற்றவர்கள் பார்க்கவும், "நீங்கள் மண்டபத்துக்குப் போங்கள், சுகன்! அங்கே, நீங்கள் போய்ப் பார்க்க வேண்டிய வேலைகள் எத்தனையோ இருக்கும்! நான், வைத்தியரிடம் போவதே, நாளைக்குத் திருமணத்தில், நல்லபடியாகக் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். மற்றபடி, எனக்கு ஒன்றும் இல்லை! தாலி கட்டும் நேரத்தில், தும்மிக் கொண்டும், இருமிக்கொண்டும் இருக்கக் கூடாதே என்று, அதற்காக மட்டும்தான்! அதனால், பக்கத்திலேயே, யாராவது டாக்டரை, நானே பார்த்துக் கொள்வேன். நீங்கள் கிளம்புங்கள்." என்றாள் அழுததால் ஏற்பட்ட 'ஞஙணநமன' குரலைச் சளித் தொல்லையாகக் காட்டி!

நம்பாதபோதுதானே, சந்தேகம் தோன்றும்!

இந்துமுகியின் நடிப்பை உண்மை என்று நம்பி, "இருந்திருந்து, இப்போது போய், இந்துவுக்குச் சளி பிடித்துக் கொண்டதே! நான் என்னவெல்லாம் நினைத்தேன்!" என்று வருத்தப்பட்டுவிட்டு, பொறுப்பு அழைக்க, முதல் ஆளாய், சுகவனேசன் திருமண மண்டபத்திற்குக் கிளம்பிச் சென்றான்.

விநோதினி, தந்தையுடன் செல்வதாக ஏற்பாடு! "இன்றைக்காவது, என் கூட இரும்மா! நாளையிலிருந்து, நீ, அவர்கள் வீட்டுப் பெண்!" என்று, ஞானசேகரன் கேட்டுக் கொண்டாராம்!

"அப்பா அப்படிச் சொன்ன போது, அவரைப் பற்றிய நினைவே இல்லாமல், உங்கள் வீட்டில் கொட்டமடித்தது, நன்றி கெட்டதனமாகத் தோன்றியது, மய்யூ!" என்றாளாம், அவள்.

கிளம்புமுன், இந்துமுகி எப்படியிருக்கிறாள் என்று பார்த்துவருமாறு, சுகவனேசன் கூறியதால், அவளைப் பார்க்க வந்திருந்த மயூரேசன் சொன்னான்.

தானும்கூடத் தாய் தந்தையை நினைத்து எத்தனை நாளாயிற்று என்று இந்துமுகிக்குத் தோன்றியது!

பெண்களே இப்படித்தானா? அதனால்தான், கணவன் வீட்டில், பொருந்திக் கொள்ள முடிகிறதோ?

விநோதினியின் காதல் வெற்றி பெற்றுவிட்டது! தன்னுடையதாகப் பொருத்திக் கொள்ளக் கணவன் வீடும் கிடைத்து விட்டது!

ஆனால், இந்துவுக்கு அந்த அதிருஷ்டம் இல்லையே!

"...என்ன சொல்கிறாய், இந்து?" என்று மயூரன் கேட்ட பிறகுதான், அவன் ஏதோ பேசி, அவளிடம் அபிப்பிராயம் கேட்டிருக்கிறான் என்பது, அவளுக்குப் புரிந்தது!

"எஎன்ன கேட்டாய்?" என்று அவள் தடுமாற, அவன் கேலி செய்யத் தொடங்கிவிட்டான்!

"ஆங்! பேசுவதைக் கூட கவனியாமல், அதற்குள் கனவா? கொஞ்சம் பொறுத்துக் கொள் தாயே! அடுத்த திருமணம் எப்படியும் உன்னதுதான்! அம்மாவிடம் சொல்லி



சீக்கிரமே, தேதி குறிக்கச் சொல்லி விடுகிறேன்!" என்று, அவன் கிண்டல் செய்யவும், அவளால், சில கணங்கள் சமாளிக்கவே முடியவில்லை!

கண்டது கற்பனையோ என்பது போல, மயூரன் திகைத்து நோக்குமுன் முகத்தைச் சரிப்படுத்திக் கொண்டு, "விஷயத்தைச் சொல்லாமல், என்ன கேலி? உனக்குத்தான், கல்யாண அவசரத்தில், கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லக் கூடத் தெரியவில்லை, மயூரன்!" என்றாள் அவள்!

"மண்டபத்துக்கு, எப்போது வருகிறோம் என்று, மயூரன் தம்பி கேட்கிறாரம்மா!" என்றார், திரவியம்.

"கேள்வி நேரம் முடிந்து, முடிவும் எடுத்தாயிற்று! நீங்கள் மூவரும் இப்போதே, என்னுடனேயே கிளம்புங்கள்!" என்று, பிடிவாதமாக அவர்களைத் தன்னுடன் மயூரன் அழைத்துச் சென்றான்.

சற்று நேரம், சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்தான்.

பிறகு, அவர்களுக்கு முன்னதாக அங்கே வந்திருந்த விநோதினியைத் தேடிப்போய் அவளோடு பேசினான்!

அதன்பின், மீண்டும், இந்துமுகியைத் தேடிச் சென்றான்.




மயூரேசன் எதிர்பார்த்தது போலவே, அந்தப் பெரிய திருமண மண்டபத்தில், ஒரு கோடியில் இருந்த அறையில், இந்துமுகி தனியாகத்தான் அமர்ந்திருந்தாள்.

ஒரு தட்டலுடன் கதவைத் தள்ளித் திறந்துகொண்டு உள்ளே வந்தவனைப் பார்த்ததும், இந்துமுகி சற்றுத் தடுமாறி, மெல்ல எழுந்தாள், "என்ன மயூரன்?" என்று மெல்லிய குரலில் வினவினாள்.

"என் பெயர் மயூரேசன்! அது, ஏன் மயூரன் என்று, சுருக்கி அழைக்கிறாய்?" என்று, சிறு கோபத்துடன் கேட்டான் அவன்.

அவனது கோபம், சுருக்கலுக்காக வந்தது இல்லை! 'மய்யூ' ஏன் 'மயூரன்' ஆயிற்று என்று கேட்கிறான்! இதற்கு என்ன பதில் சொல்வது?

அவனுடைய தாயின் விருப்பத்துக்கு ஏற்ப, செயல்படத் தொடங்கி மனதில் தோன்றிவிட்ட வேற்றுமை, தானாக வார்த்தையில் வந்திருக்கிறது!

ஆனால், இவனிடம் அதைச் சொல்ல முடியுமா?

உதட்டால் முறுவலித்து, "திருமணமாகப் போகிறது! பெரிய மனிதன் ஆகப் போகிறவரைப் பழைய மாதிரி, 'மய்யூப்பையா' என முடியுமா?" என்றாள் அவள்.

"அது மட்டுமா, முடியாது! கல்யாண வீட்டுக்கு வந்து, நாலு பேருடன் கலந்து, சிரித்துப் பேசக் கூட முடியாதே!" என்றான் அவன் ஆத்திரத்துடன். "உள்ளதில் மூலை அறையாகப் பார்த்து, தன்னந் தனியாக அடைந்து கிடந்து கொண்டு... இது என்ன பைத்தியக்காரத்தனம், இந்து? ஏன் இப்படி?" என்று வினவினான்.

"ஒஒன்றுமில்லையே, மய்யூ, இது... இந்த ஜலதோஷம், மற்றவர்களுக்குத் தொற்றிக் கொள்ளக் கூடாதே என்று, அதற்காகத்தான் தனியாக வந்தேன்." என்று சமாளிக்க முயன்றாள் அவள்.

ஆனால், "கிருமியால் வந்த நோய் என்றால், தொற்றக் கூடும்! ஆனால், அழுகையால் வரும் சளி, அடுத்தவரை



எப்படித் தொற்றும்?" என்று அவன் கிண்டலும், கூர்மையுமாகக் கேட்டபோது, அவளால் ஒன்றும் சொல்ல முடியவில்லை!

சமாளித்து, "அப்படியெல்லாம்..." என்று ஏதோ சொல்லத் தொடங்கியவளின் பேச்சு, மயூரனின் முகத்தைப் பார்த்ததும் நின்றது!

இன்னமும், இவன் சின்னப்பிள்ளை என்று, யாரால் சொல்ல முடியும்? அவனுடைய அண்ணனின் அச்சாக அல்லவா, தோற்றுகிறான்!

பார்வையை அகற்றித் தரையில் பதித்துக் கொண்டு, பேசாமல் நின்றாள் அவள்.

"என்ன இந்து? என்ன விஷயம்? இன்றுவரை, நான் என்னை, உன்னுடைய சினேகிதனாகத்தான் எண்ணி வந்திருக்கிறேன்! என்னிடம் சொல்லக் கூடாதா? அண்ணனோடு, ஏதும் தகராறா? வினுவும் நானும், இதுபோல எத்தனையோ சண்டை போட்டிருக்கிறோம்! சண்டை போட்டிருக்கும்போது, உலகமே இருட்டி விட்டது போலத் தோன்றும்! அதனாலேயே, சீக்கிரமே சமாதானம் ஆகிவிடும், அந்த சமாதானமும், வெகு ரம்மியமாக இருக்கும்! உனக்காக, நான் வேண்டுமானால், அண்ணனிடம் பேசட்டுமா?" என்று மயூரன் கேட்டதும், இந்துமுகி பதறிவிட்டாள்!

"ஐயோ! வேண்டாம், வேண்டாம், மய்யூ! சுகனுக்கும், இதற்கும் சம்பந்தமே இல்லை!" என்றாள் அவசரமாக!

சட்டென, மயூரேசனின் உடல், ஒரு விறைப்புடன் நிமிர்ந்தது!

"அப்படியானால், அம்மா! அம்மாவேதானா?" என்று, அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்துக் கேட்டான்.

சொல்வது அறியாமல் அவள் தயங்கியபோது, "அம்மாவே தான்! நேற்று, அம்மாவிடம் பேசிவிட்டு, நீ அழுது கொண்டு ஓடுவது போல இருந்தது என்று வினு சொன்ன போது, நான் நம்பவே இல்லை! அதிகப்படியாகக் கதைப்புத்தகம் படித்தும்,

மெகா சீரியல் பார்த்தும், அவளுக்கு மூளை பிரண்டு விட்டது என்று எண்ணினேன்! அம்மாவுக்கும், உனக்கும் உள்ள நெருக்கத்தைப் பற்றி, அவளிடம்,. ஒரு பிரசங்கமே செய்து விட்டேன்! இப்போது பார்த்தால், என் மூளைதான் குழம்பி போய் விடும் போல இருக்கிறது! சொல்லு, இந்து! அம்மாவுக்கும் உனக்கும் என்ன தகராறு? சொல்லு!" என்று விவரம் கேட்டான், அவன்.

"ஒன்றுமே கிடையாது, மய்யூ!" என்றாள் அவள் மெல்லிய குரலில்! "என்னைப் பொறுத்த வரையில், ஆன்ட்டியிடம், என் அன்பு மாறவே இல்லை!"

"ஆனால், அம்மாவின் அன்புதான் மாறிவிட்டது என்கிறாயா? கொஞ்சமும் நம்ப முடியாத விஷயம்!"

"பின்னே எதற்காக, சுகனை மணக்கக் கூடாது என்று, என்னிடம் சொல்லுகிறார்கள்?"

"என்னது?!" என்று அதிர்ந்தான் மயூரேசன்! "ஏனாம்?"

பேச்சு வேகத்தில், உண்மையைச் சொல்லிவிட்டு, இந்துமுகியும் அதிர்ந்து போனாள். கல்யாண வீட்டில், ஒரு கலாட்டா நடக்க, தான் காரணம் ஆகி விடுவோமோ என்று கலங்கி, "விட்டுவிடு, மய்யூ!" என்றாள் அவனிடம், மெதுவாக.

"என்னத்தை விடுவது, நேற்றிலிருந்து, அழுது கரைந்திருக்கிறாய்! அதிருக்கட்டும்! அம்மாவிடம், ஏன் என்று கேட்டாயா?... இல்லையா? ஏன்? அப்படிக் கேட்கத் தோன்றவே இல்லையா? உனக்கு என்ன குறை? எதற்காக மறுக்கிறார்கள் என்று கேட்டுப் போராட வேண்டாமா? உனக்கு அம்மாவைத் தெரியாதா? கூட இரண்டு தரம் கேட்டாலே, அம்மா, தானாகச் சரியென்று விடப் போகிறார்கள்! மற்றபடியும், அவர்களது மறுப்பின் காரணத்தையேனும் தெரிந்து கொள்ளலாமே! அதை விட்டு, இந்த அழுகை அழுவதா? நீ, எவ்வளவோ தைரியசாலி என்று நினைத்தேன்! கடைசியில், இவ்வளவு கோழையாக இருப்பாய் என்று, நான் எண்ணவே இல்லை! சே!



சுத்த மோசம்!" என்று எரிச்சலோடு மொழிந்தவன், சட்டெனத் திரும்பி நடந்தான்!

அவளையே குற்றம் சாட்டிப் பேசினாலும், மயூரேசனின் பேச்சு, ஒரு கண் திறப்பு போல இருந்தது, இந்துமுகிக்கு.

அவன் சொன்னது, சரிதானே?

சுந்தரவல்லியின் குணம், அவன் சொன்னதுபோலவேதான்.

நல்லவள்! வெகுளி! எல்லோரையும் நல்லவராகவே, எண்ணுகிறவள்! தன்னை, ஏமாற்றிக் கையெழுத்து வாங்கிப் பல கோடிச் சொத்தை, தொழிலைக் கபளீகரம் செய்தவர்களைக் கூடத் தவறாகக் கருதாதவள்! அவர்களிடம் இன்னமும்... எப்போதுமே, நல்ல உறவோடு வாழ்கிறவள்!

"மதுப் பையன் குழந்தை, என்னைக் குட்டிப் பாட்டி என்று, கட்டிக் கொள்கிறது" என்று, பெருமையாகவே பேசுகிறவள்!

அப்படிப்பட்டவள், ஒரு தப்பும் செய்யாத தன்னை, வெறுத்து ஒதுக்குவாளா?

இயல்புக்கு மாறாக அவள் நடக்கிறாளே என்று, அவள் ஏன் யோசிக்கவில்லை?

அதை யோசித்திருந்தால், தானாகக் காரணத்தை அறியத் தோன்றியிருக்கும்! பிரச்சினை, அப்போதே முடிந்தும் போயிருக்கும்!

யோசித்திருக்க வேண்டும்! யோசித்து, நிதானமாகப் பேசியிருக்க வேண்டும்!

குறைந்த பட்சம், அவளிடம் என்ன தப்பு கண்டாள் என்று அறிந்து, அதைக் களையவேனும் முயன்றிருக்கலாமே! வெறும் தப்பு அபிப்பிராயம் என்றால், அவளிடம் பேசி, அந்தக் கருத்தை மாற்றியும் இருக்கலாம்!

எதையும் செய்யாமல், முகத்தை மறைத்து ஓடிப்போய், முசுமுசென்று, ஒரு முட்டாளைப் போல, அழுது தீர்த்து விட்டாளே! சே!

சுத்த மோசம் என்று, மய்யூ சொன்னது, நூறு சதவீதம் சரியேதான்!

இன்னும் காலம் கடந்து விடவில்லை!

ஆன்ட்டியிடம், இப்போதுகூடப் பேசி விவரம் அறிந்து கொள்ளலாம்!

அப்படியே எழுந்து செல்லப் போனவள், ஒரு கணம் யோசித்து, குளியல் அறைக்குச் சென்று முகத்தைக் கழுவிக் கொண்டு, சுந்தரவல்லியை நாடிச் சென்றாள்!

மாலையில்தான், மாப்பிள்ளை அழைப்பும் வரவேற்பும்!

நல்ல நேரம் பார்த்துக் காலையிலேயே வந்து விட்ட குடும்பத்தினர், அவரவருக்கு அளிக்கப்பட்டிருந்த அறைகளில் இருந்தனர்.

அந்தப் பகுதியில் அடிக்கடி மின்சாரம் போய்விடும் என்று கேள்விப்பட்டதால், அன்றும் மறுநாளும், அப்படி ஏதும் ஆகிவிடாமல் தடுப்பதற்காக, உரிய அதிகாரிகளைப் பார்த்து, வேண்டிய ஏற்பாடு செய்ய, சுகவனேசன் சென்றிருந்தான்.

முகத்தில் எதையோ பூசிக்கொண்டு, விநோதினி அறைக்குள் இருந்தாள்.

எனவே, வேறு யாரிடமும் நின்று பேசத் தேவையின்றி, இந்துமுகியால், நேராகச் சுந்தரவல்லிக்கு ஒதுக்கப்பட்ட அறைக்குச் செல்ல முடிந்தது.

மடமடவென்று வேகமாக நடந்து, நகைகளை மற்றும் முக்கியமான பொருட்களைக் காவல் காத்தபடி சுந்தரவல்லி தங்கியிருந்த அறையை அடைந்தாள்.

அங்கே, அவள் அனலில் குளித்தாள்!

சுந்தரவல்லியின் அறையை, இந்து நெருங்கியபோது, உள்ளிருந்து பேச்சுக்குரல் கேட்டது. "அப்படி இல்லைம்மா!



அதற்குச் சரியான காரணம் இருக்கிறது!" என்று யாரிடமோ, பெரியவள் சொல்லிக் கொண்டிருந்தாள்.

இன்னொருவரோடு சகஜமாகப் பேசும் மனநிலை இல்லாததால், உரையாடல் முடிந்து, சுந்தரவல்லியோடு பேசிக் கொண்டிருப்பவர் போய்விடட்டும் என்று எண்ணி இந்துமுகி சற்றே ஒதுங்கி நின்றாள்.

"என்ன காரணம்? பொல்லாத காரணம்? அங்கே, இந்து ஆளே கண்ணீரில் கரைந்து விடுவாள்போல, அப்படி அழுகிறாள்! ..." என்று பெற்றவளை அதட்டிக் கொண்டிருந்தது, மயூரேசனின் குரல்!

அவள் விட்டுவிடச் சொன்னதை அலட்சியம் செய்து, சினேகிதிக்காகத் தாயிடம் பேச வந்திருக்கிறான்!

இத்தனைக்கும், அவன் மணமகன்!

இப்படி ஒரு நல்ல நண்பன் அவளுக்கு இருக்கிறானே!

லேசாகக் கண்கலங்க அவள் நின்றபோது, அறையின் உள்ளே, மயூரன் அவளுக்காக வாதாடினான்.

"அம்மா, நீங்களே சொல்லுங்கள்! நமக்குத் தெரிந்து, வினு தவிர, இந்துவுக்கு ஈடு சொல்லும்படி, எந்தப் பெண்ணாவது இருக்கிறாளா?"

"எங்கேடா? என் இரண்டு தங்கங்களுக்கும் ஈடாக, இனிமேல் தான் ஒருத்திப் பிறந்து வரவேண்டும்!" என்று பெருமைக் குரலில் சுந்தரவல்லி கூறியபோது, வெளியே நின்று கேட்டுக் கொண்டிருந்த இந்துமுகிக்குப் பூரிப்பாகவும், அதே சமயம் குழப்பமாகவும் இருந்தது.

இவ்வளவு உயர்வாகப் பேசுகிறவள், அவளை மருமகளாக்கிக் கொள்ள ஏன் மறுக்க வேண்டும்?

வேறு என்ன, என்று யோசிக்கும்போது, வயிற்றுக்குள் ஏதோ பிசைந்தது!

"கரெக்ட்!" என்றான் மயூரேசனும் வெற்றிக் குரலில்! "இப்படிப்பட்ட ஒருத்தி கிடைக்கும் போது, 'கப்'பென்று பிடித்துக் கொள்வதை விட்டுவிட்டு, அவளை வேண்டாம் என்பார்களா? போங்கள், அம்மா! அண்ணனே பயங்கரமான விசுவாமித்திரன்! அவனாக மனம் மாறுகிறான் என்று பார்த்தால்.... நீங்கள் போய் அதைக் கெடுக்கிறீர்களே!" என்று குறைப் பட்டான்!

சிறு மௌனத்தின் பின்னே, சுந்தரவல்லியின் விசும்பல் ஒலி கேட்கவும், உள்ளிருந்த மயூரேசனைப் போலவே, வெளியே நின்று கேட்டுக் கொண்டிருந்த இந்துமுகியும் அதிர்ந்து போனாள்!

பயந்து போய், "என்னம்மா, என்ன? என்ன விஷயம்? எதற்காக அழுகிறீர்கள்? நீங்கள் அழுதது தெரிந்தால், கல்யாண மாப்பிள்ளை என்று கூடப் பாராமல், அண்ணன் என்னைக் கொன்றே விடுவான். முதலில் அழுகையை நிறுத்துங்கள்! இப்போது, என்ன பிரச்சினை? பிரச்சினையைச் சொன்னால், அதைத் தீர்க்க வழி வகையைப் பார்க்கலாம்! அதை விட்டு, நீங்களும் அழுது, மற்றவர்களையும் அழவைத்தால் எப்படி? என்னிடம் சொல்லப் பிடிக்காவிட்டால், விட்டுவிடுங்கள்! நான் போய் அண்ணனை அழைத்து வருகிறேன்! உங்கள் பிரச்சினையை, அவனிடம் சொல்லுங்கள்!" என்று தாயைச் சமாதானப்படுத்தி, அவளது கண்ணீரின் காரணத்தை அறிய முற்பட்டான் மகன்!

இளைய மகனின் கையைப் பிடித்து நிறுத்தி, "அவனிடம் என்னத்தைச் சொல்வது? பிரச்சினையே அவன்தானே?" என்று வருத்தத்துடன் கூறினாள் அந்தத் தாய்!

திகைப்புற்று, "எ... என்னம்மா சொல்லுகிறீர்கள்? அண்ணன்தான் பிரச்சினையா? அண்ணனா, இந்துவை மணக்க மறுக்கிறான்? அதெப்படி முடியும்? அவன், இவளைக் காதலிக்கிறானே!" என்றான் மயூரன்!



"இல்லை! காதலிக்கவில்லை! அந்த மாதிரி, அவன் நடிக்கிறானடா! பாவம்! அந்தப் பச்சைமண், அறியாப் பெண், அவள் மனம் என்ன பாடு படும் என்கிற யோசனையே இல்லாமல், என்ன பாவம் பண்ணிவிட்டான்!" என்று, அழுகுரலில் புலம்பினாள், பெற்றவள்.

"அம்மா... நீங்கள், என்னவோ தப்பாக ஊகித் திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்!... அண்ணன்.... இந்துவை நேசிப்பது போல, அவன் ஏனம்மா நடிக்க வேண்டும்? எதற்கு? இதற்கு... என்னம்மா அவசியம்?" என்று குழப்பத்துடன் வினவினான் மகன்.

"அது... சின்னத்தம்பி, நீ, இதற்காக அண்ணன் மேல் கோபப் பட்டுவிடாதே! என்ன? அவன் நினைப்பெல்லாம், நம் தொழில் நன்றாக நடக்க வேண்டும்... நம் குடும்பம் நன்றாக இருக்க வேண்டும் என்பதுதான்..."

"நீங்கள் விஷயத்தைச் சொல்லுங்கள்!"

"இங்கே இந்து வந்தபோது... நினைவிருக்கிறதா? நீ, பங்களூர் போவதையே இரண்டு வாரம் மறந்து விட்டாய்! நீ, அவள் பக்கம் சாய்ந்து, வினுவை மறந்து விடுவாயோ என்று... அவன் அப்பா கோபப்பட்டால், தொழிலும் போய்விடுமோ என்று... இந்துவை உன்னிடம் இருந்து பிரிப்பதற்காக, அவன், தன்னோடு கூட்டிக் கொண்டு..."

"நம்ப முடியவில்லையே, அம்மா! எப்படிக் கூடவே கூட்டிக் கொண்டு அலைகிறான்!..."

"அதைப் பார்த்துத்தான், நானும் அவனிடம் கேட்டேனடா! இந்த மாதிரி என்று, என்னிடம் அவனே, சொல்லிவிட்டான்! அதனால்தான், என் செல்லத்திடம், நான் அப்படிச் சொன்னேனடா!..."

மேலே, தாய்க்கும் மகனுக்கும் இடையே என்ன பேச்சு வார்த்தை நடந்ததோ, இந்துமுகிக்குத் தெரியாது!

அவளது கால்கள், தன் போக்கில், அவளை, அங்கிருந்து அகற்றி., வெளியே அழைத்துச் சென்றன!

சுகவனேசனை விட்டு, அவன் குடும்பத்தை விட்டு, அவனோடு சம்பந்தப்பட்ட அனைத்தையும் விட்டு விலக்கித் தூர அழைத்துச் சென்றன!

காதுக்குள் 'ஙொய்'யென்றது! கண்கள் பார்க்க மறுத்தன! மனது மட்டும் தவியாய்த் தவித்தது!

சுகவனேசன் அவளை நேசிக்கவில்லை!

நேசிப்பது போல, நடித்தான்!

என்னவெல்லாம் சொன்னான்! எப்படியெப்படிப் பேசினான்! எந்தெந்த மாதிரி நடந்து கொண்டான்!

குனிந்து கைகளைப் பார்த்தாள்!

அவன் முத்தமிட்ட இடம் தீயாய் எரிந்தது!

இந்த அளவுக்கா, நடிப்பு தேவைப்பட்டது? திருமணம் நிச்சயமான ஒருவனை, அவள் வலை போட்டுப் பிடிப்பாள் என்று, அவனால், எப்படி எண்ண முடிந்தது! அவ்வளவு கீழ்த்தரமான பெண்ணா, அவள்? அப்படியா, நினைத்தான்?

அப்படி நினைத்தது மட்டும் அல்ல! தன் சுண்டு விரலை அசைத்துக் காட்டினால், மயூரனை விட்டுத் தன் காலடியில் விழுந்து விடுவாள் என்றும் எண்ணியிருக்கிறான்!

என்ன கேவலம்!

அடுப்பு நெருப்பில் காட்டினால், கைகளின் இந்தக் காந்தல் மறையக் கூடுமோ?

யார் யார் பார்க்கிறார்கள் என்கிற எண்ணமே இல்லாமல், தன் போக்கில் சென்று கொண்டிருந்தவளின் அருகே ஒரு பெரிய கார் வந்து நின்றது!



காரின் கதவு திறக்க, "பிடித்து உள்ளே போடுங்கடா!" என்று ஒரு குரல், வெகு நேரமாகச் செயல் படாதிருந்த செவிப் புலனை, லேசாகத் துளைத்து உள்ளே சென்றது!

அதற்குள், யாரோ அவளைக் காரினுள் இழுக்கக் கார் பறந்தது!

"அடியாட்கள், டெல்லியில் மட்டும்தான் கிடைப்பார்கள் என்று இல்லை, இந்துமுகி! காசை விட்டெறிந்தால், இந்தச் சிங்காரச் சென்னையிலும் கிடைப்பார்கள்!" என்றான் காரினுள் உட்கார்ந்திருந்த பரிபூரணன்!




மூளையைச் செயல் படவிடாமல் மறைத்திருந்த திரை சட்டென விலக, தனக்கு நேர்ந்திருந்த ஆபத்து, இந்துமுகிக்குப் புரிந்தது!

காரை, ஒரு தடியன் ஓட்ட, அவன் அருகில் அமர்ந்திருந்த பரிபூரணன், பின்புறம் திரும்பி ஈயென்று இளித்துக் கொண்டிருந்தான்!

காரின் பின்புறம், அவளை உள்ளே இழுத்துப் போட்டவனோடு, இன்னும் ஒருவன்!

மூவருமே, வஞ்சனையற்று உடலை வளர்த்திருந்தார்கள்!

உழைக்காமல் கொட்டுகிற பணமாயிற்றே! ஊதுவதற்கு என்ன?

இவர்களிடமிருந்து எப்படித் தப்புவது?

டெல்லியில் இது போல நடந்தபோது, உடன் பயின்ற தோழிகள், அருகில் இருந்தார்கள். அவளுக்காகத் துணிச்சலோடு போரிட்டார்கள். பால் பென்னால் குத்தியதிலேயே ஒருவனுக்கு, ரத்தக் காயம் பட்டுவிட்டது! அதற்குள், எல்லோருமாகக் கத்தியதில் கூட்டமும் சேர்ந்து விடவே, அவளை விட்டு விட்டு, ஓடிவிட்டார்கள்!

அதிலிருந்தே, பொதுவாக இந்துமுகி எப்போதுமே, கவனத்துடன்தான் இருப்பது! ஆனால், இன்றைய அதிர்ச்சி, எல்லாவற்றையும் மறக்கடித்துவிட்டது!

அதிர்ச்சியின் நினைவு, இப்போதும் நெஞ்சை அழுத்தத்தான் செய்தது! ஆனால் அதை ஒதுக்கி, யோசித்துச் செயல்பட வேண்டிய கட்டாயமும் இருந்தது!

இப்போது... கத்திப் பயன் இல்லை! ஏசி கார்!

அடி பட்டுச் செத்தாலும் பரவாயில்லை, கார்க் கதவைத் திறந்து கொண்டு குதித்து விடலாம் என்று முயற்சி செய்தாள்.

ஆனால், கதவைக் கொஞ்சம் திறக்குமுன், அருகே இருந்த தடியன், அவளை உள்ளே இழுத்துப் போட்டு விட்டான்!

அலையக் குலைய அவளை முதலில் இழுத்தபோது சரிந்திருந்த துப்பட்டாவின் ஓரம் மட்டுமே, மேலும் சரிந்து, கதவின் இடுக்கில் சிக்கி, வெளியுலகத்தைக் கொஞ்சம் எட்டிப் பார்த்தது!

பின்புறம் திரும்பி, வைத்த கண் வாங்கமால், அவளையே பார்த்துக் கொண்டிருந்த பரிபூரணனுக்கு ஆத்திரம் வந்தது! "ஏய் முட்டாள்! என்ன காரியம் செய்யப் பார்த்தாய்? இந்த வேகத்தில் வண்டி போகும்போது, குதித்தால், துண்டு துண்டாகி விட மாட்டாயா? அப்புறம் உன் எலும்புகளைப்



பொறுக்கிப் போய், நான் எப்படி சுகப்படுவது? அடேய் உன் பெயர் என்ன? டி..டி..டிக்கிதானே? அவள் வாயைப் பொத்தி, தலையைக் கீழே அமுக்கிப் பிடித்துக் கொள்! எந்த வேண்டாத சனியனாவது, அவள் மூஞ்சியைப் பார்த்து வைக்கப் போகிறது! நம் இடம் வரும் வரை, இவள் காரில் இருப்பது, யாருக்கும் தெரியக் கூடாது! அங்கே, இவளுக்கு இரண்டு அறை விட்டு, அரை உயிராக்கி, உள்ளே தூக்கிப் போகும்வரை, இவள் உன் பொறுப்பு! பணம் சுளையாகப் பத்தாயிரம் தந்திருக்கிறேன், நினைவு இருக்கட்டும்! பெண் தானே என்று, அலட்சியமாக இருந்துவிடாதே! இவள் பொல்லாத ராட்சசி!" என்று, தன் அடியாளிடம் எச்சரித்தான் அவன்!

அவன் சொன்னபடி, அந்த டிக்கி செய்ய, அதற்குமேல் இந்துமுகியைப் பார்க்க முடியாது போகவே, நேராக அமர்ந்து, வெளியே வேடிக்கை பார்க்கத் தொடங்கினான்.

திடுமென நிமிர்ந்து, "அவளை நன்றாக அழுத்திப் பிடித்துக்கொள். கொஞ்சம்கூட வெளியே தெரியக்கூடாது!" என்றவன், இடப்புறத்துச் சாலையில், இவர்கள் வந்த திசையில் திரும்புவதற்காக, 'சிக்னலி'ல் காத்திருந்த யாரையோ பார்த்து, பற்கள் அத்தனையையும் காட்டி, ஈயென்று இளித்துக் கையாட்டினான்!

அந்தக் காரைத் தாண்டிச் சென்றதும், பெருமையடித் தான்! "அந்த முட்டாள் பயல், அவளைப் பற்றிக் கேட்டதற்காக, 'கைகால் முழுசாகத் திரும்பிப் போக வேண்டாமா' என்று மிரட்டினான்! இங்கே, உள்ளே பிடித்துப் போட்டிருக்கிறேன்! அது தெரியாமல், பல்லைக் காட்டி இளித்துக் கொண்டு, கைகாட்டுகிறான்! மடையன்! நான், ஒருத்தி மேல், கண் வைத்த பிறகு, சும்மா விட்டுவிடுவேனா? மட்டி, மட்டி!"

சுகவனேசன்!

'ஹோ' வென்று, நெஞ்சை அடைத்துக்கொண்டு வந்தது, இந்துவுக்கு!

சுகனுக்குத் தெரிந்தால்,. காப்பாற்றியிருப்பானே, தெரியாமல் போயிற்றே என்றும் அவள் மனம் தவித்தது! கூடவே, காப்பாற்றுவானோ, என்னவோ? இப்படியே போகட்டும், தொல்லை விட்டது என்று போனாலும் போவான் என்று எண்ணி, மனம் புண்ணாயிற்று!

இதையெல்லாம் நினைத்துப் பயன் இல்லை, முதலில், இவர்களிடம் இருந்து தப்பிக்க முயற்சி செய்ய வேண்டும் என்று பார்த்தால், அந்த டிக்கி அவளைப் பிடித்து அழுத்தியிருந்த விதத்தில், அவளால் அசையவே முடிய வில்லை! மூச்சுகூட, அரை குறையாகத்தான் விட முடிந்ததாலோ, என்னவோ, அவளது உடல் உறுப்புகள் எல்லாமே, சக்தியிழப்பது போலவும் உணர்ந்தாள்!

பரிபூரணன் சொன்னபடி அரை உயிர் ஆவதற்கு, இவன் கையால் அறையே தேவையில்லை போல இருக்கிறதே என்று கலங்கித் திமிற முயன்ற இந்துமுகி, எண்ணியதைச் செயலாக்கும் முன்பாகவே, தன்னுணர்வை இழந்தாள்!

இந்துமுகியின் பிரச்சினை, பிராணவாயுக் குறைவு, வாயைப் பொத்துவதாக எண்ணி, பாதி மூக்கையும் சேர்த்து அழுத்தியிருந்தான், அந்த டிக்கி.

இன்னும் கொஞ்ச நேரம், அதே மாதிரிப் பிடித்துக் கொண்டிருந்தான் என்றால் அவளது உயிருக்கே ஆபத்தாகியிருக்கும்!

ஆனால், அவனது பெரிய உடலை வளைத்து, இந்துமுகியை, சீட்டின் கீழே, அவளது வாயையும் பொத்திய படி, பிடித்துக் கொண்டிருப்பது, டிக்கிக்கும் கடினமாக இருந்தது! எனவே, அவளது திமிறல் நின்று, உடல் தளரவும்,



அவனும் நிமிர்ந்து, வசதியாக உட்கார்ந்து, "சார், சரக்கு, பயத்தில் மயக்கம் போட்டுவிட்ட மாதிரி, இருக்கிறது! தண்ணீர், கிண்ணீர் தெளித்து, மயக்கம் தெளிவிக்க வேண்டாமா?" என்று கேட்டான்.

கடகடவென்று, எக்காளமாகச் சிரித்தான் பரிபூரணன், "வேண்டாம். அப்படியே கிடக்கட்டும்! இல்லாவிட்டால், திரும்பவும், தப்பிக்க ஏதாவது முயற்சி செய்வாள். எல்லாம் அங்கே போய்ப் பார்த்துக் கொள்ளலாம்! இப்போது, இவள் கட்டையாய்க் கிடப்பதில் எனக்கு ஒரு நஷ்டமும் இல்லை!" என்றவன், ஏதோ விட் அடித்தது போல, மீண்டும் உரக்க நகைத்தான்!

இந்துவின் மூக்கில் இருந்த கை விலகவே, அனிச்சை செயலாக, அவளது மூச்சு ஒழுங்காக இயங்கலாயிற்று!

உடம்பில், லேசாகச் சுரணையும் வரலாயிற்று!

இயங்கத் தொடங்கிவிட்ட மூளை, தப்புவதற்குரிய வழிகளைத் தேடித் தேடி, எதையும் காணாமல், அலுத்துச் சோர்ந்தது!

இல்லை! இந்தக் காருக்குள், அவளால் எதையும் சாதிக்க முடியாது! கொஞ்சம் அசைவதற்குள், மீண்டும், அழுத்தி விடுவார்கள்! அதைவிட, அசையாமல் கிடந்து, முடிந்த வரையில் பலத்தைக் கூட்டிக்கொண்டு, காரை விட்டு இறங்குகிற இடத்தில், முயற்சி செய்ய வேண்டும்!

ஆனால் அப்போதும், தன் முயற்சி வெற்றி பெறும் என்ற நம்பிக்கை, இந்துமுகிக்கு வர மறுத்தது! ஏற்கனவே மனதில் ஏற்பட்டிருந்த சோர்வு, அவளது தைரியத்தை, வெகுவாக அழித்து விட்டிருந்தது!

ஆனால், ஒரு விஷயத்தில், அவள் தெளிவாக இருந்தாள்!

அவளது தப்புகிற முயற்சி ஜெயிக்காவிட்டால், எப்படியாவது இவனை, இந்தப் பரிபூரணனைக் கொன்றுவிட

வேண்டும்! ஏதோ ஒரு கருவி... கனமான ஏதாவது ஒரு பொருள் அவளுக்குக் கிடைக்காமலா போகும்? ஒரு நாற்காலி, ஒரு பூஜாடி, ஏதோ ஒன்று இல்லாமல் போகாது! இவனால் இன்னொரு பெண்ணுக்கு, இந்த நிலை ஏற்படக்கூடாது!

கடைசியில், அதுதான் நடக்கப் போகிறது என்றே, இந்துமுகிக்குத் தோன்றியது!

ஏனெனில், அவள் என்ன நிலையில், எங்கே இருக்கிறாள் என்றே, யாருக்கும் தெரியாதே! அந்த மாதிரி மடத்தனமாக அல்லவா, மாட்டிக் கொண்டிருக்கிறாள்! அவளாலும் தப்ப முடியாமல், அடுத்தவர் காப்பாற்ற வருவதற்கும் வழியில்லாமல் அல்லவா மாட்டிக் கொண்டு இருக்கிறாள்!

இந்துமுகி நம்பிக்கையிழந்து நினைத்தது போல, மற்றவர்களுக்கு, அவளைப் பற்றிய விவரம், ஒன்றுமே தெரியாமல் போய்விடவில்லை!

முதலாவதாக, சுகவனேசன்!

மின்சார இலாகா அதிகாரிகளிடம் பேசி முடித்துவிட்டுத் திரும்பி வருகையில், திருப்பத்தில் 'சிக்னலு'க்காகக் காரில் காத்திருக்கையில், பரிபூரணனைப் பார்த்துக் கையாட்டியது, அவன்தான்.

கையாட்டும்போதே, இந்த நேரத்தில், இவன் இந்தப் பக்கமாக எங்கே போகிறான் என்ற யோசனையும் அவன் மனதில் எழுந்துவிட்டது!

கூடவே, கார்க் கதவிலிருந்து வெளியே தொங்கிய துப்பட்டாத் துணி, அதிகப்படியாக, அவன் மனதை உறுத்தியது!

அவனுக்கு அறிமுகமான துணி!

அவனுக்குத் தெரிந்த பெண் அணியப் பார்த்த துப்பட்டா!

விநோதினி அல்லது இந்துமுகி!



இந்துமுகிதான் என்று தோன்றிவிட, சுகவனேசனின் மனம் பதறிப் போயிற்று!

அவளுக்காக, ஏற்கனவே, ஒரு முயற்சி செய்தவன், இந்தப் பரிபூரணன்!

இப்போதும், அதே போல முயற்சி நடந்திருந்தால்?

வேறு பல விஷயங்களும் தெரிந்திருந்ததால், சுகவனேசன் ஒரேயடியாகக் கலங்கிப் போய்விடவில்லை! ஆனால், இந்துமுகி என்ன பாடு பட்டுக் கொண்டிருக்கிறாளோ என்ற கவலை, அவனை வெகுவாக வருத்தியது!

எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக, அவளது துயர் தீர்த்தாக வேண்டும்!

காரை ஒதுக்குப் புறமாக நிறுத்தி, தன் 'செல் போனை'க் கையில் எடுத்தான் சுகவனேசன்!

கடைசியாக, அவன் ஏற்பாடு செய்திருந்த வீட்டினுள் கார் சென்றதும், பெரும் கொக்கரிப்புடன் "அந்தக் குட்டியைக் கொண்டு வந்து, உள்ளே போட்டு, மூஞ்சியில் தண்ணீரை அடித்து எழுப்புங்கள்! நான் எப்படிப்பட்டவன் என்று, இன்றைக்காவது, அவள் தெரிந்து கொள்ளட்டும்!" என்று ஆர்ப்பாட்டம் செய்த பரிபூரணனுக்குத்தான், அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாகிப் போயிற்று!

முதல் அதிர்ச்சி, மயக்கமுற்றுக் கிடப்பதாக எண்ணிய இந்துமுகி, திடுமென மானாகப் பாய்ந்து, வெளியே ஓடியதுதான்!

அலட்சியமாக இருந்த அனைவரும், சமாளித்துக்கொண்டு, அவசரமாக அவள் பின்னே பாய்ந்தனர்.

இந்துமுகிக்கு மெல்லிய மேனி என்றாலும், அவ்வளவு நேரம், இடக்கு முடக்காகக் காரின் இருக்கைக்கு முன், தளத்தில் அசையாமல் கிடக்க வேண்டிய நிலை! மரத்துப்

போயிருந்த கைகால்களைச் சமாளித்துதான், அவள் ஓட வேண்டியிருந்தது!

பரிபூரணனின் அடியாட்களோ, உருவத்தில் உருண்டு திரண்டவர்கள்! கையில் கிடைத்தால், உருத்தெரியாமல் ஆக்கிவிடுவார்கள்! ஆனால், அவர்களது பெரிய தேகத்தைத் தூக்கிக் கொண்டு ஓடுவது, சற்றுக் கடினமே!

ஆயினும் ஆளாளுக்குப் பரிபூரணன் தந்த பத்தாயிரங்கள் உந்த, மூவரும் வேகமாகவே, அவளைத் துரத்திச் சென்றனர்.

அவர்களோடு சேர்ந்து, பரிபூரணனும் ஓடினான். இவ்வளவு தூரம் வந்துவிட்டு, அவளைத் தப்ப விடுவானா?

சுற்று மதில் கேட்டை, இந்துமுகி நெருங்க, அவளை மற்ற அனைவருமே நெருங்கிக் கொண்டு இருக்கையில், திறந்திருந்த அந்த கேட்டின் வழியாக, பரிபூரணனின் இரண்டாவது அதிர்ச்சியாக, சுகவனேசன் உள்ளே வந்தான்.

யாரோ என்று மிரண்டு நோக்கிய இந்துமுகி, சுகவனேசன் எனக் கண்டதும், மற்றதெல்லாம் மறந்து, "சுகன்..." என்று கதறியவாறு ஓடிச் சென்று, அவனை ஒட்டிக் கொண்டாள்!

அதிர்ச்சியைச் சமாளித்துக் கொண்டு, "ஏய் சுகன், அனாவசியமாக, உயிரை விடாதே! என் ஒரு வார்த்தையில், இவர்கள் உன் உயிரை எடுத்து விடுவார்கள்!" என்று பரிபூரணன் சுகனை மிரட்டினான்,

"சாத்தியம்தான்! ஆனால், என் ஒரு வார்த்தையில், இவர்கள் உன் உயிரை எடுத்து விடுவார்களே! அதற்கென்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டபடி, சுகவனேசனின் பக்கத்தில் வந்து நின்ற ஞானசேகரனைப் பார்த்ததும், அவர் மகனுக்கு மயக்கம் போடாத குறைதான்!



வந்தவரும், தனியே வரவில்லை! அவரோடு, ஏழெட்டுப் பேர்!

ஞானசேகரனோடு வந்தவர்களின் எண்ணிக்கையைப் பார்த்ததுமே, பரிபூரணனுடைய ஆட்கள் பக்க வாட்டில் நழுவிச் சென்றுவிட, அவன் தனியே நின்றான்!

"இதுதான் உன் லீலைகளுக்காக, நீ வாடகைக்குப் பிடித்த பங்களாவா?" என்று ஏளனமாகக் கேட்டார் அவர்.

பிறகு, "சரி! உள்ளே போய்ப் பேசுவோம்! இந்தப் பங்களா, உருப்படியாகவும் கொஞ்சம் பயன் படட்டுமே! நீயும் வாம்மா!" என்று அவர் அழைக்க வாசலில் நின்றுகொண்டிருந்த காரில் இருந்து இறங்கி வந்தவளைப் பார்த்த பரிபூரணன், மேலும் திகைத்தான்!

வந்தவள், அவனுடைய மனைவி!




மனைவியிடம், பரிபூரணனுக்குப் பயம் ஏதும் கிடையாது! ஆனால், இந்த நேரத்தில், தந்தை அவளையும் கூட்டி வந்தது, அவனை உறுத்தியது! அவர்தான் அழைத்தார் என்றால், அவன் அனுமதியின்றி, இவள் எப்படி, அவரோடு கூட வரலாம்?

இவளை நோக்கி ஆத்திரத்துடன் உறுத்து விழித்த போது, அவனுக்கு இன்னுமோர் அதிர்ச்சியும் நேர்ந்தது!

பிற்பாடு தனிமையில் அவன் செய்கிற சித்திரவதைகளுக்குப் பயந்து, கணவன் என்ன செய்தாலும், வீட்டிற்கே

எவளையாவது கூட்டி வந்தாலும், ஒரு மரக்கட்டை முகத்துடன் அவள் ஒதுங்கிப் போய்விடுவாள்! அந்த அளவுக்கு, அவளை மிரட்டி வைத்திருந்தான்!

ஆனால், இன்று அவளது மரக்கட்டை முகத்தில் அலட்சியம் தெரிந்தது!

ஒரு கணம் அதிர்ந்தவனுக்கு, உடனேயே ஆத்திரம் பொங்கியது!

கழுதை! இன்று இவளை, உண்டு இல்லை என்று ஆக்கி விட வேண்டும்! அலட்சியமாகவா, என்னைப் பார்க்கிறாய்? இரு, இரு, உன்னை ஒரு கை பார்க்கிறேன்! காலைப் பிடித்துக் கதற வைக்கிறேன்!

"சொன்னது கேட்கவில்லை? சும்மா மசமசவென்று, எருமை மாடு மாதிரி நிற்கிறாயே! போ! போய்க் கதவைத் திற!" என்று உதாசீனக் குரலில் அவனை ஒரு வேலையாளைப் போல, ஞானசேகரன் விரட்டினார்!

எரிச்சல் குமுறிய போதும், தந்தையுடன் கூட இருந்த ஆட்களுக்குப் பயந்து அவர் சொன்னதைச் செய்தான் அவன்!

எல்லோருமாக உள்ளே போய் அமர்ந்ததும், ஞானசேகரன், நேராக விஷயத்துக்கு வந்தார்! அவர் இங்கே வந்த விதத்தை, முதலில் சுருக்கமாகச் சொன்னார்!

எல்லோரையும் போல, நம் பிள்ளை என்ற நம்பிக்கையில் தான், டெல்லி ஹோட்டல்களின் நிர்வாகத்தை, அவர் மகனிடம் ஒப்படைத்து விட்டு, இங்கே வந்தது!

ஆனால், பிறகு பல மாத காலமாகவே, அவருக்கு மகனிடம் அதிருப்தி! அதிலும், சமீபத்தில் டெல்லிக்குச் சென்று வந்த பிறகு, பெருமளவு, அவனிடம் மனம் விட்டே



போயிற்று! அந்த அளவுக்கு, அவன் பெண் பித்தனாகி விட்டிருந்தான்!

இறந்த மனைவிக்கும் உண்மையாகப் பல்லாண்டுகளாக வாழ்ந்து வரும், அவருக்கு, மகனின் இந்தப் பிழை மிகவும் வேதனையைத் தந்தது! கோபத்தையும்! நிச்சயம்! எனவே, மகன் அறியாமல், அவனைப் பின் தொடர, ஒரு துப்பறியும் நிறுவனத்துக்கு ஆளை ஏற்பாடு செய்திருந்தார்!

பரிபூரணன் இப்படி அடியாட்கள் ஏற்பாடு செய்திருக்கிறான் என்று தெரியவும், அதற்கு இரு மடங்கு ஆட்களை நியமித்து, அந்த அடியாட்களையும் வேவு பார்க்கச் சொன்னார்!

எனவே, அவர்கள் இந்துமுகியைக் கைப்பற்றியதுமே, அவருக்கு விவரம் தெரிந்துவிட்டது. கடத்தியவர்களை ஆட்களை பின் தொடரவும் தொடங்கி விட்டார்கள்!

சுகவனேசன் தொடர்பு கொண்டதும், அவனை இந்த இடத்துக்கு அனுப்பியதும், அவர்தான்! அவரது ஏற்பாடு, சுகனுக்கு, ஏற்கனவே தெரியும்! சொல்லப் போனால், துப்பறியும் நிறுவனத்தில் ஏற்பாடு செய்ததே அவன்தான்! அதனால் தான், அவன் உடனே ஞானசேகரனுடன் தொடர்பு கொண்டதே!

விஷயம் அறிந்ததும், மருமகளை மண்டபத்துக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்த அவரும், செல்லுமிடம் மாறி, சுகனோடு கூட வந்து சேர்ந்து கொண்டார்.

வரும் வழியில் மருமகளிடம் பேசியும் முடித்துவிட்டார்! அவளது சம்மதமும், அவருக்குக் கிடைத்துவிட்டது!

இனி, அவரது முடிவை, மகனிடம் சொல்ல வேண்டியதே பாக்கி!

புரியாத மொழி பேசுவதுபோல, இந்துமுகி, கண்கள் விரியக் கேட்டுக் கொண்டிருந்தாள்! இத்தனை நடந்திருக்கிறது! எதுவும் தெரியாமல், எப்படி நடுங்கிப் போனாள்!

நல்லபடியாகத் தப்பிக்க முடியாமல் போனால், பரிபூரணனைக் கொன்றுவிட வேண்டும் என்று எண்ணியது நினைவு வர, அவளது பூமேனி, லேசாக நடுங்கியது!

அப்போது, எவ்வளவு நிராசையுற்றிருந்தாள்! கொலை வரை போவது என்றால் அதன் பிறகு, அவளால் வாழ முடியுமா? உயிர் மீதுள்ள பிடிப்பே, விட்டுப் போயிற்றே!

மார்பில் வந்து விழுந்து ஒண்டிக் கொண்ட பிறகு, சுகவனேசன், அவளைத் தன் கை வளைவிலேயே வைத்திருந்தான். உள்ளே சென்று உட்காரும் போதும், அப்படித்தான்!

இப்போது, அவளது நடுக்கத்தை உணர்ந்தபோது, அவன் பிடி, இன்னமும் இறுகியது! "இனி ஒன்றுமில்லை! பயப்படாதே!" என்றான் அவள் காதருகே மெல்லச் சரிந்து!

ஆறுதலோடு ஒட்டிக்கொண்டபோது, வேறெதோ நினைவு வந்தது!

இல்லை! வேண்டாம்! இப்போது, அந்த நினைவு வேண்டாம். இந்த வினாடியில், இவனது கைபலம் இல்லையானால், அவள் தொய்ந்து விழுந்து விடுவாள்!

நடுக்கம் தோன்றியது! அவளுக்கு மட்டுமன்று!

"அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்காதீர்கள், அப்பா! இனி நான் திருந்தி விடுவேன்!" என்று அவசரமாகப் பேசிய பரிபூரணனின் குரலும் நடுங்கியது!

"இதை நம்புவதற்கும், எங்கேனும் ஓர் இளிச்சவாயன் இருக்கக் கூடும்! ஆனால், நம்பு மகனே, அது நானல்ல!" என்றார், ஞானசேகரன்!

ஏளனமும் கடுமையும் நிறைந்த அந்தக் குரல், இந்துமுகிக்குத் திகைப்பூட்டிற்று!



"சென்ற முறை, நான் டெல்லிக்கு வந்த போதும், நீ இப்படித்தான் கூறினாய் என்று எனக்கு ஞாபகம்! அப்போதும், நான் உன்னை நம்பவில்லை! ஆனால் மருமகள் உனக்காகப் பேசவும், அதை ஏற்றுக் கொண்டு, ஒன்றும் பண்ணாமல் வந்துவிட்டேன்! அப்படி என்னிடம் பேசும்படி, நீ சுரபியைக் கட்டாயப் படுத்தியிருந்தாய் என்று, அப்போது எனக்குத் தெரியாது! அதுவும், என்ன மாதிரி அவளைக் கட்டாயப் படுத்தினாய் என்று, இன்று அறிந்து கொண்ட பிறகு, உனக்கு மன்னிப்பும் கிடையாது!" என்றபோதுதான், அவளுக்கு ஓரளவு விவரம் புரிந்தது!

பரிபூரணன் தவிர, அங்கிருந்த மற்றவர்கள் முகத்தில், எந்த வித வியப்பும் இல்லை! அப்படியானால்?

யோசனையோடு, சுகவனேசனைப் பார்த்தாள் அவள்.

அவளது பார்வையைக் கவனித்துவிட்டு, "ஆமாம், இந்து! அந்தப் பெண் ரொம்பப் பாவம்! ஆனால், இனிச் சரியாகிவிடும்! ஓரளவுக்கேனும்! அவள், அதையே மிகப் பெரிதாக எண்ணுகிறாள்! எல்லாம், ஞானசேகரன் சார் சொல்லுவார், கவனி!" என்று அவன் சன்னக் குரலில் கூறினான்.

இவனுக்கு எல்லாம் தெரிகிறதே, அப்படியானால், ஞானசேகரன், இவனிடம் குடும்ப விஷயம் எல்லாமே சொல்லியிருக்கிறாரா என்று உள்ளூர வியந்தாள் இந்து!

வருங்கால மருமகனுடைய அண்ணனிடம் வெளிப்படையாகப் பேசக் கூடிய விஷயம் அல்லவே, இது! அப்படியிருந்தும், மான அவமானம் பாராமல், அவளிடம் மனம் விட்டுப் பேசினார் என்றால், சுகனை அவர் எந்த அளவுக்கு உயர்வாக மதிக்க வேண்டும்?!

ஆனால், அவளுக்கு மட்டும் அநியாயம் செய்து விட்டானே! அப்படி அநியாயம் செய்தவனிடம் ஒண்டிக் கொண்டு உட்கார்ந்து இருக்கிறோமே என்று எண்ணுகையில்

அவளுக்கு, அவமானமாகத்தான் இருந்தது! ஆனால், விலகிக் கொள்ளவும் பிடிக்கவில்லை!

ஒரு காரணம், அவளுக்குச் சாய்ந்துகொள்ள ஓர் ஆதாரம் இன்னும் கொஞ்ச நேரம், தேவைப்பட்டது!

அத்தோடு, தொட்டால் சுருங்கியாக ஒதுங்கிக் கொண்டாலும், அவன் கேட்டால், இந்த இடத்தில் வைத்து அவளால் காரணத்தைச் சொல்ல முடியாது!

அவள் யோசித்துக் கொண்டு இருந்த போதே ஞானசேகரன் மீண்டும் பேசினார்!

"உன்னுடைய இவ்வளவு அயோக்கியத்தனத்துக்கும் மிகப் பெரிய அடிப்படை, கணக்கு வழக்கற்று, உன் கையில் புழங்கிய பணம்! டெல்லி ஹோட்டல்களின் வருமானம்! அதை, உன் கையில் இருந்து பிடுங்கப் போகிறேன்!"

"அவைகளை, எனக்கு எழுதிக் கொடுத்து இருக்கிறீர்கள்!"

"தப்பு மகனே, தப்பு! உன் பேரில், 'பவர் ஆஃப் அட்டர்னி' தான் எழுதிக் கொடுத்திருந்தேன்! எழுதிய என்னால், அதை ரத்து செய்யவும் முடியும், தெரியுமோ! ரத்து செய்து விட்டேன். ரத்து செய்து, என் மருமகள் பெயருக்கு எழுதிவிட்டேன்!"

"இவள் பெயருக்கா? என்னப்பா, ஜோக்கடிக்கிறீர்களா? ஹோட்டல் நிர்வாகம் பற்றி அதுவும், ஐந்து நட்சத்திர ஹோட்டலை நிர்வகிக்க, இந்தப் பட்டிக்காட்டுக்கு எப்படி முடியும்? அதற்கு, அவளுக்கு, முழுக்க முழுக்க என் உதவிதான் தேவைப்படும்!" என்றான் பரிபூரணன் இறுமாப்புடன்!

"அப்படி வேறு கனவு காணாதே!" என்று எச்சரித்தார் பெரியவர்! "தொழில் நிர்வாகம் பற்றி, சுரபிக்கு, இப்போது ஒன்றும் தெரியாதுதான்! ஆனால், ஆறுமாதமோ, ஒரு



வருடமோ, நானே கூட இருந்து கற்றுக் கொடுத்தால், நிதானமாகப் படித்துக் கொள்வாள்! ஹோட்டல் உரிமையைக் கூட, எனக்குப் பிறகு, சுரபிக்கும், அவள் வயிற்றில் வளரும் குழந்தைக்கும் என்று, எழுதி வைத்துவிட்டேன்! உடனே, 'அவளுக்கு அப்புறம்...' என்று திட்டம் போடத் தொடங்கி விடாதே! அதை எதிர்பார்த்தே, இவர்கள் இருவருக்குமே, சொத்தை விற்க, விலை செய்ய உரிமை கிடையாது என்று எழுதி வைத்திருக்கிறேன்! உன்னை உள்ளே விட்டாலும், நிர்வாகம் 'டிரஸ்ட்'டுக்குப் போய்விடும்! சொத்தின் மீது முழு உரிமை, என் கொள்ளுப் பேரக்குழந்தைகளுக்குத் தான் உண்டு! உன் புத்தி தெரிந்து, இன்னொன்றும் எழுதி வைத்து விட்டேன்! இடையில் எனக்கு ஏதேனும் நேர்ந்தால், ஆலோசகராக, சுகன் தம்பிதான் இருப்பார்! சுரபிக்கும், குழந்தைக்கும் தப்பு நடந்தால், டெல்லி ஹோட்டல்கள், அப்படியே, உன் தங்கை வீட்டுச் சொத்தாகி விடும்! விஷயம், நன்றாகப் புரிகிறது அல்லவா? இனி, அசட்டுத்தனமாக எந்த முயற்சியும் செய்ய மாட்டாய் என்று நம்புகிறேன்!..."

பரிபூரணன் ஓய்ந்து போய் நிற்க, அவர் மேலும் தொடர்ந்தார்! "இனி உன் விஷயம்! இனி, உன்னோடு வாழ, சுரபிக்கு விருப்பம் இல்லை! பல்லைப் பிடுங்கி விட்ட பாம்பு என்றாலும், பாம்பு, பாம்புதானே? உன்னை விவாகரத்து செய்வதோ, அப்புறம் மறுமணம் செய்து கொள்வதோ, அவள் விருப்பம் என்று விட்டுவிட்டேன், அவன் விவாகரத்து கேட்டால், எதிர்க்காமல், ஒத்துக் கொண்டு விடு! ஏனெனில், அவளுக்காக சாட்சி சொல்ல, நாங்கள் நிறையப் பேர் இருக்கிறோம்!

"அடுத்து, முழுமையாக உன் விஷயம்! உன் வயிற்றுப்பாடு! எப்படியும், உன் அம்மா வயிற்றில், பத்துமாதம் இருந்திருக்கிறாய்! அதனால், உன் சாப்பாட்டுக்கு, மாதாமாதம் பணம் கிடைக்குமாறு, ஏற்பாடு செய்கிறேன். நினைவு வைத்துக்கொள்! சாதாரணச் சாப்பாட்டுக்கு மட்டும்தான்! உன் புத்தியைச் சீர்ப்படுத்த, கௌன்சிலிங் மாதிரி ஏதாவது செய்ய

மனம் இருந்தால் சொல்லு! ஏற்பாடு செய்கிறேன்! ஆனால், நீ உண்மையாகவே திருந்தி வந்தாலும், பணம் மட்டும் இனி ஒரு நாளும், உன் கைக்கு வராது!.... சரி, சுகன்! இனிக் கிளம்புவோமா? அங்கே, மண்டபத்தில் மதிய உணவுக்காக, நம்மைத் தேடத் தொடங்கிவிடக் கூடாது!" என்று எழுந்தார் ஞானசேகரன்!

இவர், ஞானசேகரனேதான்! எவ்வளவு தீவிரமாகச் சிந்தித்து முடிவெடுத்து இருக்கிறார் என்று எண்ணினாள் இந்துமுகி!

"அப்பா...!" என்று, தழுதழுத்த குரலில் அழைத்தபடி, பரிபூரணன் தந்தையின் காலில் விழப் போனான்!

"நில்லு, நில்லு!" என்று கையை உயர்த்தி, அவனைத் தடுத்தார் ஞானசேகரன். "இந்த நாடகம் எல்லாம், நீ முன்பே டெல்லியில் போட்டு முடித்தாயிற்றே, நினைவில்லை? அப்போதும்கூட, நான் உன் நடிப்பை முழுவதாக நம்பி விடவில்லை! சுரபி கேட்டதால்தான், சும்மா விட்டேன்! இப்போது, அவளும் கேட்பதாக இல்லை!" என்றார், அலட்சியமாக.

மனைவியின் முகத்தைப் பார்த்தவன், அவளிடம் எதையும் கேளாமலே, தலைகுனிந்து நின்றான்! நம்பி வந்தவளை, நாயிலும் கேடாக நடத்திய பாவம், எப்படித் திருப்பி அடிக்கிறது!

சுரபியிடம் அவன் எதைக் கேட்டும், எந்தப் பயனும் இராது என்பதை, எல்லோராலுமே புரிந்து கொள்ள முடிந்தது!

"எல்லோரையும் போலத் திருமணத்தில் கலந்து கொள்வதானால், வந்து விட்டுப் போ! ஆனால், அங்கே வந்து, வினுவைப் பிடிக்கலாம் என்று எண்ணாதே! எங்களுக்கு முன்பாகவே உன்னை அறிந்தவள் அவள். உன்னால்



அவளுடைய சினேகிதிகளுக்குக் கெடுதல் ஏதும் நேர்ந்து விடக் கூடாது என்றுதானே, பங்களூருக்குப் படிக்கப் போனாளாம்! நான் வருத்தப் படுவேனோ என்று, சொல்லாமலே இருந்திருக்கிறாள், பாவம்!" என்று அவர் சொன்னபோது, இந்துமுகிக்கு ஆச்சரியமாக இருந்தது!

வினுவுக்கு, அண்ணனிடம் ஒட்டுதல் இல்லை என்று எண்ணினாளே தவிர, அவள் இவ்வளவு கெட்டிக்காரி என்று, அவள் எண்ணியதே இல்லை! அவளை மயூரன் தலைமேல் தூக்கி வைத்துப் பேசுவது, நியாயமே!

சொல்லப் போனால், இந்து அழுதுகொண்டு ஓடியதைக் கண்டு பிடித்தவளும் வினுதானே!

ஆனால், அந்த ஞாபகம், அதன் தொடர்ச்சியை நினைவு படுத்த, திரும்பி வரும்போது, "சுரபி அக்காவோடு வரட்டுமா?" என்று அவள் கேட்டபோது, ஞானசேகரன் மறுத்துவிட்டார்!

"வேண்டாம்மா! ஜோடிப் புறாக்களைப் பிரிக்கும் பாவம், எனக்கு வேண்டாம்!" என்று, அவர்கள் இருவரையும், சுகவனேசனின் காரில் சேர்ந்து வரச் சொன்னார்!

'பெரிய ஜோடிப் புறாக்கள்' என்று இந்துமுகி உள்ளே குமுறினாள்.




இதுவரை, தனக்கு நேர்ந்த ஆபத்தும், காப்பாற்றப்பட்ட விதமும், அதன் பிறகு, சுரபியின் எதிர்காலமுமாக, இந்துமுகிக்குத் தன் நிலைமை ஓரளவு மறந்திருந்தது!

கொஞ்சம் நினைவு வந்த போதும், அதை ஒதுக்கி வைக்க முடிந்தது!

ஆனால், இப்போது மற்ற விஷயங்கள் ஒரு விதமாக முடிவுக்கு வரவும், தன் துன்பம் பெரிதாகி, மனம் குமுறுத் தொடங்கியது.

ஆனால், பரிபூரணனை அடக்கி, சுரபியின் பிரச்சினையை சுகவனேசன் தீர்த்து வைத்த விதத்தினால், நேரடியாக, அவனிடம் முகத்தைத் திருப்ப முடியவில்லை!

அதுவும் , மற்றவர்கள் அவனைப் புகழ்ந்து கொண்டு இருக்கையில், அவள் மட்டும் மாற்றிப் பேச முடியுமா?

எனவே, ஞானசேகரன் கேலியாகப் பேசியபோதும், அவளால், மறுத்து ஒன்றும் சொல்ல முடியவில்லை! எனவே, உள்ளூரப் பொறுமினாள்!

ஆனால், அவரது கேலியைச் சந்தோஷமாக ஏற்று, "ரொம்பவும் நன்றி, அங்கிள்!" என்று, பெரிதாக அவருக்கு நன்றி தெரிவித்தான், சுகவனேசன்.

அவனுக்காக, அவர் ஏதோ பெரிய உதவி செய்துவிட்ட மாதிரி நடிப்பு, வேறு!

வாய் விட்டுச் சொல்வதும், வெளிப்படையாகக் காட்டுவதும்தானே, எல்லோருக்கும் புரிகிறது! சுகவனேசனின் நடிப்பில், மற்ற இருவரும் நகைத்தனர்!

அவ்வளவு நேரம், மிகவும் சீரியசாக இருந்த சூழ்நிலை இலகுவாக மாறிவிட, எல்லோரும் சிரித்துக்கொண்டே, அவரவர் காரில் ஏற, வெளியே சென்றனர்!

பரிபூரணனை கண்டு கொள்வாரே, அங்கே யாரும் இல்லை!

வெளியே சென்றதும், துப்பறியும் நிறுவனத்தாரிடம், செய்ய வேண்டியது பற்றிச் சொல்லி அனுப்பிவிட்டு, ஞானசேகரன், சுகவனேசனிடம் திரும்பினார்.



அவனது கைகளை இறுகப் பற்றி, 'சுகன் தம்பி, நான் உங்களுக்குத்தான் மிகவும் கடமைப்பட்டவன்! அவனுக்கு மணம் செய்து வைத்து, அநியாயமாகச் சுரபியின் வாழ்க்கையை வீணாக்கி விட்டோமே என்று, தவித்துக் கொண்டு இருந்தேன்! அவனை எப்படி அடக்குவது என்றும் புரியாத திகைப்பு! உங்களிடம் என் பிரச்சினையை நான் மனம் விட்டுச் சொன்ன நாள், ஒரு நல்ல நாள்! இப்படி ஒரு வழியைக் காட்டிக் கொடுத்தீர்கள்! இதற்கு நான் எத்தனை முறை, நன்றி சொன்னாலும் போதாது!" என்று உணர்ச்சியோடு பேசினார்!

"ஆமாம், அண்ணா! இனி என் வாழ்வுக்கும் ஓர் அர்த்தம் இருக்கும்! ஒரு புழுவைப் போல வாழ்கிறோமே என்று குன்றிப் போயிருந்தேன்! இனி, நிமிர்ந்து வாழ்வேன்! என் நன்றியையும் ஏற்றுக் கொள்ளுங்கள்!" என்றாள் சுரபி.

"நாம் எல்லோரும், உறவினர்கள்! நமக்குள் என்ன நன்றியெல்லாம்? எனக்கு ஒரு தேவை என்றால், நீங்கள் செய்ய மாட்டீர்களா? எனக்கு மெய்யாகவே நன்றி செலுத்துவது என்றால், இந்தப் பேச்சு, இனிப் பேசக் கூடாது!" என்றான் சுகவனேசன், ஒரு பொய்யான கண்டிப்புடன்!

ஞானசேகரன் தலையாட்ட, "ஓகே, அண்ணா! ஆனால் ஒரே ஒரு சின்ன வேண்டுகோள்! நீங்கள் டெல்லிக்கு வந்தால், எங்கள் ஹோட்டலில் தான் தங்க வேண்டும்! எங்கள் ஹோட்டலில், தேனிலவு அறைகூட இருக்கிறது! உங்களுக்குத் தனிச் சலுகையாகப் பாதி வாடகை தந்தால் போதும்!" என்று புன்னகை செய்தாள் சுரபி!

உயிரற்ற கண்களுடன் உலவி வந்த, அந்தப் பெண்ணின் கண்களில், குறும்புடன் கூடிய சிரிப்பைப் பார்த்து, இந்துமுகிக்கும் சந்தோஷமாக இருந்தது.

"பாதி வாடகையா? ஆனால், அதுவே ஆயிரக்கணக்கில் வருமே! சார், உங்கள் மருமகளுக்கு, நீங்கள் எதையும் கற்றுக்

கொடுக்கவே, தேவை இல்லை! ஹோட்டல் தொழிலில், அவர் 'மீன் குஞ்சு!'" என்று சுகவனேசன் வர்ணிக்க, எல்லோரும் சிரித்தனர்.

" 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும், கவிபாடும்' என்பது, நிஜம்தான் போல! மாமனாருக்கு, ஏற்ற மருமகள்!" என்று இந்துமுகி இடைச் செருகவும், எல்லோரும் மீண்டும் நகைத்தனர்.

கலகலப்பான அந்த சூழ்நிலையில், "தள்ளிப் போடாமல், நீங்களும் அறிவித்துவிட வேண்டியதுதானே சுகன்? இரண்டு பிள்ளைகளுக்கும் மணமாகிறது என்று, உங்கள் அம்மாவுக்கும் மகிழ்ச்சியாக இருக்கும்!" என்றார் ஞான சேகரன்.

இந்துமுகியைப் பார்த்து முறுவலித்துவிட்டு, "செய்ய வேண்டியதுதான், அங்கிள்! நான் ரெடி! பெண்ணும் தயார் என்றுதான் எண்ணுகிறேன்!" என்று, சிரித்தவாறே அவருக்குப் பதில் சொன்னான், சுகவனேசன்!

இவ்வளவு வெளிப்படையாகத் தம்பிக்குப் பெண் கொடுக்கிற பெரிய மனிதரிடமே சொல்லுகிறானே! இதுதானே மெய்யாயிருக்க வேண்டும்? சுந்தரவல்லி ஆன்ட்டி, எங்கோ தப்பு செய்திருக்கிறார்கள்! அவர்கள் மயூரேசனிடம் கூறிய மாதிரி, சுகன் சொல்லியிருக்கவே மாட்டான்!

இந்துமுகி நிம்மதி அடையத் தொடங்கினாள்.

ஆனால், "இப்போதைய கதா நாயகனும், நாயகியும், உங்கள் மருமகனும், மகளும் தான், சார்! நாளைய மதியம் திருமணம் முடியும் வரை, முதல் முக்கியத்துவமும், அவர்கள் திருமணத்துக்குத்தான்! அது நல்லபடியாக நடந்துவிட்டால், அதுவரை, என் கதை பற்றிய பேச்சே வேண்டாம்! அப்புறமாகப்



பார்த்துக் கொள்ளலாம்! அங்கே அம்மா தேடுமுன், இப்போது சீக்கிரமாகக் கிளம்புவோம்!" என்று அவன் தொடர்ந்து கூறவும், சட்டென அவள் உள்ளம் கொதித்தது!

அப்படியானால், விநோதினியின் கழுத்தில் தாலி ஏறும்வரை, இந்த இந்துமுகி, அதைக் கெடுத்து விடுவாளோ என்ற பயம்தான், இவனுக்கு! இன்னமும், அவளிடம் நம்பிக்கை வரவே இல்லை! இந்தத் திருமணம் நடந்து முடியும்வரை, இந்துமுகியை ஈரெட்டிலேயே வைத்திருந்துவிட்டு, அப்புறமாகக் கை கழுவப் போகிறான்!

ஆக, சுந்தரவல்லி எதையும் தவறாகப் புரிந்து பேச வில்லை! நிஜத்தை - மகன் அவளிடம் சொன்னதை, அப்படியே திருப்பிச் சொல்லியிருக்கிறாள்! அப்படியெல்லாம் சொல்லிவிட்டு...

மனதை அடக்கிக் கொண்டு, சுகவனேசனின் குவாலிஸ் காரை நோக்கி நடந்தாள் அவள்.

அவனிடம் சொல்லி விட வேண்டும்! உன் நாடகம் எனக்குத் தெரியும் என்று சொல்லியே ஆக வேண்டும்! இந்த நடிப்புக்குக் கொஞ்சமும் அவசியம் இல்லை என்றும் தெரிவித்து விட வேண்டும்! அப்புறம், எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக, இந்தச் சென்னையை விட்டுப் போய்விடவும் வேண்டும்!

இனிமேல்தான், பரிபூரணனால் பிரச்சினை இருக்க வழியில்லையே! தைரியமாக, டெல்லிக்கே போய்விடலாம்!

ஆனால், இந்த மாதிரி நம்ப வைத்துக் கழுத்தறுக்கும் இவன் போன்றவர்களைவிட, வெளிப்படை வில்லனான பரிபூரணனே மேல்!

மனம் உலைக்களம் போலக் கொதித்துக் கொண்டிருக்க, அதை மறைத்து நாடகமாடும் சக்தியற்று, நேர்ப் பார்வையாக,

வெளியே பார்த்தபடி, இந்துமுகி அசையாமல் உட்கார்ந்திருந் தாள்!

"என்னம்மா, ரொம்பவும் பயந்துவிட்டாயா? ஒன்றும் இல்லை, விடு!" என்று, அவளது கையைப் பற்றி, லேசாக அழுத்தினான் சுகவனேசன்!

என்ன வேஷம்?!

வெடுக்கென்று கையை உதறிக்கொண்டு அவனை முறைத்துப் பார்த்தாள், அவள்!

திகைப்புடன் நோக்கிய அவனது கரங்களில், கார் சற்றுத் தடுமாறி, மீண்டும் நேரானது!

காரை இடப்புறமாக ஒதுக்கிச் சென்று, ஒரு மரத்தின் நிழலில் நிறுத்திவிட்டு, சுகவனேசன், திரும்பி, இந்துமுகியை நன்றாகப் பார்த்தான்!

பிறகு, "என்ன விஷயம், இந்து?" என்று நிதானமாக வினவினான்.

அவளும், சொல்லிவிட வேண்டும் என்றுதானே, இருந்தாள்!

எனவே, அவனை வெட்டுவது போலப் பார்த்து, "இன்னும் நீங்கள் நடிக்கத் தேவையில்லை!" என்றாள் அழுத்தமான குரலில், அவளும் நிதானமாகவே!

"நடிப்பா? என்ன நடிப்பு?" என்று, புருவம் சுருக்கி அவன் விசாரிக்கவும், அவளுக்குக் கோபம் அதிகரித்தது.

வேதனையும்!

இவனது நடிப்பை உண்மையென்று நம்பி, முட்டாள்தனமாக மனதைப் பறிகொடுத்து விட்டவள் ஆயிற்றே!

இன்னும், இந்த அவமானத்தை, அவள் வாயாலேயே, சொல்ல வேற வேண்டுமா?



"என்ன என்று, உங்களுக்கு நன்றாகவே தெரியும்! அனாவசியமாக, என்னை இன்னமும் சீண்டாதீர்கள்!" என்றாள் அவள் குரல் நடுங்க!

அவனும், "என்ன உள..." என்று, சற்றுக் கோபமாகவே தொடங்கிவிட்டு, அவளது முகத்தைக் கவனித்துக் குரலைத் தணித்தான்! "இந்து, எதற்காகவோ, என் மீது நீ கோபமுற்று இருப்பது எனக்குப் புரிகிறது! அத்தோடு, வருத்தப்படுவதும்! ஆனால், காரணம் தெரியாமல், நான் அதை எப்படிச் சீர்ப்படுத்துவது? சொல்லு!... இந்து, நாம் இருவரும் மிகவும் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டிய நேரத்தில், ஏனம்மா, இப்படி?"

ஒரு கணம், இந்துமுகி தடுமாறினாள்.

இந்தக் கோபம், இந்தக் கனிவு! இது எப்படிப் பொய்யாக இருக்க முடியும் என்று யோசித்தவளுக்கு, உடனேயே, அந்தத் தடுமாற்றத்துக்காகத் தன் மீதே கோபம் வந்தது!

ஏமாறுகிறவர்கள் ஏமாந்தால், ஏமாற்றுகிறவர்கள், ஏமாற்றிக்கொண்டேதான் இருப்பார்கள்!

சட்டென நிமிர்ந்து, "நாம் இருவரும் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டுமா? எதற்காக?" என்று மிடுக்காகக் கேட்டாள்.

"அடடா! இவ்வளவு மக்காக இருக்கிறாயே! பிற்காலத்தில், ரொம்பவும் சிரமப்பட நேரும் போல இருக்கிறதே! சரி! அதை, அப்போது பார்ப்போம்! இப்போது கொஞ்சம் கவனத்துடன் கேட்டுத் தெரிந்துகொள், மகாராணி! நாம் இருவரும், சீக்கிரமே திருமணம் செய்து..."

"போதும், போதும்! இந்தப் பொய்யை உடனே நிறுத்துங்கள்!" என்று கத்தி விட்டாள் இந்து!

"பொய்யா? என்ன உளறல், இது?"

"பொய்யே தான். இல்லை என்று சொல்லாதீர்கள்! எனக்கு, எல்லாம் தெரியும்!" என்றாள் அவள் ஆத்திரத்தோடு!

"என்ன தெரியும் என்றுதான் நானும், அப்போதிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறேன்! சும்மா, தெரியும், தெரியும் என்று சொல்கிறாயே தவிர, என்ன தெரியும் என்று, சொல்லக் காணோமே!" என்று, அவனும் சற்றுக் கோபமாகவே கேட்டான்!

"அதை, என் வாயாலேயே சொல்ல வைக்கும் குரூரமா? சரி, கேட்டுக் கொள்ளுங்கள்! நீங்கள் என்னை நேசிக்கவில்லை, நேசிப்பது போல நடித்து, என்னை ஏமாற்றுகிறீர்கள் என்று, எனக்குத் தெரியும்!"

"என்ன உளறல் இது?" என்றான் அவன் மீண்டும்!

உன் தாய்தான் சொன்னாள் என்று சுந்தரவல்லியைக் கைகாட்டலாமா... அல்லது, அது அந்த நல்ல பெண்மணிக்கு இடும்பையாக முடியுமோ என்று, இந்துமுகி சற்றுத் தயங்கினாள்.

அதற்குள், முகத்தில் திகைப்புடன், "உன் கண்களில் இந்த வேதனை இல்லை என்றால், சும்மா சீண்டுகிறாய் என்று கூட எண்ணுவேன்! ஆனால், நீ தவிக்கிறாயே! உன்னை என்ன சொல்லி, நம்ப வைப்பேன்?... ஓ! இதைப் பார், இந்து! பார்த்த பிறகேனும், உனக்கு நம்பிக்கை வரும்!" என்று, பின் சீட்டில் கிடந்த தன் கைப்பெட்டியை சுகவனேசன் எடுத்தான்.

பெட்டியைத் திறந்து, அதனுள்ளிருந்து, அழகிய வேலைப்பாடமைந்த ஒரு சிறு வெல்வெட் நகைப்பெட்டியை எடுத்துத் திறந்தான்.

உள்ளிருந்தது, ஓர் அழகிய வைர மோதிரம்!

"உனக்காகத்தான் வாங்கி வைத்திருக்கிறேன், இந்து! நம் திருமண நிச்சயத்தன்று தர வேண்டும் என்று, ஏற்கனவே வாங்கி வைத்தது! வாங்கி வைத்து, இரண்டு மாதங்கள் ஆகின்றன!" என்று காட்டினான்.

அழகான மோதிரம்! வைரங்கள் பூரிப்புடன் மிளிர்ந்தன!

ஆனாலும் எப்படி நம்புவது?



இந்துமுகியின் கண்களில் குழப்பத்தைக் காணவும், "வேண்டுமானால், விரலில் அணிந்து பார்! அளவு சரியாக இருக்கும்! உன் மோதிரம் நழுவி விழுந்து, சரி செய்து கையில் மாட்டி விட்டேனே! அப்போதே, வாங்கி வைத்து விட்டேன்! வேண்டுமானால், பில் தேதி பார்க்கிறாயா? டிசைன் பிடிக்கவில்லை என்றால், மாற்றிக் கொள்ளலாம் என்று, பில்லையும் பத்திரப்படுத்தி வைத்தேன்!..." என்று, மோதிரப் பெட்டியினுள் அடங்கும்படியாகச் சிறு சதுரமாக மடித்து வைக்கப்பட்டிருந்த ரசீதை எடுத்துக் காட்டினான்.

மோதிரத்தைப் பொறுத்த வரையில், அவன் சொன்னது சரியே, மோதிரத்தை, பிரேஸ்லெட்டுடன் இணைத்து, அவள் கையில் மாட்டிய நாளை ஒட்டியதாகத்தான் இந்த மோதிரம் வாங்கப்பட்டிருந்தது!

"அன்றிலிருந்து, எனக்கு உன் நினைவுதான், இந்து! இந்த மோதிரத்தை வாங்கியதில் இருந்து, நான் ஒரு தரம்கூட, சஞ்சலப்பட்டது இல்லை...!" என்றான் அவன்.

எப்படியாவது, அவளது கலக்கத்தைத் தீர்த்துவிடும் வேகம் அவனுக்கு!

"ஆனால், ஆன்ட்டி சொன்னார்களே!" என்று மேலும் குழம்பினாள் இந்துமுகி!

ஒரு நூல் கிடைத்தது அவனுக்கு!

"அம்மாவா? என்ன சொன்னார்கள்? சொல்லும்மா! நம் வாழ்வு நேராக வேண்டும் என்று கேட்கிறேன்!" என்று விசாரித்து, விவரம் அறிந்து கொண்டான்.

அவள் சொல்லி முடித்ததும், சற்று நேரம், அவன் எதுவுமே பேசவில்லை!

பிறகு, அவள் கையைப் பற்றி, "இந்து, இப்போது நான் சொல்லப் போவதை, நீ முழுமையாக நம்ப வேண்டும்! எங்கள்

வீட்டுக் கதை முழுவதும், உனக்குத் தெரியும்! அன்றைக்கு நான் நம்பாதது, உன்னை அல்ல! மயூரனை! சிறு பிள்ளைத்தனம் அவனுக்கு, நிறையவே உண்டு! சற்று அலை பாய்கிற மனமும் உண்டு! கல்லூரியில் படிக்கும் போதே, இருமுறை, ஒவ்வொருத்தியைத் திருமணம் செய்து கொள்ளட்டுமா, என்று வந்திருக்கிறான்..." என்று சொல்லிக் கொண்டு போனவனை இந்துமுகி இடையிட்டாள்.

"வினுவிடம் மய்யூ கொண்டிருப்பது உண்மைக் காதல்! அவன் வேறு பெண்ணை நேசித்தான் என்றால், என்னால் நம்ப முடியவில்லையே!"

"நேசிக்கவில்லை! அந்த இரண்டு பெண்களின் மீதும் பரிதாபப்பட்டு, வாழ்வு கொடுக்கத் தயாராகிவிட்டான்! மூன்றாவதாக, வினுவிடம் மையல் என்றபோதே அது உண்மையான காதல் என்று, நான் என்னத்தைக் கண்டேன்? அன்றைக்கு, நமக்கும் காதல் என்றால், என்னவென்றே தெரியாத நிலை! இன்றானால், அவளைப் பற்றிப் பேசும்போது, அவனது குரல் மாறும் விதத்தை வைத்தே கண்டுகொள்ளத் தெரிகிறது..."

உதட்டைக் கடித்துக் கொண்டு அவள் பேசாதிருக்க, அவன் தொடர்ந்தான்.

"உன்னைப் பார்த்த பிறகு, பங்களூர் போவதை விட்டுவிட்டான்! அவள் அப்பாவானால், டெல்லியிலிருந்து, எனக்கு போன் போட்டு, வருத்தப்படுகிறார்! நான் என்ன நினைக்கட்டும், சொல்லு! அழகாக, ஒரு புதுப் பூவைக் கண்டதும், தம்பி மீண்டும் மாறிவிட்டானோ, என்று கவலையாகி விட்டது!

"அந்த மாதிரி ஆகிவிட்டால், விளைவு என்ன ஆகும், யோசித்துப் பார்! தொழில் அழிவது ஒரு பக்கம்! அந்தப் பெண்ணின் பாவம் அடுத்தது!



"அதற்காகத்தான், அவன் கண்ணில் படாத வண்ணம், உன்னைப் பிரித்து வைக்க வேண்டியிருந்தது!

அதுவே, ஒரு வெறி மாதிரி இருந்தது ஏன் என்று, நான் பிற்பாடு யோசித்துத் தெரிந்து கொண்டேன்! ஆனால், அப்போது, உன்னுடன் பொழுதைக் கழிப்பது, மனதிற்கு உற்சாகத்தையும் தரவே, உன்னை, என் கூடவே கூட்டிக் கொண்டு அலைந்தேன்!

"அப்போதுதான், ஒரு நாள் அம்மா என்னிடம், இது பற்றிக் கேட்டார்கள். அப்போது எனக்கு ஒரு தனி வாழ்வு என்ற எண்ணமே, எனக்குக் கிடையாது! அதனால், அம்மாவிடம் விஷயத்தை, இப்படிச் சொன்னேன். ஆனால், அதற்குப் பிறகு, ஒரு சில நாட்களிலேயே, உனக்கு உன் பழைய மோதிரத்தைப் போட்டுவிட்டேன் பார்! பெரிய பல்டி! மனம் அப்படியே, உன்னிடம் சரணமடைந்து விட்டது. அன்றிலிருந்து, நான் மாறிவிட்டேன்! முதலில் இருந்தே, லேசுபாசாக இருந்ததுதான்! ஆனால், திரை விலகியது போல, எனக்குத் தெளிவானது, அப்போதுதான்."

அன்றைக்கு, சுகவனேசனின் திகைத்த தோற்றம், இந்துவின் மனக்கண் முன், புகைப்படமாய், அப்படியே தோன்றியது! தொடர்ந்த உரையாடல், திரைப்படமாய் ஓடிற்று, மனதோடு சேர்ந்து, முகமும் இளகிற்று!

சுகனின் குரல் தொடர்ந்து கேட்டது!

"ஆனால், அம்மா, அன்றைக்கு நான் சொன்னதையே நினைத்து வேதனைப் பட்டிருப்பார்கள் போல! உனக்கு நல்லது செய்வதாக எண்ணி, இந்த வேலை செய்து விட்டார்கள்! உன்னைத்தான், அவர்களுக்கு, ரொம்பப் பிடிக்குமே! அந்தப் பிடிப்பில், என்னைக் காயப் போட்டு விட்டார்கள்!" என்றான் அவன்!

"என் கண்மணி, உண்மை உணர்ந்திருப்பாய் என்று நம்புகிறேன்! வெறுத்து ஒதுக்கும் அளவுக்கு, என்மேல்

தப்பில்லையே! என்னை மணந்து கொள்வாய் அல்லவா?" என்று, கெஞ்சுதலாகக் கேட்டான்.

கொஞ்சுதலாகவும்!

ஓரக் கண்ணால், அவன் முகத்தைப் பார்த்தாள் இந்துமுகி!

"ம்ம்ம்... இந்த மோதிரம் மிகவும் அழகாக இருக்கிறதே! வை...ரம் வேறு! என்..ன விலை இருக்கும்?! விட்டு விட மனமே வரவில்லை! அதற்காக வேண்டுமானால், போனால் போகிறது என்று, உங்களைக் கல்யாணம் செய்து கொள்ளுகிறேன்! என்ன செய்வது? இந்த மோதிரத்தை அடைய வேறு வழியே, இல்லை போலிருக்கிறதே!" என்று, போலி வருத்தத்துடன் சொல்லிவிட்டு, கலீர் என்று சிரித்தாள் அவள்.

அவனது நகையொலியும், அவளது சிரிப்புடன் இணைந்து ஒலித்தது!